விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிரவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 தை 21 வியாழக்கிழமை (04.02.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 047

# தேசியக் கொடியை ஏற்றாமல் புலிக் கொடியா ஏற்றுவது?

## மகிந்தவை கடிந்து கொண்டார் ரணில்




(கொழும்பு)

சுதந்திர தினத்தின் போது தேசியக் கொடியை ஏற்ற வேண்டாம் என தேசிய தலைவர் ஒருவர் கூறுவார் என தாம் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை என கூறிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தேசியக் கொடியை ஏற்றாமல் விடுதலைப் புலிகளின் புலிக் கொடியையா ஏற்றுவது என கடிந்து கொண்டுள்ளார். (23-ம் பக்)

## யாழ்.நீதிமன்றில் ஹெகலிய ஆஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நீதிமன்றத்தில் அமைச்சரவையின் முன்னாள் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல, காணாமல் போனோர் தொடர்பிலான வழக்கு ஒன்றில் ஆஜாரானார்.

கடத்தப்பட்டு காணாமல் போனதாக முறையிடப்பட்டிருந்த குகன்

24ஆம் பக்கம் பார்க்க....

## விசாரணைக்கு பசில் ஆஜர்

(கொழும்பு)

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நிதி மோசடி விசாரணைப் பிரிவில் நேற்று ஆஜராகியுள்ளார்.

நிதி மோசடிகள் குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வாக்கு மூலம் ஒன்று அளிப்பதற்காக அவர் விசாரணைப் பிரிவில் ஆஜராகியுள்ளார்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவி

23ஆம் பக்கம் பார்க்க....

## 40 தூதுவர்கள் யாழ்.வருகை

(கொழும்பு)

இலங்கையில் தூதரகங்களை கொண்டிராத நாடுகளின் தூதுவர்களும் தூதுவராலய உயர்ஸ்தானிகர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் அடங்கிய 40 பேர் கொண்ட குழுவினர் நேற்றைய தினம் யாழ் மாவட்டத்துக்கு வருகை தந்திருந்தனர்.

இலங்கையின் இன்றைய 68 ஆவது சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொள்வதற்காக காலி மாவட்டத்துக்கு வருகை தந்திருந்த இவர்கள் வடமாகாணத்தின் தற்போதைய நிலைவரம் குறித்து அறிந்து கொளவதற்காக நேற்றைய தினம் யாழ் மாவட்டத்துக்கு வருகை தந்திருந்தனர்.

23ஆம் பக்கம் பார்க்க....

## மோ.சைக்கிளில் பாம்பு வித்தை!

### நால்வர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கே.கே.எஸ் வீதியில் வித்தை காட்டியவாறு மோட்டார் சைக்கிளில் பயணித்த மாணவர்கள் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த பிறிதொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில்

23ஆம் பக்கம் பார்க்க....

## மரண வீட்டில் கைகலப்பு!

### உறவினர்கள் நால்வர் படுகாயம்

(வற்றாப்பளை)

மரண வீட்டில் ஏற்பட்ட வாக்குவாதம் கைலப்பில் முடிந்ததில் 4 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் இடைக்காட்டுப் பகுதியில் நேற்று நடைபெற்ற குடும்பப்பெண் ஒருவரின் மரணச்சடங்கு ஒன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி மரணச் சடங்கில் பங்கு கொண்டிருந்த முள்ளியவளையைச் சேர்ந்த

23ஆம் பக்கம் பார்க்க....

## ஐக்கிய தேசிய முன்னணியுடன் ஜனநாயக கட்சி இணைவு!

### ரணில் - பொன்சேகா கூட்டணி உடன்பாடு



24ஆம் பக்கம் பார்க்க

## சுதந்திரதின நிகழ்வில் சம்பந்தன், சுமந்திரன்

(கொழும்பு)

இலங்கையின் 68ஆவது சுதந்திரதின விழா இன்று காலிமுகத்திடலில் ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்

23ஆம் பக்கம் பார்க்க....

## கொக்கிளாய் பௌத்த விகாரைக்கு மாற்றுக்காணி வழங்குவது தவறான முன்னுதாரணம் - விக்கி

(யாழ்ப்பாணம்)

கொக்கிளாய் பகுதியில் பௌத்த பிக்கு ஒருவர் விகாரை அமைப்பதற்காக தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணி ஒன்றை அபகரித்துள்ள நிலையில் அவருக்கு மாற்றுக் காணி வழங்க அதிகாரிகள் எடுத்த முடிவை வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கண்டித்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## மோட்.சைக்கிள் - கார் -ஹண்டர் விபத்து;

### இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார்சைக்கிள், கார், ஹண்டர் வாகனங்கள் விபத்துக்குள்ளானதில் இருவர்படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றிரவு 8.30 மணியவில் கே.கே.எஸ் வீதி தாவடிச்

23ஆம் பக்கம் பார்க்க....

## சிறுவர் விவகார அமைச்சின் செயலராக இமெல்டா நியமனம்

(யாழ்ப்பாணம்)


சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சின் செயலாளராக திருமதி இமெல்டா சுகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனத்துக்கு

23ஆம் பக்கம் பார்க்க....

## மோ.சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டியை மோதித் தள்ளியது தனியார் பேருந்து

### மூவர் படுகாயம்; வாகனங்கள் பாரிய சேதம்





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் இலங்கை போக்குவரத்துக்கு சொந்தமான பேருந்தை அதிவேகத்தில் கடந்து செல்ல முற்பட்ட தனியார் பயணிகள் பேருந்து ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சகரவண்டி ஆகியவற்றை மோதி தள்ளியதில் 5 வயது சிறுவன் உட்பட 3 பேர் படுகாயமடைந்துள்ளதுடன் வாகனங்களுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டுளளது.

குறித்த சம்பவம் நேற்றையதி

24ஆம் பக்கம் பார்க்க....

# மரண அறிவித்தல்கள்

## அமரர் திருமதி நிர்மலகுமாரன் ஜெயமணி



மண்ணில் 20-05-1950 விண்ணில் 30-01-2016

அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் நிர்மலகுமாரன் ஜெயமணி (30.01.2016) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வெலிச்சோல் மிக்கேல்-எஸ்வேனிக்கம்மாள் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற மரியதாஸ்-அருளம்மாவின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நிர்மலகுமாரனின் பாசமிகு மனைவியும்,

சுஜிதா(லண்டன்), நீரோ (லண்டன்), றோய்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தர்ஷகுமார்(லண்டன்), அல்வின் ஸ்ரலின் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

ஷெரோனா, நிரோஷ்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ராஜேஸ்வரி, காலஞ்சென்ற திருச்செல்வம், வேதநாயகம், பிரான்சிஸ், அருள்தாஸ் ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற சுவக்கீன், யோசப்னா, சாந்தகுமாரி, நொயலின், யுவராஜ், லீலா ஆகியோரின் அன்பு மைத்துனியும், திலகவதி, அருள்ராஜாவின் உடன் பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (04.02.2016) வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அச்சுவேலி அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு திருவுடல் நல்லடக்கத்திற்காக வல்லை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பத்தமேனி,
அச்சுவேலி.

(3471)

தகவல் :
பிரான்சிஸ் (அண்ணா),
பிள்ளைகள்

## தியோகுப்பிள்ளை மரியதாஸ்
### (முன்னாள் உரிமையாளர் தாசன்ஸ் சோடா கொம்பனி)



உயரப்புலம் ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தியோகுப்பிள்ளை மரியதாஸ் (02.02.2016) செவ்வாய்க் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியோகுப்பிள்ளை -மாகிறேட் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஞானப் பிரகாசம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பெர்ணதேத் அவர்களின் பாசமிகு கணவரும்,

ஜெகதாசன்(ஜேர்மன்), யோகதாசன்(லண்டன்), அமலதாசன் (கனடா), அமலதேவி (உயரப்புலம் ஆனைக்கோட்டை), பிறேமதாசன் (சுவிஸ்), விமலதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

பிள்ளையம்மா, டோட்டி, அனற் ஐராங்கனி, அன்ரனிராசன், சாமினி, ராஜரட்ணம் ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,

ஜெயந்தினி, ஜெமிலா, ஜெனிற்றா, யூலியன், யுஸ்ரீனா, தியோறன், திபூஸன், தினூசன், ஸ்ரீஅனுஷிகா, ஷனுஜா, மேரிஅனோஜா, றோச்டனிஸ்ரன், நிறுஜா, டினுஷன், டினுஷா, ஜெசின்ராஜ், ஜெஸ்மன் ராஜ் ஆகியோரின் பாசமிகு பேரனும்,

காலஞ்சென்ற திரேசம்மா மற்றும் நேசம், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை மற்றும் யேசுதாசன், ஞானசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை வெள்ளிக்கிழமை (05-02-2016) பிற்பகல் 3.00 மணியளவில் உயரப்புலம் ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு திருவுடல் நல்லடக்கத்திற்காக காக்கைதீவு சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

(3491)

# மகிந்த பங்கேற்க மாட்டார்


## காணி விற்பனைக்கு

இராசாவின் தோட்டம்
யாழ்ப்பாணத்தில் 1 1/2 பரப்பு காணி
( நான்கு பக்கமும் மதில் )
விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0776130382


(3493)

## காணி விற்பனைக்கு

1. Farm School க்கு அருகில் (2பரப்பு)
2. கோண்டாவில் சந்திக்கு அருகில் (2பரப்பு)
3. உரும்பிராய் கோப்பாய் வீதியில் (5பரப்பு)

நேரடி விற்பனை மட்டும்
0777037058

(3492)

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்றைய தேசிய சுதந்திரதின நிகழ்வில் பங்கேற்க மாட்டார் என தெரிவிக்கப் படுகிறது.


சுதந்திரதின நிகழ்வில்பங்கேற்குமாறு தமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தாலும் தாம் நிகழ்வில் பங்கேற்கப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏனெனில் கூட்டு எதிர்க்கட்சியினர் நிகழ்வுகளை புறக்கணிக்கத் தீர்மானத்துள்ளதாகவும் இதனால், தாமும் நிகழ்வில் பங்கேற்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

### கலாநிதி முத்தையா கதிர்காமநாதன்



அகில இலங்கை
இந்து மாமன்றத்தின்
பொதுச் செயலாளர்
**கலாநிதி**
**முத்தையா கதிர்காமநாதன்**
அவர்கள் 02-02-2016 இல்
இறைபதம் எய்திய செய்தி
அறிந்தோம். அன்னாரின்
ஆத்மா தில்லைக்கூத்தன்
திருவடியில் நித்தியப் பேறு
பெறவும் அன்னாரின்
குடும்பத்தினர் உறவினர்கள்
மனச்சாந்தி அடையவும்
எம் பெருமானை
பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி!சாந்தி !!சாந்தி!!!

ஞானசிரோன்மணி
ஸ்ரீமத்கணேஷானந்த
மகாதேவ சுவாமிகள்
குருபீடாதிபதி
மகாதேவ ஆச்சிரமம்
ஜெயந்திநகர்
கிளிநொச்சி

(3487)

# அரசாங்க அறிவித்தல்

## மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்

### கேள்வி கோரல்

யாழ் மாவட்ட செயலகத்தால் பின்வரும் பொருட்களை 2016.03.01- 2016.08.31 வரை பெற்றுக் கொள்வதற்காக பொருத்தமான வழங்குநரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. இவை தொடர்பான மேலதிகமான தகவல்களையும், விண்ணப்ப படிவத்தினையும் செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் 2016.02.05 தொடக்கம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை 2016.02.18 ஆந் திகதி பி.ப 2.00 இற்கு முன்னர் கிடைக்க கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்கலின் விபரத்தினை குறிப்பிட்டு "தலைவர், பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்" என்னும் முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது நேரடியாக செயலக நிதிக்கிளையிலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் 2016.02.18ஆந் திகதி பி.ப 2.00 இற்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன் போது விண்ணப்பதாரரோ அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

- காகிதாதிகள், எழுதுபொருட்கள்
- நுகர்வுப் பொருட்கள்
- மின்இணைப்புப் பொருட்கள்
- உணவு/சிற்றுண்டி வகைகள்
- வாகன ரயர்கள்
- அலுவலக அடையாள அட்டை செய்தல்
- ரோணர் வகைகள்
- ஹாட்வெயர்பொருட்கள்
- இறப்பர் முத்திரைகள்
- குடிநீர்/பால்மா வகைகள்
- வாகன பற்றிகள்

முக்கிய குறிப்பு:

1. விண்ணப்ப படிவங்களைப் பெற்றுக் கொள்வதற்கு தங்களது வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்களுக்கு மட்டுமே தாங்கள் கூறுவிலைகள் வழங்குதல் வேண்டும்.

2. பெறுகைக்குழுவினரால் தெரிவு செய்யப்படும் வழங்குநர் கொள்வனவுக் கட்டளை கிடைக்கப்பெற்று 2 தினங்களுக்குள் பொருட்களை யாழ் மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் நேரடியாகவோ அல்லது முகவர் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். இதற்கு ஏற்ற வகையில் தங்களால் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

3. பொருட்களை வழங்குவதற்கு தெரிவு செய்யப்படும் வழங்குநர் வெளி மாவட்டத்தினைச் சேர்ந்தவராக இருப்பின், அந்நிறுவனத்திற்கு யாழ் மாவட்டத்தில் முகவரோ அன்றி விநியோகஸ்தரோ இருப்பது கட்டாயமானது. இதற்கான உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

நா.வேதநாயகன்,
மாவட்டச் செயலரும், அரசாங்க அதிபரும்,
யாழ் மாவட்டம்.

(C-3618)

## யாழ்.பல்கலை இந்துநாகரிகத்துறை நடத்தும்

# அனைத்துலகச் சைவமாநாடு மூன்று நாட்கள் நடைபெறும்




(யாழ்ப்பாணம்)

சிவாகமங்களும் திருமுறைகளும் புலப்படுத்தும் சைவப் பண்பாட்டுக் கூறுகளும் சமூக நல்லிணக்கச் சிந்தனைகளும் என்ற தொனிப் பொருளில் முதலாவது அனைத்துலகச் சைவ மாநாடு நடைபெறும் என பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை நடத்தும் முதலாவது அனைத்துலகச் சைவ மாநாடு-2016 தொடர்பில் பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது மேலும் கருத்து தெரிவித்த துணைவேந்தர் ,

இம்மாநாடு சிவாகமங்களும் திருமுறைகளும் புலப்படுத்தும் சைவப் பண்பாட்டுக் கூறுகளும் சமூக நல்லிணக்கச் சிந்தனைகளும் என்ற தொனிப்பொருளில் எதிர்வரும் பெப்ரவரி 12 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

அத்துடன் எமது பல்கலைக் கழக ஆரம்பிக்கப்பட்ட 1974 ஆம் ஆண்டு முதல் இந்து நாகரிகத் துறை இயங்கி வருகின்றது.

அந்த வகையில் உலகில் வேறெங்கும் காணப்படாதவாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலேயே இத் துறை கடந்த நான்கு தசாப்தங்களாக இயங்கி வருவதுடன் இத் துறையில் பயின்று பட்டம் பெற்றவர்கள் இலங்கையில் பல பாகங்களிலும் பிற நாடுகளிலும் பல்துறைகளில் சிறந்து விளங்குகின்றனர்.

இத்துறையின் பெரும்வள ர்ச்சிக்கு பேராசிரியர் அமரர் கா.கைலா சநாதக் குருக்கள் தொடக்கம் பல பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் அர்ப்பணிப்புகளுடன் பணி புரிந்தனர். அந்த அடிப்படையில் தான் தற்போது அனைத்துல சைவ மாநாட்டை நாம் நடத்துகின்றோம் என தெரிவித்தார்.

மேலும் இச் செய்தியாளர் மாநாடு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தலைமையில் நடைபெற்றதுடன் இந்துநாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் எம்.வேதநாதன் உட்பட அத்துறை சார்ந்த விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர்.

அத்துடன் இதில் கலந்து கொள்ளவுள்ள உள்நாட்டு ஆய்வாளர் வெளிநாட்டு ஆய்வாளர்கள் மாணவ ஆய்வாளர்களை வரவேற்பதாக ஏற்பாட்டார்கள் தெரிவித்துள்ளனர். (இ-4-9)

## பாதுகாப்பு காரணங்களுக்காக

# சிங்கள ராவய பிக்குகள் மஹர சிறைக்கு மாற்றம்

அண்மையில் ஹோமா கம நீதவான் நீதிமன்ற வளா கத்தில் குழப்பம் விளைவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட சிங்கள ராவய அமைப்பின் இரண்டு பௌத்த பிக்குகளும் மஹர சிறைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இடப் பற்றாக்குறை மற் றும் பாதுகாப்பு காரணங்க ளுக்காக இவ்வாறு மஹர சிறைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல் கந்தே சுதந்த தேரர் மற்றும் படல்கும்புரே ஆரிய சாந்த ஆகிய தேரர்களே கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து மஹர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ உள்ளிட்ட சில சந் தேக நபர்களும், ஹோமாகம நீதிமன்ற கலகத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

போதிய இடவசதி இல் லாத காரணத்தினால் குறித்த பௌத்த பிக்குகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்க முடியாத நிலைமை காணப்படுவதாக சிறைச்சாலைத் திணைக்களப் பேச்சாளர் துசார உபுல் தெனிய கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள கலகொட அத்தே ஞானசார தேரர் வெலிக்கடைச் சிறைச்சாலை வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து 145 பேர் திருப்பி அனுப்பி வைப்பு


இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப் பெண்ணாக சென்ற 145 பேர் மீண்டும் திருப்பி அனுப்பிவைக் கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் பல துன்பங்களை அனுபவித்து வந்ததை தொடரந்தே அவர்கள் அந்நாடுகளில உள்ள இலங்கை தூதரகத்தால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 6.20 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இலங்கை விமானச் சேவைக்கு சொந்தமான ul-266 என்ற விமானத்தில் சவுதியில் இருந்து 15 பெண்களும் காலை 6.35இற்கு வந்தடை ந்த இலங்கை விமானச் சேவைக்கு சொந்தமான ul-230 என்ற விமானத்தில் குவைத்திலிருந்து 100 பெண்களும் டுபாய் மற்றும் கட்டாரிலிருந்து 30 பெண்களும் வந்தடைந்துள்ளனர்.

நாட்டை வந்தடைந்தவர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புத் திணைக்களம் பணம் கொடுத்து அவர்களின் வீடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளது. (இ)

# ராணுவத்துக்கு காணியை தாரை வார்க்க முடியாது!



## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் ஒருமித்த மக்கள் குரல்

அள்ளி வழங்கும் நீலக் கடலையும் பொன் கொழிக்கும் சிவப்பு மண் விவசாயப் பூமியையும் விமான நிலைய அபிவிருத்திக்காக நாம் தாரை வார்க்க முடியாது என மயிலிட்டி மக்கள் தெரிவித்துள்ளனர். மேலும் மக்களின் இக்கருத்துக்கு அமைவாக இராணுவத்திற்கு மேற்படி காணியை வழங்க முடியாது என தெல்லிப்பழை பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று முன்தினம் பிரதேச செயலபத்தில் இணைத்தலைவர்களான தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பொது செயலாரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுபபினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் நடைபெற்றது. இதன் போதே மேற்படி முடிவு எட்டப்பட்டுள்ளது.

அபிவிருத்தியா? மீள்குடியேற்றமா? என்பதை மயிலிட்டி மக்களே முடிவு செய்ய வேண்டும் என்றும் அதற்கு மயிலிட்டி மக்களின் கருத்தறியும் கூட்டத்தை நடத்துமாறு பிரதமர் தெரிவித்திருப்பதாக இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

அள்ளி வழங்கும் நீலக் கடலையும் மீன்பிடித் துறைமுகத்தையும் பொன் கொழிக்கும் சிவப்பு மண் விவசாய நிலத்தையும் நாம் விமான நிலையத்துக்காக இழக்கத் தயார் இல்லை. காங்கேசன்துறை வர்த்தக துறைமுகத்துக்கும் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்துக்கும் இடைத்தூரம் 5 கிலோ மீற்றர்தான். 1983 ஆம் ஆண்டு போர்க்காலத்தில் கடல் பிரதேசம் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டு மீன்பிடி நிறுத்தப்பட்டது. இதனால் இன்றுவரை மயிலிட்டி மீனவர்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆழ்கடல் மீன்பிடி இவர்களின் தொழில். மயிலிட்டி, பலாலி, தையிட்டி பிரதேசங்கள் சிவப்பு மண் பூமி. இந்தப் பூமி விவசாயிகளுக்கு பொன்னாக உழைத்துக் கொடுத்தது. அந்தப் பிரதேசமும் 26 வருடங்களுக்கு மேலாக பாதுகாப்பு வலயத்துக்குள் சிக்கி மக்களை சாகடித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்த மண்ணில் வீடுகளையும் தொழிற்சாலைகளையும் ஆலயங்களையும் இடித்தழித்து இராணுவத்தினர் முழுச் சொத்திலும் விவசாயத்தை மேற்கொண்டனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள இராணுவத்தினருக்கு உணவுத் தேவையைப் பூர்த்தி செய் து வெளியிலும் மிகுதி விற்பனை செய்யப்படுகின்றது. இதனால்இராணுவ உணவுச் செலவு மீதமாக்கப்படு கின்றது. நிலச் சொந்தக்காரன் பசி பட்டினியோடு பிச்சையெடுக்கிறான். அந்நியன் அந்த நிலத்தில் பசியா றுகிறான். ஆடு, மாடு வளர்த்து பால் தேவையை, இறைச்சித் தேவையைப் பூர்த்தியாக்கி இராணுவம் வளமுடன் எமது நிலத்தில் வாழ்கின்றது. எமக்கு சொந்தமான துறைமுகமும் 12 கிலோ மீற்றர் நீளக்கடற்கரையும் எமது சிவந்த விவசாய மண்ணும் எமக்கு வேண்டும்.

விமான நிலையம் எமக்கு வேண்டாம். விமான நிலையத்துக்கு வடக்கு மேற்குப் பக்கமாக 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்படும். இப்படியான பாதிப்பை ஏற்படுத்தும் அந்த விமான நிலையம் தேவையா? பல்லாயிரக் கணக்கான மக்களின் வாழ்வாதாரம் தான் முக்கியம். மீனைக் கடலிலிருந்து வெளியே எடுத்துப் போட்டால் எப்படி துடிதுடித்துச் சாகுமோ அதுபோலவே எமது வாழ்வில் மயிலிட்டியை விட்டால் தான் முகாம்களை மூடமுடியும்.

மயிலிட்டியை விடாமல் முகாம்களை மூட முடியாது. விமான நிலையம் தேவையானால் யாழ். நகருக்கு அண்மையாகவுள்ள தீவகத்தில் சிங்கப்பூர் விமான நிலையம் மாதிரி அமைத்துக் கொள்ளலாம் என மயிலிட்டி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையிலேயே மக்களின் இந்த கருத்து தெல்லிப்பழை பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.


மேலும் வலிகாமம் வடக்கில் அண்மையில் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் முன்னைய காலங்களில் இயங்கிய வங்கிகள் மீண்டும் அந்த இடங்களில் இயங்கவேண்டும் என தெல்லிப்பழை பிரதேச செயலர் கே.ஸ்ரீமோகனன் தெரிவித்தார். இடப்பெயர்வுக்கு முன்னர் காங்கேசன்துறையில் இயங்கிய மக்கள் வங்கியின் கிளை தற்போது, யாழ்ப்பாணம் நவீன சந்தைப் பகுதியில் இயங்கி வருகின்றது.

அதேபோல் காங்கேசன் துறையில் இயங்கிய இலங்கை வங்கியின் கிளை தற்போது மல்லாகத்தில் இயங்கி வருகின்றது. மீள்குடியேறிய மக்களுக்கு வழங்கப்படும் அரச கொடுப்பனவுகள் இந்த வங்கிகள் ஊடாக கொடுக்கப்படுகின்றன. இந்த வங்கிகள் அந்தந்த இடங்களில் இயங்காமையால் அந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்றார்.

கீரிமலை இந்து மயானத்துக்கு சடலங்களை தகனம் செய்ய செல்லும் போது கடற்படையினரிடம் அனுமதி பெற்றுச் செல்ல வேண்டியுள்ளது. எனவே மயானத்துக்கு இலகுவாக சென்று வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கீரிமலைப் பகுதி மக்கள் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர். மயானத்துக்குச் செல்லும் வீதி கடற்படையினர் வசமுள்ளதால் அவர்களின் அனுமதி பெற்ற பின்னரே சடலங்களை மயானத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டியுள்ளதாக அவர்கள் கூறினர்.

அதற்குப் பதிலளித்த இணைத் தலைவர்களில் ஒருவரான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கடற்படையி னருடன் கதைத்து, மயானத்துக்கு இலகுவாகச் சென்று வருவதற்கு அனுமதி பெற்றுத் தருவதாக உறுதியளித்தார். மேலும் மேற்படி ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் பல விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. (இ-4)

# தெறிக்க விடுவாரா 'சிங்கம்' ரெய்னா




இந்தியன் பிரிமியர் லீன் தொடரில் பங்கேற்கும் குஜராத் லயன்ஸ் (சிங்கம்) அணியின் தலைவராக ரெய்னா நியமிக்கப்பட்டுள்ளார். இருபது - 20 போட்டி 'ஸ்பெஷலிஸ்டான' இவர் எதிரணிகளை தெறித்து ஓடச் செய்வதில் கெட்டிக்காரர்

ஐபிஎல் தொடரில் சூதாட்டத்தில் சிக்கிய சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்கு இரு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது. இதற்குப் பதில் புனே, ராஜ்கோட் அணிகள் புதிதாக சேர்க்கப்பட்டன.

இதில் ராஜ்கோட் அணி 'குஜராத் லயன்ஸ்' என அழைக்கப்படும். இந்த அணியில் நியூசிலாந்தின் பிரண்டன் மக்கலம், இந்தியாவின் ரெய்னா போன்றோர் இடம்பெற்றிருந்ததால், தலைமைப் பதவி தொடர்பாக 'சஸ்பென்ஸ்' நீடித்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் அணி நிர்வாகம் ரெய்னாவை (வயது 29) தலைவராக நியமித்து குழப்பங்களுக்கு முற்றுப் புள்ளி வைத்தது.

**முதலிடம்**

ஐபிஎல் தொடரில் சென்னை அணிக்காக விளையாடிய ரெய்னா, அதிக ஓட்டங்கள் (132 போட்டி, 3699 ஓட்.) குவித்தவர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.

இதுபற்றி ரெய்னா கூறுகையில், ஐபிஎல் தொடரில் கடந்த 8 ஆண்டுகளாக தோனி தலைமையில் சென்னை அணிக்காக விளையாடினேன். தற்போது குஜராத் லயன்ஸ் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதை கௌரவமாக கருதுகிறேன். தோனியுடன் பல இறுதிப் போட்டிகளில் விளையாடி இருந்தாலும் அவரது 'ஹெலிகொப்டர் ஷொட்டை' தடுப்பது கடினம். இனி புனேயின் தலைவர் தோனி ஆட்டமிழந்ததும் எங்கள் வீரர்கள் ஜடேஜா, டுவைன் பிராவோ நடனம் ஆடுவதை எண்ணிப் பார்த்தால் சிரிப்பாக வருகிறது' என்றார்.

**பயிற்சியாளர் ஹொட்ஜ்**

குஜராத் தலைமை பயிற்சியாளராக அவுஸ்திரேலிய முன்னாள் வீரர் பிராட் ஹொட்ஜ் (வயது 41) நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஐபிஎல் தொடரில் கொல்கத்தா (2008-10), கொச்சி (2011), ராஜஸ்தான் (2012) அணிகளில் விளையாடி உள்ளார்.


இவர் அனைத்துவிதமான இருபது - 20 போட்டியிலும், அதிக ஓட்டங்கள் (252 போட்டி, 6905 ஓட்.) குவித்த இரண்டாவது வீரராக உள்ளார்.

குஜராத் லயன்ஸ் அணி உரிமையாளர் கேசவ் பன்சால் கூறுகையில்,"குஜராத் மக்கள் கிரிக்கெட்டை மிகவும் ரசிக்கக் கூடியவர்கள். இதனால்தான் அணியின் பெயரை குஜராத் லயன்ஸ் என மாறறினோம். தலைவராக ரெய்னா நியமிக்கப்பட்டுள்ளார். இவரது அனுபவத்தின் மூலம் நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்றார்.



தென்னாபிரிக்க அணிக்கு எதிராக புளும்பொண்டீனில் நேற்று நடைபெற்ற முதல் ஒரு நாள் போட்டியில் அதிரடியாக விளையாடி சதம் அடித்த (76 பந். 11 பவுண்., 5 சிக்ஸ் 105 ஓட்.) இங்கிலாந்தின் ஜோஸ் பட்லரை படத்தில் காணலாம்.

# ஜேம்ஸ் போல்க்னர் விலகல்



அவுஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் ஜேம்ஸ் போல்க்னர் நியூசிலாந்து அணிக்கு எதிராக இடம்பெறவுள்ள எஞ்சிய இரு போட்டிகளில் இருந்து விலகியுள்ளார்.

நியூசிலாந்து - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட சப்பல் - ஹாட்லி தொடர் நேற்றுத் தொடங்கியது.

இத்தொடரின் முதல் போட்டி நேற்று ஆக்லாந்தில் நடைபெற்றது. இப்போட்டியில் சிறப்பாக செயற்பட்ட அவர் 36 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.


இந்த போட்டியின்போது தொடைப் பகுதியில் அவருக்கு காயம் ஏற்பட்டது.

இதனால் எஞ்சிய இரண்டு போட்டிகளில் இருந்து போல்க்னர் விலகியுள்ளார்.

அவருக்குப் பதிலாக 14 பேர் கொண்ட அணியில் விக்டோரியா சகலதுறை வீரர் மார்கஸ் ஸ்டாய்னிஸ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

போல்க்னர் தனது காயத்தை குணப்படுத்தும் விதமாக உடனடியாக நாடு திரும்புகிறார்.

## இரண்டு கைகளாலும் பந்துவீசிய இலங்கை வீரர்
# ஆச்சரியமடைந்த பார்வையாளர்கள்




ஜூனியர் உலகக்கிண்ண கிரிகெட் தொடரில் இலங்கை சுழல் பந்துவீச்சாளர் கமிந்து பார்வையாளர்களை கவர்ந்துள்ளார்.

இந்த தொடரின் கடைசி லீக் போட்டியில் பாகிஸ்தான் - இலங்கை அணிகள் நேற்று மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 48.4 ஓவர்களில் 212 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது. அவ்வணியின் ஹசன் மோஸின் அதிகபட்சமாக 86 ஓட்டங்கள் சேர்த்தார்.

பின்னர் 213 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை அணி களம் இறங்கியது. இலங்கை சார்பில் கமிந்து மெண்டிஸ் 68 ஓட்டங்களும், விக்கெட் காப்பாளர் விஷாத் டி சில்வா 46 ஓட்டங்களும் எடுத்தனர்.

இலங்கை அணி 46.4 ஓவர்களில 189 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது.

இதனால் பாகிஸ்தான் 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த போட்டியின்போது இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளரான கமிந்து மெண்டிஸ் இரண்டு கைகளாலும் பந்து வீசியுள்ளார்.

அதாவது வலது கை துடுப்பாட்ட வீரர்களுக்கு, இடது கைமூலமாகவும் இடது கை துடுப்பாட்ட வீரரகளுக்கு வலது கையாலும் பந்து வீசி பார்வையாளர்களை ஆச்சரியப்பட வைத்துள்ளார்.

## முழங்கை அறுவை சிகிச்சை
# ஒரு மாத ஓய்வில் ரோஜர் பெடரர்



டென்னிஸ் விளையாட்டில் முன்னணி வீரராக திகழ்ந்து வருபவர் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர்.

34 வயதாகும் இவர் இதுவரை 17 கிராண்ட்ஸ்லாம் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார். தற்போது அரையிறுதி, இறுதிப்போட்டி வரை முன்னேறும் அவரால் கிராண்ட்ஸ்லாம் பதக்கத்தை வெல்ல முடியாமல் தவிக்கிறார்.

கடந்த மாதம் நடைபெற்ற அவுஸ்திரேலிய ஓபனில் ஜோகோவிக்குக்கு எதிராக அரையிறுதியில் தோல்வியடைந்தார்.

இந்த போட்டிக்குப்பிறகு அவரது முழங்காலில் காயம் ஏற்பட்டது. இதற்காக தன்னுடைய சொந்த நாட்டில் அறுவை சிகிச்சை செய்துள்ளார்.

ஆகவே, ரோஜர் பெடரர் இன்னும் ஒரு மாதத்துக்கு டென்னிஸ் அரங்கில் களம் இறங்கமாட்டார் என்று கூறப்படுகிறது.

இந்த மாதம் நடைபெற இருக்கும் உலக டென்னிஸ் தொடர் மற்றும் டுபாய் சம்பியன்ஷிப் டென்னிஸில் இருந்து விலகியுள்ளார்.

# வேர்ஜியோ சுப்பர் கிங்ஸ் வெற்றி



ஓய்வுபெற்ற நட்சத்திரங்கள் பங்குபற்றும் எம்.சி.எல் கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெற்று வருகிறது. இத்தொடரின் 6ஆவது லீக் போட்டியில் வேர்ஜியோ சுப்பர்கிங்ஸ் - லிப்ரா லெஜேண்ட்ஸ் அணிகள் மோதின. இப்போட்டியில் சுப்பர் கிங்ஸ் அணி 5 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்றது. வெற்றியின் பின் அவ்வணி வீரர்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதை காணலாம்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு



இலங்கையின் ஜனாதிபதி
**அதிமேதகு மைத்திரிபால சிறிசேன**



இலங்கையின் பிரதம மந்திரி
**மாண்புமிகு ரணில் விக்ரமசிங்க**



மாண்புமிகு அமைச்சர்
**டி.எம். சுவாமிநாதன்**



மாண்புமிகு இராஜாங்க அமைச்சர்
**எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்**



செயலாளர்
**திரு. வே. சிவஞானசோதி**

# 68வது சுதந்திர தினத்தில்

ஜனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கும் பிரதம மந்திரி மாண்புமிகு ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கும் அபிவிருத்தியின் பெறுபேறுகளுடன் நாட்டை முன்னெடுத்துச்செல்ல வாழ்த்துத் தெரிவிக்கிறது

- மோதல்களினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு 65,000 நிரந்தர வீடுகளை அமைத்தல்.
- ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியீட்டத்தின்கீழ் மட்டக்களப்பு, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய 03 மாவட்டங்களில் 3,000 வீடுகளை அமைத்தல்.
- இலங்கை அரசாங்கத்தின் நிதியுதவியுடன் 8,000 வீடுகளை அமைத்தல்.
- 46,000 வீடுகளை அமைப்பதற்கான இந்திய அரசின் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான 44,000 வீட்டு அலகுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் 3,000 ஏக்கருக்கும் கூடுதலான அளவு காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், 2,329 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளன.
- புலம்பெயர்ந்த 490 அகதிகள், ஐ.நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தினதும் இலங்கை அரசாங்கத்தினதும் ஆதரவுடனும் வசதியளிப்புடனும் தமிழ்நாட்டிலிருந்து இலங்கை திரும்பியுள்ளனர்.
- சிறைச்சாலைகள் மறுசீரமைப்பின்கீழ் சிறைச்சாலைகளை சீர்திருத்த நிலையங்களாக மாற்றுவதற்கும் மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் அவர்களை நோக்குவதற்கும் சிறைச்சாலைகளில் நெரிசலைக் குறைப்பதற்கும் திறந்தவெளி சிறை முகாம்களை ஏற்படுத்துவதற்கும் நெரிசல்மிக்க நகரங்களிலிருந்து சிறைச்சாலைகளை இடமாற்றுவதற்கும் சிறைக் கைதிகளின் சுகாதாரத்தை முன்னேற்றுவதற்கும் ஏனைய வசதிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- இந்திய நன்கொடை உதவியின்கீழ் 1,200 மில்லியன் ரூபா செலவில் யாழ்ப்பாணத்தில் கலாசார நிலையத்தை அமைத்தல்.
- மோதலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 2015 ஆம் ஆண்டில் 270 நீர்வழங்கல் அலகுகளும் 2,194 துப்புரவேற்பாட்டு வசதி அலகுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- மோதலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 85 மத வழிபாட்டுத்தலங்கள் புதுப்பிப்பதுடன், சிறந்த பிரஜைகளை உருவாக்கும் நோக்கில் அறநெறிப் பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்கள் நாடுபூராவும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.
- 2015 டிசம்பர் இறுதி வரையில் ரெப்பியா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 113,544 பேருக்கு ஆதனங்கள், கைத்தொழில்கள், காயங்கள் மற்றும் இறப்புகளுக்காக இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை கரவெட்டி

## நெல்லியடி நவீன சந்தை புதிய கட்டடத்தொகுதியிலுள்ள கடைகள் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்-2016

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளினை உள்ளூராட்சித் திணைக்களத்தின் 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக ஒரே முறையில் செலுத்தக்கூடிய ஆகக் கூடிய கேள்வித் தொகையினை இச் சபைக்கு செலுத்துபவர்களுக்கு பங்குனி-2016 மாதம் தொடக்கம் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றது.

1.கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி :- 23/02/2016 பி.ப.3.00மணி

2.கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி :- 24/02/2016 ந.ப 12.00மணி

3.கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 24/02/2016 பி.ப. 2.00மணி

4.கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தபால் உறையானது அரக்கு முத்திரையிடப்படல் வேண்டும். இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும் கடை இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு உரிய காலத்திற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியில் இடுவதன் மூலமாகவோ சேர்க்கப்படல் வேண்டும்.

5.கேள்விப் படிவத்தினை தலைமை அலுவலகத்தில் தேசிய அடையாள அட்டையை காண்பித்து உரிய படிவக் கட்டணம், மீளளிக்கப்படும் வைப்புப் பணம் என்பவற்றைச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

6.எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ, மறுக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரமுண்டு.

7.விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 05 வருடங்களுக்கு ஒருமுறை வாடகைப்பணம் மீளாய்வு செய்யப்படும். இம் மாற்றத்திற்கேற்ப வாடகைக் கட்டணம் மாற்றம் அடையும்.

8.அரச நிறுவனங்களும், கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச் சங்கங்களும் இக் கேள்வி நடைமுறைக்கமைவாக விண்ணப்பிக்கலாம்.

9.ஏற்றுக்கொள்ளப்படும் சித்திரக் கேள்விக்காரர் தமது கேள்வித் தொகைக்கு மேலதிகமாக 11 சதவீதம் பெறுமதி சேர்வரியாகவும் (VAT) 02 சதவீதம் தேசத்தை கட்டியெழுப்புதல் வரியாகவும் (NBT) வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.இவ்வரிகள் அரசாங்க வர்த்தமானி அறிவித்தலுக்கேற்ப மாற்றமடையும்.

10.மாதாந்த வாடகைப் பணத்தை அடுத்து வரும் மாதம் 10 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் கட்டுப்பணத்தின் 10 சதவீதம் தண்டப்பணமாக செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களிற்கு வாடகைப் பணங்களைச் செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் மறு அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.

11.கடந்த காலங்களில் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்பட்டோர் அல்லது. இச் சபைக்கு குத்தகையாக, வாடகையாக , வரியாக நிலுவையில் உள்ளோர் கேள்விகள் கோர அருகதையற்றவராவார்.

12.குத்தகைக்கு பெற்ற கடையின் மின்சார இணைப்புக் கட்டணங்கள் மாதாந்தக் கட்டணங்கள் யாவும் குத்தகையாளரின் பொறுப்பில் அமையும். மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### கேள்வி அட்டவணை

| தொ.இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT,NBT வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர கட்டணம் (VAT,NBT வரிகள் நீங்கலாக) | மாத வாடகை (VAT,NBT வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| Ground Floor | | | | | |
| 9 | GF9 | 855000.00 | 8550.00 | 1,000.00 | 3750.00 |
| 10 | GF10 | 855000.00 | 8550.00 | 1,000.00 | 3750.00 |
| 13 | GF13 | 855000.00 | 8550.00 | 1,000.00 | 3750.00 |
| UPPER FLOOR | | | | | |
| 15 | UF15 | 969000.00 | 9690.00 | 1,000.00 | 4250.00 |
| 16 | UF16 | 969000.00 | 9690.00 | 1,000.00 | 4250.00 |
| 17 | UF17 | 969000.00 | 9690.00 | 1,000.00 | 4250.00 |
| 18 | UF18 | 741,000.00 | 7,410.00 | 1,000.00 | 3250.00 |
| 19 | UF19 | 741,000.00 | 7,410.00 | 1,000.00 | 3250.00 |
| 20 | UF20 | 741,000.00 | 7,410.00 | 1,000.00 | 3250.00 |
| 21 | UF21 | 741,000.00 | 7,410.00 | 1,000.00 | 3250.00 |
| 22 | UF22 | 684000.00 | 6840.00 | 1,000.00 | 3000.00 |
| 23 | UF23 | 456000.00 | 4560.00 | 1,000.00 | 2000.00 |
| 24 | UF24 | 456000.00 | 4560.00 | 1,000.00 | 2000.00 |
| 26 | UF26 | 684000.00 | 6840.00 | 1,000.00 | 3000.00 |
| 27 | UF27 | 684000.00 | 6840.00 | 1,000.00 | 3000.00 |

ச.ஜெகநாதன். செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி. 03/02/2016.

(சீ.3615)

# அரச சாட்சி குறித்து எதுவும் தெரியாது

## சஜின்வாஸ் தெரிவிப்பு

அரச சாட்சியாளர் பற்றிய தகவல்கள் குறித்து எதுவும் தெரியாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்தே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சஜின் வாஸ் குணவர்தன அரச தரப்பு சாட்சியாளராக வழக்குகளில் சாட்சியமளிப்பாளர் அண்மையில் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க வெளியிட்ட கருத்து தொடர்பில் ஊடகவியலாளர்கள் சஜின் வாஸிடம் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இந்தக் கேள்விகளுக்கு பதிலளித்த போது,

என்னை அரச சாட்சியாளராக வழக்கு விசாரணைகளில் பயன்படுத்த உள்ளதாக பல்வேறு தரப்பினர் தெரிவிக்கின்றனர். எனினும் இதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது.

அரச தரப்பு சாட்சியாளராக மாறியிருந்தால் இவ்வாறு வழக்குகளில் முன்னிலையாக நேரிட்டிருக்காது.

இலஞ்ச ஊழல் மோசடி தொடர்பிலான வழக்கு விசாரணை ஒன்றில் முன்னிலையாகவே நான் இன்று (நேற்று) நீதிமன்றம் வந்திருக்கின்றேன் என தெரிவித்துள்ளார்.

2012ஆம் ஆண்டுக்கான சொத்து பொறுப்பு விபரங்களை வெளியிடவில்லை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுதொடர்பிலான விசாரணைளுக்காக சஜின்வாஸ் குணவர்தன நீதிமன்றம் சென்றிருந்தார்.

இதேவேளை, சஜின்வாஸ் குணவர்தனவிற்கு அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவின் உத்தியோகத்தர்கள் பாதுகாப்பு வழங்கி வருவதாக கடந்த காலங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# மெய்வல்லுநர்போட்டி

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலய வருடாந்த இல்ல' மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி பி.கிரிதரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் கோட்டக் கல்வி அலுவலர் சு.சண்முககுலகுமரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி சி.சயந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ)

# இராசி பலன்

04.02.2016

(தை 21, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு,
ஏகாதசி முன்னிரவு 11.47 மணிவரை
கேட்டை மாலை 5.41 மணிவரை
சுபநேரம் 8.05-9.35 மணிவரை
இராகுகாலம் 2.05-3.35 மணிவரை
ஏகாதசி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை | | |
| சூரி | சந்திராஷ்டமம் கார்த்திகை, ரோகினி மாலை 4.52 இற்கு தனு-சந் | | ராகு |
| புத சுக் | சனி சந் | செவ் | குரு |

**மேடம்:** கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, வேலைச் சுமை கூடும் நாள், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படலாம்.

**இடபம்:** விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள்.

**மிதுனம்:** வீட்டை பராமரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், கலகலப்பான செய்திகள் வந்து சேரும்.

**கடகம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, உறவினர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், வியாபார விருத்தியுண்டு.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களை காண வேண்டிய நாள், நண்பர்களின் சந்திப்பால் சுப தகவல்கள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள், பயணங்கள் கைகூடும்.

**துலாம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் நன்மை தரும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், உங்களின் வார்த்தைகளால் பிறரை கவர்வீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தினர் உங்களின் குணமறிந்து நடந்து கொள்வர், சந்தித்தவர்களால் சந்தோசங்கள் அதிகரிக்கலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.


**தனுசு:** திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், ஆழ்ந்த சிந்தனையுண்டு.

**மகரம்:** தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**மீனம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நிறைவேறும், அந்நியர்களின் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

# தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்ட முன்வரைபு



**தமிழ் மக்கள் பேரவையின் நிபுணர் குழுவால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வுத் திட்ட முன்வரைபு 31.01.2016 அன்று பிற்பகல் 3 மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வெளியிடப்பட்டது.**

தொடர்ச்சி....

6.2 ஒவ்வொரு சட்டமூலமும் ஜனாதிபதியினால் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்பாக கீழவை மற்றும் செனட் அவை ஆகிய இரண்டு சபைகளினாலும் நிறைவேற்றப்பட வேண்டும். ஏதேனும் சட்டமூலமானது செனட் அவையினால் நிராகரிக்கப்படும் பட்சத்தில் அது சட்டமாக ஆக்கப்பட முடியாது.

6.3 ஒரு சட்டமூலமானது தமது மாநிலத்தின் நலன்களுக்கு குறிப்பாக குந்தகமாக அமைவதாக வடக்கு-கிழக்கு மாநிலத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பான்மையான உறுப்பினர்கள் கருதுமிடத்து குறித்த சட்ட மூலமானது அதன் இரண்டாவது வாசிப்புக்காக விடப்படலாகாது. ஒருசட்டமூலமானது வடக்கு கிழக்கு மாநிலத்தின் நலன்களுக்கு குறிப்பாக குந்தகமாக அமைகின்றதா என்பது தொடர்பான விடயமானது பிணக்கிற்குட்படுத்தப்படும் போது, அது தொடர்பிலான விவாதமொன்றைத் தொடர்ந்து அவைத்தலைவர் குறித்த விடயம்தொடர்பில்முடிவெடுக்க முடியும். அவைத்தலைவரின் குறித்த தீர்மானமானது அரசியலமைப்பு நீதிமன்றினால் மீளாய்வுக்குட்படுத்தப்பட முடியும்.

## 7. மாநில ஆளுநர்

7.1 முதலமைச்சரின் ஆலோசனையின் மீது ஆளுநரானவர் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட வேண்டும்.

7.2 ஆளுநரின் பதவியானது அவசர கால நிலை பிரகடனப்படுத்தப்பட்ட சந்தர்ப்பம்தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் சம்பிரதாய பூர்வமானதாகும்.

7.3 மாநில சட்டவாக்க சபையின் பெரும்பான்மை உறுப்பினர்களின், நம்பிக்கையைப் பெறும் உறுப்பினரை முதலமைச்சராக ஆளுநர் நியமிக்க வேண்டும். முதலமைச்சர் மாநில அமைச்சர்களை நியமிக்க வேண்டும்.

## 8. மத்தியினதும் மாநிலத்தினதும் அதிகாரங்கள்

8.1. அரசாங்க அதிகாரங்கள் மத்திக்கும் மாநிலத்திற்கும் இடையே பகிரப்படும்.

8.2. சமஷ்டி நிரல் என அழைக்கப்படும் நிரல் மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களை கொண்டமையும்.

8.3. சமஷ்டி நிரலில் இல்லாத அனைத்து அதிகாரங்களும் மாநில நிரலில் நிரல் படுத்தப்பட்டுள்ள அதிகாரங்கள் உள்ளடங்கலாக, மாநிலத்தின் அதிகாரங்கள் ஆகும்.

8.4. மத்தியும் மாநிலமும் தத்தமது அதிகார தத்துவங்களில் மீயுயர்வானவை.

குறிப்பு:

கீழே காணப்படும் மாநில நிரல் வடக்கு கிழக்கிற்கு இருக்க வேண்டிய அதிகாரங்கள் எவை என்ற பார்வையில் முன்வைக்கப்படுகின்றது. பல்-கூறு சமஷ்டி ஏற்பாட்டிற்கு நாம் எதிரானவர்கள் அல்லர் என்றாலும் எல்லா மாநிலங்களுக்கும் ஒரே அளவான அதிகாரங்கள் இருக்க வேண்டுமா (சமச்சீரான சமஷ்டி) என்பது தொடர்பில் நாம் இங்கு கருத்துக் கூறவில்லை. வடக்கு கிழக்கு மாநிலத்தைப் போலல்லாது இலங்கையின் வேறெந்தப் பாகமும் சுயாட்சியைக் கோரவில்லை. மேலும் நாங்கள் இலங்கையின் மற்றைய மாநிலங்கள் குறைந்த அதிகாரங்களை வைத்திருப்பது போலல்லாது வடக்குக் கிழக்கு மாநிலமானது சமச்சீரற்ற அதிகூடிய அதிகாரங்களை அனுபவிப்பதை அங்கீகரிக்கின்றோம்.

## மாநில நிரல்

1. காணி
2. சுகாதாரமும் சுதேச மருத்துவமும்
3. உயர்கல்வி, பல்கலைக்கழகங்கள் உள்ளடங்கலாக கல்வியும் கல்விச் சேவைகளும்
4. கமத்தொழிலும் கமநல சேவைகளும்
5. நீர்ப்பாசனம்
6. விலங்கு வேளாண்மை
7. கண்டமேடு மற்றும் பொருளாதார வலயம் உள்ளிட்ட வரலாற்று நீர்ப்பரப்புகள் மற்றும் ஆட்புல நீர்ப்பரப்புக்கள் உள்ளடங்கலான கரையோர வலயங்களுடன் தொடர்புபட்ட மீன்பிடித்தொழில், கனிப்பொருட்கள், சுரங்கங்கள் உள்ளடங்கலான பொருளாதார வளங்கள்.
8. மாநிலத்திற்குள்ளான வனங்கள், சரணாலயங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு
9. கைத்தொழில்களும் கைத்தொழில் அபிவிருத்தியும்
10. எரிபொருள், மின்சாரம் மற்றும் மின்வலு வழங்கல்
11. சுரங்கங்களும் கனிய வளங்களும் குவாரிகளும்
12. போக்குவரத்து
13. மாநில கணக்கெடுப்பும் புள்ளி விபரவியலும்
14. விமான நிலையங்களும் துறைமுகங்களும் இறங்குதுறைகளும்
15. ஆறுகளும் நீர்நிலைகளும்
16. வீதிகளும் பெருந்தெருக்களும்
17. வீடமைப்பும் நிர்மாணத்துறையும்
18. நகர திட்டமிடலும் அபிவிருத்தியும்
19. கிராமிய அபிவிருத்தி
20. உள்ளூராட்சி மன்றங்கள்
21. கூட்டுறவுகள்
22. மாநிலத்திற்குள்ளான உணவு விநியோகமும் பகிர்ந்தளிப்பும்
23. சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு
24. பொது ஆற்றுகைகள் உள்ளடங்கலாக கலாசாரச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்
25. தொலைக்காட்சி உள்ளடங்கலான ஒலிபரப்பும் ஊடகமும்
26. நிவாரணங்கள், புனர்வாழ்வு, புனர்நிர்மாணம்
27. சமூகப் பாதுகாப்பு
28. காவல்துறையும் சட்டமும் ஒழுங்கும் (மீன்பிடி உரித்துகளையும் மீட்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கும் கரையோர வளங்களை பாதுகாக்கும் பொருட்டும் காவல்துறை ஒரு "கரையோரப் பாதுகாப்பு" பிரிவொன்றை ஸ்தாபிக்க முடியும்)
29. சீர்திருத்தும் நிலையங்கள் மற்றும் சிறுவர் நன்னடத்தை நிறுவனங்களின் நிர்வாகம்
30. மாநில பொதுச்சேவைகள்
31. விளையாட்டுத் துறை
32. மாநிலத்திற்குள்ளான கூட்டிணைக்கப்படாத சங்கங்களையும் மன்றங்களையும் ஒழுங்குபடுத்தல்
33. மாநிலத்தின் கடன்
34. உள்நாட்டு மற்றும் சர்வதேச கடன் மற்றும் உதவி பெறுதல் (சர்வதேச கடன் பெறுதலின் போது குறித்த வரையறையை மீறும் பட்சத்தில் மத்தியின் ஒருங்கியைவு தேவைப்படும்)
35. மாநிலத்துக்கான வெளிநாட்டு நேரடி முதலீடு, சர்வதேச நன்கொடைகள், அபிவிருத்திக்கான உதவிகளை ஒழுங்குபடுத்தலும் ஊக்குவித்தலும்.
36. மாநில நிதி மற்றும் கடன் நிறுவனங்கள்
37. மதுவரி தீர்வைகள்
38. பிராந்தியத்தின் மொத்த மற்றும் சில்லறை விற்பனைகள் மீதான விற்பனைப் புரள்வு வரிகள்/பெறுமதி சேர்க்கப்பட்ட வரிகள்.
39. தேசிய லொத்தர்கள் தவிர்ந்த பந்தய வரிகளும், பரிசுப்போட்டிகளும், லொத்தர்களும் மீதானவரிகள்.
40. மோட்டார் வாகன உரிமம் மற்றும் கட்டணங்கள்.
41. மோட்டார் வாகன மற்றும் ஆதன விற்பனைகள் மீதான முத்திரைக் கட்டணம்.
42. நீதிமன்றங்களினால அறவிடப்படும் தண்டப் பணங்கள்
43. நீதிமன்றங்களுக்கு சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் மீதான முத்திரைக் கட்டணம் உள்ளடங்கலாக நீதிமன்ற கட்டணங்கள்.
44. இறைவரியினை மதிப்பிடுதல், அறவிடுதல் உள்ளடங்கலான காணி வரி அறவீடு மற்றும் வரி அறவிடும் நோக்கங்களுக்காக காணி பதிவேடுகளை பேணுதலும்.
45. கனிப்பொருள் உரிமைகள் மீதானவரிகள்.
46. மாநில கணக்காய்வு
47. மாநில நிரலில் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் சட்டங்களை ஆக்குதல்.
48. மாநில நிரலில் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலான தண்டப்பணம்.
49. மாநில மட்டத்திலான திட்டமிடல்
50. மாநிலத்துக்கான சட்டசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள்
51. தொல்பொருள் மற்றும் பாரம்பரிய அமைவிடங்கள, நூதனசாலைகள், சுவடிகள்
52. மாநிலத்துக்குள்ளான நிர்வாகம்
53. மாநிலத்துக்குள்ளான நீதிநிர்வாகம்
54. மாநில திரட்டு நிதியம்.

## மத்திய நிரல்

1. பாதுகாப்பு, மத்திய பந்தோபஸ்து மற்றும் ஆயுதப்படைகள்.
2. மத்திய புலனாய்வுத் திணைக்களம் சமஷ்டி நிரலுக்குட்பட்ட எல்லா விடயங்கள் தொடர்பிலான காவல்துறை அதிகாரங்கள்.
3. குடிவரவு, குடியகல்வு
4. வெளி விவகாரங்கள்
5. தேசிய குடிசன மதிப்பும் புள்ளி விபரமும்
6. நாணயமும் வெளிநாட்டு நாணயமாற்றும், சர்வதேச பொருளாதாரத் தொடர்புகள் நாணயக் கொள்கை.
7. மத்திய அரசுக்கான பொதுக்கடன்கள்
8. மத்திய அரசுக்கான வெளிநாட்டுக் கடன்கள்
9. வங்கி மற்றும் நிதியில் நிறுவனங்களின் ஒழுங்குபடுத்தல்கள்.
10. காப்புறுதி
11. பங்குப் பரிவர்த்தனையும் எதிர்காலச் சந்தைவாய்ப்பும்
12. மத்திய அரசின் கணக்காய்வு
13. தனியாட்களினதும் கம்பனிகளினதும் கூட்டுத்தாபனங்களினதும் வருமானம் மூலதனம் செல்வம் என்பவற்றின் மீதான வரிகள்.
14. மாநில வரிகள் தவிர்ந்த மத்திய அரசுக்கான மொத்த விற்பனை வரவு வரிகளும்/பெறுமதி சேர்க்கப்பட்டவரிகளும்
15. இறக்குமதி ஏற்றுமதி தீர்வைகள் உள்ளிட்ட சுங்கத் தீர்வைகள்
16. மத்திய அரசினால் அல்லது மத்திய திரட்டு நிதியினால் செலுத்தப்படக் கூடிய ஓய்வூதியம்
17. அணுசக்தி
18. தேசிய மின் உற்பத்தி பராமரிப்பும் முகாமைத்துவமும்
19. சர்வதேச போக்குவரத்து மத்திய அரசின் போக்குவரத்து மற்றும் மத்திய அரசின் புகையிரதப் போக்குவரத்தும்
20. விமானப் போக்குவரத்து
21. மத்திய அரசின் அதிவேக நெடுஞ்சாலைகள்
22. கடலோர வலயம் தொடர்பிலான கடலோரப் பாதுகாப்பு வரலாற்று நீர்ப்பரப்புகள், ஆட்புல நீர்ப்பரப்புகள் உள்ளடங்கலாக பொருளாதார வலயங்கள் கண்ட மேடுகள் உள்ளடங்கலாக, சர்வதேச கப்பற்றொழிலும் கப்பல் போக்குவரத்தும்
23. மத்திய அரசுக்கான தேர்தல்கள்
24. தபால் மற்றும் தொலைத்தொடர்புகள்
25. மத்திய அரசின் பொதுச்சேவைகள் மற்றும் மத்திய அரசின் பொதுச் சேவைகள் ஆணைக்குழு
26. மருந்துகள், நஞ்சுகள் மற்றும் போதைவஸ்துகள்

(தொடரும்)

# பயணிகளால் ஸ்தம்பதித்தது ரயில் நிலையம்



சீனாவில் ஒரே நேரத்தில் ஒரு இலட்சம் பயணிகள் ஒன்றாக நேற்று குவிந்ததால் செய்வதறியாது அங்குள்ள முக்கிய ரயில் நிலையம் ஸ்தம்பித்துள்ளது. சீனாவின் குவான்ஷோ ரயில் நிலையத்தின் வெளியேதான் ஒரு இலட்சம் பயணிகள் ஒன்றாக குவிந்து ஸ்தம்பிக்க வைத்தனர். இலட்சம் பயணிகள் ஒன்றாக குவிந்ததால் வழக்கமாக செல்லும் ரயில்கள் அனைத்தும் மிகவும் தாமதமாக அங்கிருந்து சென்றுள்ளன.

சீனா புத்தாண்டை கொண்டாடும் பொருட்டு நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள சீனர்கள் தங்களது சொந்த கிராமங்களுக்கு படையெடுத்துள்ளனர்.

குவான்ஷோ ரயில் நிலையத்தில் குவிந்த பயணிகளை கட்டுப்படுத்தவே ஏராளமான பொலிஸாரையும் குவித்துள்ளனர்.

கொட்டும் பனியையும் பொருட்படுத்தாமல் பயணிகள் அலை மோதியதால் குவான்ஷோ ரயில் நிலையத்தில் இருந்து 32 ரயில்கள் தாமதமாக புறப்பட்டுள்ளன. பெரும்பாலான பயணிகள் 10 மணி நேரத்திற்கும் மேலாக தங்கள் பகுதிக்கு செல் லும் ரயிலுக்காக காத்திருந்துள்ளனர். வசந்த விழா என சீன மக்களால் கொண்டாடப்படும் இந்த புத்தாண்டு இந்த மாதம் 8 ஆம் திகதி தொடங்கி ஒரு மாதம் வரை நீடிக்கும்.

இந்த விழாவினை முன்னிட்டு ஜனவரி இறுதி வாரம் தொடங்கி மார்ச் 3 ஆம் திகதி வரை ஒட்டுமொத்தமாக 2.91 பில்லியன் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபட வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# உச்சக்கட்டத்தில் உள்நாட்டுப் போர்!



## நாளுக்கு நாள் அதிகரிக்கும் பலி எண்ணிக்கை

(சனா)

**ஏமனில் அரசு படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் இடம்பெற்று வரும் உள்நாட்டுப் போரில் இதுவரை 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ள அதேவேளை நேற்று முன்தினம் இடம்பெற்ற பெரும் மோதலில் 30 பொதுமக்கள் பலியாகியுள்ளனர்.**



ஏமன் நாட்டில் பதவி இறக்கம் செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் தற்போதைய ஜனாதிபதி அப்த் ரப்போ மன்சூர் ஹாதியின் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 2014-ம் ஆண்டு இந்த கிளர்ச்சியானது ஆயுதப் போராட்டமாக மாறியது.

ஏமன் தலைநகரான சனா உள்ளிட்ட நாட்டின் சில பகுதிகளை கைப்பற்றி தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் கிளர்ச்சியாளர்களை ஒடுக்க சவுதி அரேபியா அரசின் உதவியை ஜனாதிபதி மன்சூர் ஹாதி நாடினார். இதையடுத்து, கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து சவுதி அரேபியா தலைமை யிலான கூட்டு விமானப்படைகள் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளின்மீது குண்டு மழை பொழிந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த தாக்குதல்களில் இதுவரை சுமார் 6 ஆயிரம் பேர் பலியாகியு ள்ளனர். அரசுப் படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் நடைபெற்று வரும் உள்நாட்டு சண்டையால் அந்நாட்டில் வசிக்கும் பெரும்பாலான மக்கள் குடிநீர், உணவு, மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகள் கிடைக்காமல் திண்டாடி வருகின்றனர்.

இந்நிலையில், தலைநகர் சனாவில் இருந்து சுமார் 65 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள டாயிஸ் நகரில் நேற்று முன் தினம் இருதரப்பினருக்கும் இடையே நடந்த மோதலில் அப் பாவி பொதுமக்கள் உட்பட 30 பேர் பலியாகினர். நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயமடைந்தனர் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ)

# மாயமான மலேசிய விமானத்தை தேடும் பணியில் சீனக்கப்பல்




இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், காணாமல் போன மலேசிய விமானத்தை தேடும் பணிக்காக அதி நவீன கப்பல் ஒன்றை அனுப்பியிருப்பதாக சீன அரசு அறிவித்துள்ளது.

'டாங்க் ஹை ஜியு 101' என்ற இந்தக் கப்பலில் அதிநவீன சோனார் ஒலி உணர்வு இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. எதிர்வரும் 10ஆம் திகதி முதல் இந்தக் கப்பல் தென் இந்தியப் பெருங்கடலில் காணாமல் போன மலேசிய விமானத்தை தேடும் பணியை தொடங்கும் என்று சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தியப் பெருங்கடலின் கடற்படுகையின் கரடுமுரடான பகுதிகளில், ஆய்வாளர்கள் நெருங்கிச் சென்று நுணுக்கமாக ஆய்வு செய்ய இந்தக் கப்பல் உதவும்.

மலேசியன்ஏர்லைன்ஸ்விமானமான எம்எச் 370 கடந்த 2014ம்ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி 239 பேருடன் மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து சீன தலைநகர் பீஜிங்கிற்கு சென்றது. விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் மாயமானது.

விமானம் தெற்கு இந்திய பெருங்கடல் பகுதியில் விழுந்து மூழ்கி விட்டதாகவும், அதில் இருந்த 4 இந்தியர்கள் உட்பட அனைவரும் இறந்து விட்டதாகவும் மலேசிய அரசு அறிவித்தது. எனினும் இது வரை, அந்த விமானத்தின் சிதிலங்களில் ஒரேயொரு பகுதி மட்டும் பிரெஞ்சுத் தீவான ரீயூனியன் கடற்பகுதியில் கண்டெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ)

## அமெரிக்க வான்வழித் தாக்குதலால்

# தரைமட்டமான ஐ.எஸ் வானொலி நிலையம்

ஆப்கானிஸ்தானில் ஐ.எஸ் தீவிரவாத அமைப்பினர் இயக்கி வந்த வானொலி நிலையம் அமெரிக்க வான்வழித் தாக்குதலில் தரை மட்டமாக்கப்பட்டது.

இது குறித்து அமெரிக்க இராணுவ அதிகாரிகள் நேற்று முன்தினம் அளித்துள்ள பேட்டியில், பாகிஸ்தான் எல்லையை ஒட்டிய ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில் ஐ.எஸ் தீவிரவாதிகள் "கலீபாவின் குரல்" (Voice of the Caliphate) என்ற வானொலி நிலையத்தை இயக்கி வந்தனர். அமெரிக்க போர் விமானங்கள் அங்கு, கடந்த திங்கள் அன்று நடத்திய தாக்குதலில் அந்த வானொலி நிலையம் அழிக்கப்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

நங்கர்ஹார் மாகாணத்தில் இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டதாக ஆப்கானுக்கான அமெரிக்க - நேட்டோ கூட்டுப்படை செய்தித் தொடர்பாளர் மைக் லாஹார்ன் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் கடந்த ஆண்டு முதல் தலைதூக்கி வரும் ஐ.எஸ் அமைப்பில் புதிய ஆட்களைச் சேர்ப்பதற்காக, நங்கர்ஹார் பகுதியில் இருந்த வானொலி நிலையத்தின் மூலமாக ஐ.எஸ்.தீவிரவாதிகள் வானொலியில் சட்டவிரோதப் பிரசாரம் மேற்கொண்டு வந்தது குறிப்பிடத்தக்கது. (இ)


# பாதுகாப்பான புகையிரத கடவை கோரி
# கிளிநொச்சியில் நேற்று மக்கள் திரள்வு

## 10 தினங்களுக்குள் அமைத்துத் தருவதாக பொதுமக்களுக்கு உறுதியளிப்பு

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள புகையிரதக் கடவை பாதுகாப்பற்றது எனத் தெரிவித்து அதனை மூடுவதற்கு அதிகாரிகள் முயன்ற பொழுது அவ்விடத்தில் ஒன்று கூடிய நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் பாதுகாப்பான புகையிரதக் கடவையை அமைத்துத் தருமாறு வலியுறுத்தினர்.**





இச்சம்பவம் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம் பெற்றது.

கிளிநொச்சி உதயநகர் துர்க்கை அம்மன் கோயிலுக்கு அருகிலுள்ள புகையிரதக் கடவையூடாக உதயநகர், அம்பாள்குளம், ஆனந்த நகர் போன்ற கிராம மக்கள் நாளாந்தம் பயணித்து வருகின்றனர்.

குறிப்பாக இக்கடவையூடாக ஏ-9 வீதியைக் கடந்து கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை, பொதுச்சந்தை, பாடசாலை போன்ற இடங்களுக்கு பெருமளவானோர் செல்கின்றனர்.

இந்த நிலையில் கடந்த 28 ஆம் திகதி கிளிநொச்சி புகையிரத நிலையத்திற்கு மேற்படி கடவையை மூடுமாறு அநுராதபுரம் புகையிரதக் கடவை பிரதான அலுவலகத்திலிருந்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க நேற்றுக்காலை அங்கு சென்ற 10 இற்கு மேற்பட்ட புகையிரத வீதிப்பணியாளர்கள் மேற்படி கடவை மூலம் பயணிப்பதை தடுக்க முயன்றனர்.

இதனால் அங்கு ஒன்று திரண்ட பொதுமக்கள் அதனைத் தடுத்துள்ளனர்.

இந்நிலையில் அங்கு சென்ற புகையிரதப் பொலிஸார் பொதுமக்களிடம் விடயத்தைக் கேட்டறிந்ததுடன் மேற்படி புகையிரதக் கடவையை மூடாது 10 தினங்களுக்குள் அதனைப் பாதுகாப்பான புகையிரதக் கடவையாக மாற்றித்தருவதாக உறுதியளித்துச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து பொது மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றுள்ளனர். (2-3-271-15)

## பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி மாவட்ட தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் மாவட்ட காரியாலயத்தில் இலத்திரனியல் போதனாசிரியர், தன்னியக்க வாகனத்திருத்துநர் போதனாசிரியர், பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட நைற்றா முகாமையாளர் ஏபி. அல்பிரட் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இலத்திரனியல் போதனாசிரியருக்கான தகைமைகளாக இலத்திரனியல் துறையில் NVQ-04 சான்றிதழ், அத்துடன் துறை சார்ந்த ரீதியில் 2வருட அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

தன்னியக்கவாகனத்திருத்துநர் போதனாசிரியருக்கான தகைமைகளாக தன்னியக்க வாகனத்திருத்துநர் துறையில் NVQ-04 சான்றிதழ் அத்துடன் துறை சார்ந்த ரீதியில் 2 வருட அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

பாதுகாப்பு உத்தியோகத்தருக்கான தகைமைகளாக, க.பொ.த.சாதாரண தரம், அத்துடன் துறைசார்ந்த ரீதியில் ஒரு வருடம் அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும்.

இதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாகும். விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவத்தைபூர்த்திசெய்து மாவட்டமுகாமையாளர், தேசிய பயிலுநர்கைத்தொழிற்பயிற்சி அதிகார சபை, ஏ-9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சிஎனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2-3-15)




## சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களுக்கு உள்ளக இடமாற்ற கடிதம் வழங்கப்பட்டுள்ளது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களுக்கு நேற்று முன்தினம்கிளிநொச்சிநிலைய பொறுப்பு அலுவலரினால் உள்ளக இடமாற்றக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி கரைச்சிப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய மு.முத்துக்குமரன் பளை பிரதேச செயலக பிரிவிற்கும் பளை பிரதேச செயலக பிரிவில் கடமையாற்றி ப.தக்கநாக்கினியன் பூநகரி பிரதேச செயலக பிரிவிற்கும் பூநகரி பிரதேச செயலக பிரிவில் பணி புரிந்த ச.சிவபாலசுந்தரம் கண்டாவளை பிரதேசசெயலக பிரிவிற்கும் கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் பணிபுரிந்த திருமதி. சு.விஜயகுமாரி கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (2-3-277)

## கிளி.முல்லை.மாவட்டங்களில் மின்சாரம் தடைப்படும்

இலங்கை மின்சார சபையின் கிளிநொச்சி மின் பரிவர்த்தனைநிலை யத்தின் ஊடாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மின் விநியோக மார்க்கங்களின் பராமரிப்பு புனரமைப்புகட்டுமாணங்களை மேற் கொள்வதற்காக மின்சாரம் தடைப்பட்டிருக்குமென இலங்கை மின்சாரசபையின்வடக்கு மாகாண பிரதி பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் 6 ஆம்திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை பல்லவராயன் கட்டு, முழங்காவில், நாச்சிக்குடா, வெள்ளாங்குளம், முழங்காவில்கடற்படை முகாம், முழங்காவில் ஐஸ் தொழிற்சாலை, வெள்ளாங்குளம் 651 ஆவது படைத்தளம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். முல்லைத்தீவு மாவட்டத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமைகாலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை வலைஞர்மடம், புதுமாத்தளன், சிலாவத்தை, உடுப்புக் குளம், அளம்பில், குமுழமுனை, செம்மலை, நாயாறு, கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி, கொக்குளாய்மீன்பிடி சமாசம், அந்தோனிப்பிள்ளை, ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. (2-3-15)

## பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலக கட்டடத்திற்கு நிதியொதுக்கீடு

வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் நெல்சிப் திட்டத்தின் ஊடாக வவுனியா பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் அமைப்பதற்காக ஒரு கோடியே 60 இலட்சத்து 81 ஆயிரம் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

இதற்கமைய இவ் அலுவலகக் கட்டடம் வவுனியா மாவட்டத்திலுள்ள ஈரப் பெரியகுளத்தில் எதிர்வரும் மார்ச் மாதமளவில் அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேற்படிவேலைகள்யாவும் ஆறு மாதங்களினுள் பூர்த்தி செய்யப்பட்டு அலுவலக நடவடிக்கைக்காக கட்டடம் திறந்து வைக்கப்படுமென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-3-15)

# துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளரை ஆதரித்தும் எதிர்த்தும் இரண்டு பேரணிகள்

## மாங்குளம் வலயக்கல்வி அலுவலகம் முன்பாக



துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தின் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எதிராக சில குற்றச்சாட்டுக்களை முன்வைத்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தலைமையில் 50 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு ஆதரவு தெரிவித்து 400 இற்கு மேற்பட்ட பெற்றோர்கள், கல்வி அதிகாரிகள், சமூக ஆர்வலர்களும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இருவேறு ஆர்ப்பாட்டப் பேரணிகளை ஏ-9 வீதி மாங்குளத்தில் அமைந்துள்ள வலயக் கல்வி அலுவலகத்திற்கு அருகாமையில் நடத்தினர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

ஒரு சில ஆசிரியர்களுக்கு மேற்படிப்பு படிப்பதற்கான சலுகைகள், கடமை விடுமுறைகள் கிடைப்பதற்கு தடை ஏற்படுத்தியமை, பாலூட்டும் தாய்மாருக்கு வசதியான பாடசாலை வழங்காமை, ஆசிரியர் இடமாற்றங்களின் போது மேன்முறையீடுகள் செய்யப்படுகின்ற போது ஒத்துழைப்பு வழங்காமை, ஆசிரியர்களின் சுகயீன விடுமுறை மற்றும் அமைய விடுமுறைகளின் போது அதிபர்கள் அனுமதி வழங்கியபோதும் வலயக் கல்விப் பணிப்பாளர் நிராகரித்தமை உட்பட சில கோரிக்கைகளை முன்வைத்து அவரை இடமாற்றம் செய்யவேண்டுமென கண்டனப்பேரணியொன்று இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டது.

இப்பேரணிக்கு எதிராக மேற்படி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களின் பெற்றோர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என சுமார் 400 இற்கும் மேற்பட்டவர்கள் அணிதிரண்டு எமது மாணவர்களின் கல்வி கை வைக்காதே ; இடப்பெயர்வின் பின்னர் தரம் 5, க.பொ. த (சா/த), க.பொ.த (உ/த) ஆகிய பரீட்சைகளில் எங்கள் மாணவர்கள் வளர்ச்சி கண்டது உனக்கு பொறுக்கவில்லையா? ஆகியபதாகைகளையும் கோஷங்களையும் எழுப்பியவாறு வலயக் கல்வித் திணைக்களத்திற்கு முன்பாக அணி திரண்டு இருந்தனர்.

இருபகுதியினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெறாத வகையில் மாங்குளம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 30 இற்கும் மேற்பட்ட கலகம் அடக்கும் பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

பிற்பகல் 4.30 மணியளவில் இரு பகுதியினரும் தமது ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டு அமைதியான முறையில் சென்றனர். இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் இது தொடர்பில் கூறுகையில்,

வலயக் கல்விப் பணிப்பாளர் மீது தம்மால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள்தொடர்பில் நடவடிக்கை எடுக்க



மாகாண கல்வித் திணைக்களம் தவறின் எதிர்வரும் மார்ச் மாதம் 2ஆம் திகதி வடக்கு மாகாண கல்வியமைச்சு முன்பாககண்டனப்பேரணியொன்றை நடத்தவுள்ளதாகவும் அன்றையதினம் மருத்துவ விடுமுறையில் ஆசிரியர்கள்பங்கேற்கவுள்ளதாகவும் இதன் போது தெரிவித்துள்ளனர். (2-3-15-301)

## கைக்குண்டு மீட்பு

பருத்தித்துறை நகரப் பகுதியில் கைக்குண்டு ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த கைக்குண்டு காங்கேசன் துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் காரியாலயத்திற்கு எதிர்புற மாகவுள்ள வாய்க்கால் பகுதியை துப்புரவு செய்யும் போது மீட்கப் பட்டது.

கைக்குண்டை செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கோண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ

## ஊக்குவிப்பு நிகழ்வு

கந்தையா கனகம்மா நிதியம் நடத்தும் மாணவர்களை கற்க வைக்கும் ஊக்குவிப்பும் கௌரவ மும் வழங்கும் நிகழ்வு நாளை மறு தினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாவற்குழி பிரதேசத்தில் அமைந்துள்ள கந்தையா கனகம்மா நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஆண்டு 1இல் இணைந்து கொண்ட மாணவர்களுக்கும் 2015 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை தேர்வில் 100 புள்ளி களுக்கு மேல் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கும் வங்கிக் கணக்கு ஆரம்பித்து புத்தகப் பை, கொப்பி, கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு தங்கராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக அ.வினோராஜ், சிறப்பு விருந்தினராக யாழ். நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் சி.பவளகுமார், கைதடி மக்கள் வங்கி முகாமையாளர் பா.சீராளன், கௌரவ விருந்தினராக நாவற்குழி பொதுநூலக நூலகர் க.மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ

# 2 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து நாசம்



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மந்திகை சந்தைக்கு முன் உள்ள தேநீர்க் கடையில் திடீரென ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாக இரண்டரை இலட்சத்துக் கும் அதிகமான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

மேற்படி சம்பவம் நேற்று அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நேற்று அதிகாலை உரிமையாளர் கடையைத் திறந்து பார்த்த பொழுது கடையின் உட்பகுதி எரிந்து புகை மேலெழுந்துள்ளது. இதனையடுத்து அவர் உடனடியாக மின்சார சபைக்கு அறிவித்துள்ளார்.

மின்சார சபையினர் வந்து பிரதான மின் வழங்கியைத் துண்டித்தனர். அத்துடன் தீயும் அணைக் கப்பட்டது.

எனினும் அக் கடையின் உள் இருந்த பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன. தீ மேலும் பரவாமல் தடுக் கப்பட்டதால் ஏனைய கடைகளுக்கு தீ பரவாமல் தடுக்கப்பட்டது.

இம் மின் ஒழுக்கு அதிகாலை வேளையே ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (இ-60)

## கிளி.பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவு சங்க ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

கிளிநொச்சி பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் கால வரையறை அற்ற பகிஷ்கரிப்பு போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர். நேற்றுக் காலை கிளிநொச்சியில் அமைந்துள்ள அலுவலகத்தில் குறித்த போராட்டத்தினை அவர்கள் ஆரம்பித்துள்ளனர். மாவட்டத்தில் உள்ள 31 கிளைகளும் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் இணைந்துள்ளதுடன், இப்போராட்டத்தினால் 100 ஊழியர்களும், 500 இற்கு மேற்பட்ட அங்கத்துவ சமூகங்களும் பாதிக் கப்படுவதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த சங்கத்தில் ஊழல் இடம் பெற்றதாக கடந்த காலங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும் எவ்வித மோசடிகளும் கண்டுபிடிக்கப்படாத நிலையில் தொடர்ந்தும் புதிய நிர்வாகத் தெரிவுகள் இடம்பெற்றன. எனினும் நிர்வாக செயற்பாடுகளிற்கு தொடர்ந்து முட்டுக் கட்டை காணப்பட்டதாக போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் தெரிவிக் கின்றனர். இதன் காரணமாக தலைவர் மற்றும் முகாமையாளர்கள் தொடர்நதும் பணிகளை முன்னெடுத்து செல்ல முடியாத நிலையில் பணிகளை பகிஷ்கரித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சங்கத்தினை இயங்க விடாது தடுப்பதற்கு அரசியல் தலையீடுகளும் காணப்படுகின்றன. மாகாண சபை உறுப்பினர் ஒருவர் மாகாண சபைக் கூட்டத்தில் குறித்த சங்கம் தொடர்பில் விமர்சனங்களை முன் வைத்ததாகவும் அவர்கள் குறிப் பிடுகின்றனர்.

தலைவர், முகாமையாளர்கள் தமது பணியை முன்னெடுக்கவும், சங்கம் உரிய முறையில் இயங்க உதவி ஆணையாளர் எழுத்து வடிவில் உறுதி அளிக்க வேண்டும் எனவும், அதுவரை பணிபகிஷ்கரிப்பில் தொடர்ந்து ஈடுபடவுள்ளதா கவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (2-3-15)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

உயரப்புலம் மெதடிஸ் மிசன் வித்தியாலய வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கா.ரவீந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர். கே.என். விந்தன் கனகரத்தினம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக ஆளுநர் அலுவலக உதவிச் செயலாளர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் மற்றும் லண்டன் பழைய மாணவர் சங்க பிரதிநிதி திருமதி சாந்தா சுகிர்தரஞ்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கனடா பழைய மாணவி திருமதி செல்வ ராணி மகாத்மசீலன் மற்றும் ஜேர்மனி பழைய மாணவன் நவரத்தினம் சாந்தரூபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ


North Lanka IIT

அரசாங்க/தனியார் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் பதவி உயர்விற்கும் சம்பள உயர்வுக்குமான UGC அங்கிகாரம் பெற்ற கற்கை நெறிகள்.

| Course | Entry Qualification | Duration |
|---|---|---|
| B.Sc. in Comp. Sc. | O/L or A/L | 2-3 Years |
| Top Up in B.Sc. in Comp. Sc. | 2 Years Diploma or HND | 1 Year |
| P.G.D. in Comp. Sc. | Any Degree | 1 Year |
| M.Sc. in Comp. Sc. | B.Sc. in Comp. Sc. or P.G.D in Comp. Sc. | 1 Year |
| B.Ed | A/L or Trained/Dip. Teachers | 3 Years |
| Diploma/Bachelors in Public Administration | A/L | 3 Year |
| M.Ed [கல்வி அமைச்சின் அங்கிகாரம் பெற்ற] | P.G.D. Ed / B.Ed | 1 Year |
| Degree in Physical Education & Sports | 2 Years Diploma in University | 1 Year |

(சி-3617)

| Courses | Day & Time |
|---|---|
| Degree in Physical Education & Sports | Sat & Sun [10 am – 1 pm] |
| M.Ed | Sat & Sun [10 am – 1 pm] |
| B.Ed | Sat & Sun [10 am – 1 pm] |
| B.Sc. in Comp. Sc. [Weekend Batch] | Sat [3pm – 5pm] , Sun [ 9am – 1pm] |
| B.Sc. in Comp. Sc. [Weekday Batch] | Mon – Thur [ 9am – 12 pm] |
| Top Up in B.Sc Comp. Sc. | Mon – Thur [ 9am – 12 pm] |

Peoples Bank Bulilding, Top Floor, Stanly Road, Jaffna.

Contact: 0777592666 , 0769440075



அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 04.01.2016 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் கிருஷ்ணர் குணரத்தினம்

(ஓய்வு பெற்ற தபாலக உத்தியோகத்தர்)

அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகள் இன்று 04.02.2016 வியாழக்கிழமை காலை 5 மணியளவில் கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் புனித தீர்த்தக்கரையில் கிரியைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப.11.00 மணியளவில் நடைபெற இருக்கும் சபிண்டீகரண நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்

மலையந்தோட்டம், கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை.

தகவல் :- குடும்பத்தினர். (சி-3616)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## ஓர் விமர்சன நோக்கு

இலங்கையின் கல்விமுறை, கலைத்திட்டம், பரீட்சைமுறைமை மற்றும் இவை தொடர்பான தூர நோக்கற்ற முறையிலான மாற்றங்கள் என்பன பற்றி அடிக்கடி பல்வேறு விமர்சனங்கள் எழுவதும் காலப்போக்கில் அவை மங்கி மறைந்துவிடுவதும் எமக்கு சகஜமாகிவிட்டது.

ஆயினும் கடந்த சில வருடங்களாக தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை அனைத்துத் தரப்பினரதும் பேசுபொருளாகி விட்டநிலையில் அது தொடர்பாக கடுமையான விமர்சனங்களும் வாதப்பிரதிவாதங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதன் உச்சவெளிப்பாடாக கடந்த அரசு இப்பரீட்சையை தொடர்ந்து நடத்தாது இரத்துச் செய்ய உத்தேசித்தது.

ஆயினும் இப்பரீட்சையைத் தொடர்ந்து நடத்துவதா அல்லது இல்லாமல் செய்வதா என்பது குறித்து விரைவில் சிறந்த முடிவு எட்டப்படும் என தற்போதைய கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் நாடாளுமன்றில் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இத்தகைய பின்னணிகளில் இப்பரீட்சையின் அறிமுகம், அதன் நோக்கங்கள், சமூக பொருளாதார மற்றும் உளவியல் ரீதியான தாக்கங்கள் மற்றும் இப்பரீட்சையின் எதிர்காலம் என்பன பற்றி இக் கட்டுரை நோக்குகின்றது.

விவசாய நாடான இலங்கையைப் பொறுத்தவரை பின்தங்கிய, வறுமையான மற்றும் கிராமப்புற சமூகங்களைச் சேர்ந்த திறமை மிக்க மாணவர்கள் தமது சாதி, மதம், இனம், பொருளாதார நிலைமை போன்ற தடைகளைக் கடந்து வசதிமிக்க பிரபலமான நகர்ப்புற பாடசாலைகளில் அனுமதி பெறவும் உதவிப்பணம் பெற்று தமது உயர்கல்வியைத் தொடர்ந்து வாழ்வில் மேன்மையடைவதன் மூலம் தமது சமூகப்பொருளாதார அந்தஸ்தை மேம்படுத்திக்கொள்ளவும் உதவுகின்ற வரப்பிரசாதமாக தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை விளங்குகின்றது.


மதிப்பிற்குரிய C.W.W. கன்னங்கரா கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் திறமைமிக்க கிராமப்புற மாணவர்கள் அரச புலமைப்பரிசில் பெற்று புகழ்பெற்ற கல்லூரிகளில் கற்க வாய்ப்பளிப்பதை நோக்காக கொண்டு இப் பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன் பேறாக கிராமங்கள் மற்றும் பின்தங்கிய சமூகங்களிலிருந்து வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள் என உயர் வாண்மையினர் உருவாகவும் தமது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும் வாய்ப்புக்கிட்டியது.

கல்வியூடான சமூக அசைவியக்கத்தினை இப்பரீட்சை மேலும் விரைவுபடுத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் கடந்த சில தசாப்தங்களாக தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை மிகவும் போட்டிக்குரியதாக மாறிவருகிறது.

உச்சப் புள்ளிபெறும் மாணவர்களுக்கு ஊடகங்களில் வழங்கப்படும் அதீத முக்கியத்துவமும் பிரபல்யமுமே இந்நிலைக்கு பிரதான காரணங்களாகின்றன. பெற்றோர், ஆசிரியர்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்களின் போட்டி நிலைமைகள் காரணமாக ஆரம்பப் பள்ளிச் சிறார்கள் இரண்டாந் தரத்திலிருந்தே ஓய்வு ஒழிச்சலின்றி கற்க நிர்ப்பந்திக்கப்பட்டு பந்தயக் குதிரைகளாக மாற்றப்படுகின்றனர்.



இயல்பாகக் கற்கும் ஆற்றலுள்ள மீத்திறன் மாணவர்கள் சிலருக்கு இது சாதாரண விடயமாக இருந்தாலும் ஒருசில புள்ளிகளால் பரீட்சையில் சித்தி பெறத் தவறும் அநேகமான மாணவர்கள் இப்பரீட்சைப் பெறுபேறுகளால் பெரும்பாதிப்பிற்குள்ளாகின்றனர். இக்காரணங்களால் மாணவர்கள் மத்தியில் மனஅழுத்தம் அதிகரித்து வருவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

புகழ்பெற்ற கல்வியியல் நிபுணரான Mohan Lal Greru என்பவர் சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை குழந்தைகளுக்கு மிகவும் ஆபத்தானது என குறிப்பிட்டிருந்தார்.

பல உளமருத்துவர்களும் இக் கருத்தை வலியுறுத்தி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. இளஞ்சிறார்கள் மீதான அழுத்தங்கள் காரணமாக ஆரோக்கிய மற்ற சமூகம் உருவாகக்கூடியதான நிலைமை நாட்டின் நலனுக்கு உகந்ததல்ல என்பது பலராலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த அரசினால் இப்பரீட்சையை இடைநிறுத்தும் யோசனை முன்வைக்கப்பட்டது. இது மாணவர்கள் நேயமான ஒரு நடவடிக்கை எனவும் தெரிவிக்கப்பட்டது.

பரீட்சை காரணமாக மாணவர் மத்தியில் ஏற்படும் மனஅழுத்தத்திற்கு இது ஒரு சிறந்த தீர்வாக அமையலாம்.

எனினும் இம் முய ற்சி வறுமையான கிராமப்புற சிறார்களின் உயர்கல்வி வாய்ப்புக்களை மறுத்து அவர்கள் வெளி உலகத்துடன் இணைவதற்கும் சமூக மேம்பாடடைவதற்குமான வழிகளை முற்றிலும் தடை செய் யும் ஓர் நடவடிக்கை எனவும் இதன் மூலம் புகழ்பூத்த தேசிய பாடசாலைகள் பணபலமும் செல்வாக்கும் மிக்க குடும்பங்களில் பிறந்த பிள்ளைகளின் கல்விக் கூடங்களாக மாறிவிடும் எனவும் கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

இத்தகைய பின்னணிகளில்




இன்றைய அரசு இப்பரீட்சை பற்றிய தீர்க்கமான முடிவு ஒன்றினை மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ள நிலையில் பின்வரும் ஆலோசனைகளும் கருத்திற்கொள்ளப்படமுடியும்.

1) இப்பரீட்சையை தரம் எட்டிற்குப் பிற்போடலாம் என்ற ஆலோசனை சிலரால் முன்மொழியப்பட்டது. போட்டிப்பரீட்சை ஒன்றினை எதிர்கொள்வதற்கான முதிர்ச்சி இப்பருவத்தில் பிள்ளைகளிடத்தே ஏற்பட்டுவிடும் என்பதாலும் பெற்றோரின் தலையீடு குறைவடைவதுடன் பிள்ளைகளின் கல்விசார் ஆற்றல்கள் பற்றிய புரிந்துணர்வும் அவர்களிடத்தே ஏற்பட்டு பிள்ளைகளை சிறப்பாக வழிகாட்டமுடியும் என்பதாலும் இந்த ஆலோசனை ஓரளவு ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதே.

2) தரம் இரண்டு முதலே மாணவர்கள் இப்பரீட்சைக்காக வலிந்து தயார் செய்யப்படுகின்றனர். இதனைத் தவிர்க்கும் வகையில் பரீட்சைக் கட்டமைப்பில் பின்வரும் மாற்றங்களைக் கொண்டு வரலாம்.

❖ மனனஞ்செய்து கற்றலை பரீட்சிக்கும் வினாக்களுக்குப் பதிலாக இயன்றளவு புறவயத்தன்மையான நுண்ணறிவுசார் வினாக்களையும் மொழிசார் மற்றும் கணிதத்திறன்களுடன் தொடர்புபட்ட வினாக்களையும் உள்ளடக்குதல். இதன்மூலம் பிள்ளை தொடர்ச்சியாக தனியார் வகுப்புக்களில் பயிற்றப்படுவதைத் தவிர்க்க முடிவதுடன் அறிவிற்குப் பதிலாக பிள்ளையின் கற்கும் ஆற்றலை பரந்தளவில் மதிப்பிடவும் முடியும்.

மேலும் இப்பரீட்சை உண்மையிலேயே மீத்திறனுள்ள மாணவரை இனங்காண உதவுவதாகவும் அமையும்.

❖ மாணவரின் பொது அறிவினைச் சோதிக்கும் வினாக்களை வழங்கி மாணவரின் இயல்பான வாசிக்கும் ஆற்றலை முன்னேற்றுதல்.

3) பாடசாலைக்கட்டமைப்பில் மாற்றங்களை கொண்டுவரல்

❖ மாவட்டந்தோறும் மேற்தர 1 ஏபி (Super Grade) பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்

❖ ஏற்கனவே முன்மொழியப்பட்ட 1000 பாடசாலைத்திட்டத்தை வலுவூட்டி கிராமியப் பாடசாலைகளை முன்னேற்றுவதன் மூலம் நகர்ப்புறப்பாடசாலைகள் நோக்கிய போட்டியினைக் குறைத்தல்.

இதன்மூலம் நகர்ப்புற பிரபல பாடசாலைகளுக்கான போட்டி குறைக்கப்படுவதுடன் இந்நோக்கில் மாணவர் மீது திணிக்கப்படும் அழுத்தத்தையும் குறைக்க முடி யும்.

❖ மேலும் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் தனியார் வகுப்புகளுக்கு அனுப்பப்படுவதைத் தவிர்த்து பாடசாலைகளிலேயே தேவையான தயார்ப்படுத்தல்களை வழங்குதல்.

திறந்த பல்கலைக்கழக பேராசிரியரான சிரோனிகா கருணாநாயக்கவினால் முன்வைக்கப்பட்ட "இப்பரீட்சை அது ஆரம்பிக்கப்பட்ட நோக்கங்களிலிருந்து பெரிதும் விலகிவிட்டது" எனும் கருத்து இங்கு கவனிக்கத்தக்கது.

கல்வியமைச்சர் வழங்கிய புள்ளிவிபரப்படி பதினைந்தாயிரம் மாணவர்கள் மட்டுமே இப் பரீட்சை ஊடாக புலமைப்பரிசில் உதவு தொகை பெறுவதற்குத் தகைமை பெறுகின்றனர்.

இதில் சித்தியடைவோரில் பெரும்பாலானோர் அரச உத்தியோகத்தர்களின் பிள்ளைகள். அநேகமான வறிய மாணவர்கள் 100 இனை அண்மித்த புள்ளிகளை பெற்ற போதிலும் பரீட்சையில் வெற்றி பெறத் தவறுவதால் புலமைப் பரிசிலுக்காக ஒதுக்கப்பட்ட தொகையை பெற இயலாது போகின்றனர்.

இந் நிலையை மாற்றுவதற்கான ஏற்பாடுகள் பற்றியும் அரசு சிந்திக்கலாம்.

இதற்காக பரீட்சையை இரு பிரிவுகளாக அதாவது பிரபல பாடசாலைகளுக்கு அனுமதிப்பதற்காகத் தனியாகவும் உதவு தொகை வழங்குவதற்காகத் தனியாகவும் நடத்தலாம்.

அல்லது வறிய மாணவர்களுக்காக குறிப்பிட்ட எண்ணிக்கையிலான இடஒதுக்கீட்டை வழங்கலாம்.

இதற்கப்பால் மாணவர்கள் மத்தியில் பரீட்சையினால் ஏற்படக்கூடிய மனஅழுத்தத்தை முகாமை செய்யும் திறன்களை விருத்தி செய்வதற்கான வழிகாட்டல்களை வழங்குவதும் அவசியமாகும்.

இதற்காக பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்களுக்கு தேவையான தயார்ப்படுத்தல்களை வழங்கலாம்.

நிறைவாக சமத்துவமற்ற சூழலில் சமத்துவமான கல்வியை அனைவருக்கும் வழங்குவதற்கும் பாதிக்கப்பட்ட அல்லது கிராமப்புற சமூகங்களினைச் சேர்ந்த மாணவர்களுக்கான கல்வி வாய்ப்பினை அதிகரிப்பதற்கும் மேலும் நாட்டின் அபிவிருத்திக்கு அச் சமூகங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் அறிவாற்றலையும் இயலுமைகளையும் சிறந்தமுறையில் பங்களிக்கச் செய்வதற்கும் ஏதுவாக அமையும் இப்புலமைப் பரிசில் பரீட்சையை இரத்துச் செய்வதற்குப் பதிலாக அதனை உரிய முறையில் மாற்றியமைத்து நடைமுறைப்படுத்தும் பொறுப்பு கல்விசார் ஆளணியினர், அதிகாரிகள், அமைச்சர்கள் மற்றும் கல்வியியல் நிபுணர்கள் ஆகியோர் கைகளிலேயே உள்ளது.

ராஜினி
மங்களேஸ்வரசர்மா
விரிவுரையாளர்,
கல்விப்பீடம்,
இலங்கை திறந்த
பல்கலைக்கழகம்.

# நந்திக்கடலில் கடற்றொழிலுக்கு வள்ளங்களை பயன்படுத்தத் தடை

## தொழிலாளர்கள் பெரும் நெருக்கடியில்

(மாமூலை)

**முல்லைத்தீவு நந்திக்கடலில் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கென வள்ளங்களையும் கட்டுவலைகளையும் வழங்கிய அதிகாரிகளே அவற்றைப் பயன்படுத்த வேண்டாமென நிபந்தனை விதிப்பதில் என்ன நியாயம் இருக்கிறது என அப்பிரதேச மக்கள் அங்கலாய்க்கின்றனர்.**

இது தொடர்பில் அப்பிரதேச மக்கள் மேலும் தெரிவிக்கையில்,

நந்திக்கடலில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் நாம் அரச அதிகாரிகளின் தலையீட்டினால் எங்கள் வாழ்வாதாரத் தொழிலான மீன்பிடித்தொழிலினை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

காலங்காலமாக வள்ளங்களையும் கட்டு வலைகளையும் பயன்படுத்தியே மீன்பிடித்து வந்துள்ளோம். இந்த மீன்பிடி முறைமை எமது யாப்பிலும் உள்ளது. இதனை அரசும் ஏற்றுக்கொண்டுதான் எங்களுக்கு வள்ளங்களையும் கட்டுவலைகளையும் தந்துள்ளது. இவ்வள்ளங்களையும் வலைகளையும் பயன்படுத்தி கட்டுவலை மீன்பிடியைத்தான் மேற்கொள்ளமுடியும்.

ஒரு சில மேலதிகாரிகள் எங்களுடைய மீனவ சமாச யாப்புக்களில் மாற்றத்தினை ஏற்படுத்தி வீச்சு வலையைப் பயன்படுத்துமாறும் இதனை மீறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் கூறியுள்ளனர்.

வள்ளங்களையும் கட்டுவலைகளையும் அவர்களே கொடுத்துவிட்டு அதனைப் பயன்படுத்தக் கூடாதென்பது என்ன நியாயம். இங்கு உள்ள மீன்பிடித்தொழிலாளர்களில் அநேகமானவர்கள். யுத்தத்தினால் மாற்றுத்திறனாளிகளாக மாற்றப்பட்டுள்ளனர். இவர்களால் எவ் வாறு வீச்சுவலையைப் பயன்படுத்த முடியுமெனவும் கேள்வியெழுப்பியுள்ளனர்.

இவ்வாறு அங்கங்களையுமிழந்து வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் இந்த ஏழைகளின் நலனையும் கருத்திற் கொண்டு நல்லதொரு தீர்வினை குறித்த அதிகாரிகள மேற்கொள்ள வேண்டுமென முல்லை. மாவட்ட மீன்பிடி சமாசததலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.(3-2-301)

# மாணவர்கள் போசாக்கான உணவைப்பெற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## 10 மாணவர்கள் மயக்கம்,அதிபர் சுட்டிக்காட்டு

(பளை)

மாணவர்களுக்கு போசாக்கான உணவைப் பெற்றுக்கொடுப்பதற்கு அதிகாரிகள் மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென பளை புலோப்பளை அரசினர் றோ.க.த.க. பாடசாலை அதிபர் வ.ஜீவரட்ணம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டி நிகழ்வில் தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

விளையாட்டுநிகழ்வுகளின்போது 10 மாணவர்கள் வரை மயக்கமுற்று விழுந்துள்ளனர். மாணவர்கள் போசாக்கான உணவு இன்றி இருப்பது தெளிவாகத் தெரிகிறது.

பாடசாலை மாணவர்களுக்கு முட்டை மற்றும் பால் வழங்கப்படுவதற்கான திட்டம் ஏற்கெனவே இருந்த பொழுதும் அவை தற்போது நடைமுறையில் இல்லை. மேலும் வாழ்வாதாரத் திட்டத்தில் பசுக்கள் வழங்கப்பட்டதன் நோக்கம் வருமானம் மற்றும் சத்துள்ள உணவைப் பெறுதல் என்பனவாகும். ஆனால் பசுப்பால் வீடுகளில் பயன்படுத்தப்படாது விற்பனைக்கு வழங்கப்படுகிறது. இது விடயத்தில் பெற்றோர் அக்கறை செலுத்த வேண்டும்.

அநேகமான மாணவர்கள் தடுப்பு முகாம்களில் இருந்து வந்தவர்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்கிறோம். மாணவர்களுக்கு போசாக்கான உணவைப் பெற்றுக் கொடுப்பதற்கு அதிகாரிகள் மட்டத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

மேலும் போசாக்கான உணவைப் பெறுவதன் மூலமே சிறந்த முறையில் விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றியீட்ட முடியும். விளையட்டு ஒரு மனிதனை சிறந்த பிரஜையாக்குகிறது. உடல், உள ஆரோக்கியம் தருகிறது விளையாட்டு கற்பதற்கான உடல், உள சூழமைவையும் தருவதுடன் தலைமை தாங்கும் பண்பு, வெற்றி தோல்வியை ஏற்கும் மனப்பான்மை மற்றவருக்கு உதவி செய்கின்ற பண்பு போன்வற்றை வளர்க்க உதவுகிறது.

அரசின் வேலைவாய்ப்புக்களைப் பெறுவதற்கு இரண்டு திறமைச்சித்தி மற்றும் நான்கு சாதாரண சித்தி என்பவற்றுடன் விளையாட்டுத் துறையில் சான்றிதழ் ஒன்றும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அப்போது தான் அவர்கள் பொறுப்புக்களை நிதானமாகச் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் விளையாட்டின் முக்கியத்துவம் நன்கு புலப்படுகிறது. என்றும் அதிபர் தெரிவித்தார். (3-29)

# தமிழ்ப்பணி ஆற்றிய பெருந்தகைகள் மன்னார் பாரதி விழாவில் கௌரவிப்பு



மன்னார் மாவட்ட சைவ கலை இலக்கிய மன்றம் நடத்திய பாரதி விழா கடந்த 30 ஆம் திகதி மன்னார் சித்தி விநாயகர் இந்துத் தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

சைவ கலை இலக்கிய மன்றத் தலைவர் மஹாஸ்ரீ ம.தர்மகுமார சர்மா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக மன்னார் நகரப் பிரதேச செயலர் கே. எஸ். வசந்தகுமார், மன்னார் வாழ்வின் எழுச்சித் திட்டப் பணிப்பாளர் கே.சசிதரன், மன்னார் நகரசபை செயலாளர் எக்ஸ். எல். றெனால்ட் ஆகியோர் கலந்து கொண்டனர். கலையருவி இயக்குநர் அருட்பணி தமிழ்நேசன் அடிகள், சட்டத்தரணி ஜனாப் எம்.எம். சபுறுதீன், ஆசிரிய ஆலோசகர் ம். இரவீந்திரன், சட்டத்தரணி எஸ். வினோதன் ஆகியோர் விசேட விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

கல்விப் பணி மற்றும் தமிழ்ப் பணி ஆற்றிய பெருமக்கள் பொன்னாடை போர்த்தி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அந்தவகையில் ஜனாப் மக்கள் காதர் - சமூகப் பணி விருதையும், நியூமன்னார் இணையத்தளம் ஊடகத்திற்கான விருதையும், முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆபெல் றெவ்வல் கல்விப் பணிக்கான விருதையும் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் ஸ்ரான்லி டிமெல் பெண்ணியத்திற்கான விருதையும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தமிழியற் பணிக்கான விருதையும் மன்னார் அன்னை இல்லச் செயலாளர் பிருந்தாவனன் சமுதாயப் பணிகளுக்கான விருதையும் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் பாரதியார் விருதையும் பெற்றுக்கொண்டனர்.

கவியர்ப்பணம், நாட்டியார்ப்பணம் என்பவற்றுடன் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசனின் வீழ்வேன் என்று நினைத்தாயோ என்ற பொருளில் அமைந்த சிறப்புரை, பிரதேச செயலர் கே. எஸ். வசந்தகுமார் தலைமையில் பாரதியின் சிந்தனைகளை இன்றைய சமூகம் பயன்படுத்திக் கொண்டதா? பயன்படுத்தத் தவறிவிட்டதா என்ற பொருளில் அமைந்த பட்டிமண்டபம் என்பன இடம்பெற்றன. (2-3-29)

# கிணற்று துலா முறிந்து விழுந்ததில் முரசுமோட்டையில் இளைஞன் பலி!

(மாமூலை)

துலாமுறிந்து விழுந்ததில் குளித்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் கிணற்றுக்குள் தவறி விழுந்து மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் முரசுமோட்டையில் நேற்று முன்தினமிரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முரசுமோட்டை கண்டாவளையைச்சேர்ந்த சின்னத்துரை கோகுலன் (வயது-28) என்ற இளைஞரே மரணமடைந்தவராவார். குறித்த நபர் வயல் வேலையை முடித்துக்கொண்டு கிணற்றில் துலாவினால் நீரை அள்ளி குளித்துக் கொண்டிருக்கும் போது துலா முறிந்து விழுந்ததால் குறித்த இளைஞர கிணற்றுக்குள் தூக்கி வீசப்பட்டே மரணமடைந்துளளார். (3-2-301)




# மகிழ்ச்சியான இல்லம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியினால் 'மகிழ்ச்சியான இல்லம்' எனும் தொனிப்பொருளில் ஒன்றுகூடல் ஒன்று நேற்று முன்தினம் கிளிநொச்சி நகர வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியில் கருத்திட்ட முகாமையாளர் சி.கெங்காதரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மகிழ்ச்சியான குடும்ப அலகை கட்டி எழுப்புவதற்கு பெற்றோர் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக தெளிவூட்டப்பட்டதுடன் குடும்பப் பிரச்சினைகளை எவ்வாறு இனங்கண்டு தீர்வு காண்பது தொடர்பாகவும் வாழ்வின் எழுச்சி பயனாளிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த ஒன்றுகூடலில் கிளி நொச்சி மாவட்ட உளவளத்துறை உத்தியோகத்தர் எஸ்.துஷ்யந்தன், கருத்திட்ட உதவியாளர் ஆர்.சக்திவேல், கிளிநொச்சி நகர வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர் வ.சசிதரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.(2-3-272)

# உலகில் வெற்றி பெற்ற மனிதர்களின் நல்லொழுக்கமே அவர்களுக்கென ஒரு வரலாற்றைக் கொடுத்திருக்கிறது

## புலோப்பளை றோ.க.த.க. பாடசாலை விளையாட்டு நிகழ்வில் எம்.பி.சிறீதரன்

(பளை)

உலகில் வெற்றிபெற்ற மனிதர்களின் நல்லொழுக்கமும் நேர்மையும் அவர்களுக்கென ஒரு வரலாற்றைக் கொடுத்திருக்கிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம்சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பளை புலோப்பளை அரசினர் றோ.க.த.க.பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இல்லமெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஒரு இனத்தின் தனித்துவத்தை அடையாளப்படுத்துவதற்கு விளையாட்டு முக்கியமான ஒன்றாகும்.

ஒரு இனத்தின் மொழி, கலாசாரம், பண்பாடு என்பன விளையாட்டு நிகழ்வுகள் மூலம் வெளிக்கொணரப்படுகின்றன. விளையாட்டின் மூலம் நேர்மை, விட்டுக்கொடுப்பு, கண்ணியம், இணைந்து செயற்படுதல் போன்ற வாழ்வின் அடிப்படைப் பண்புகளை சிறுவயதிலேயே கற்றுக்கொள்வதற்கு விளையாட்டுப் போட்டிகள் உதவிபுரிகின்றன.

மேலும் புலோப்பளை அரசினர் றோ.க.த.க.பாடசாலை வரலாற்று ரீதியாக ஒரு முக்கியமான பாடசாலையாகும். பாடசாலைக்கல்வியால் ஒவ்வொரு மனிதரும் பெருமையடைகிறார்கள். உலகத்தை வெற்றி கொள்ள வேண்டுமாயின் கல்வி அத்தியாவசியமாகிறது. மகாத்மா காந்தி, தோமஸ் அல்வா எடிசன், நெல்சன் மண்டேலா போன்ற வெற்றி பெற்ற மனிதர்களின் நல்லொழுக்கமும் நேர்மையும் அவர்களுக்கு ஒரு வரலாற்றைக் கொடுத்திருக்கிறது.

எமது தாயக மண்ணுக்கும் அவ்வாறானதொரு நிலை கல்வியினாலேயேஏற்படுத்தப்பட முடியும். எங்கள் மண்ணையும் மொழியையும் நேசிக்கின்ற இனமாக நாங்கள் மிளிர கல்விபுடமிடுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பளைப் பங்குத்தந்தை சில்வெஸ்ரர் அடிகளார் தனது உரையில்,

கல்வியும் விளையாட்டும் வாழ்க்கையின் இரண்டு கண்கள் போன்றவை. கல்வியில் ஆர்வம் காட்டுவதுபோல் விளையாட்டிலும் ஆர்வம் காட்டவேண்டும். கல்வியும் விளையாட்டும் பூரணமான ஒரு மனிதனை உருவாக்குகிறது.

உயர் சமூக விழுமியங்களை வாழ்வாக்கிக் கொள்வதற்கு கல்வியும் விளையாட்டும் இன்றிமையாதவை. ஒட்டுமொத்தமான ஒரு நல்ல சமூகம் உருவாகுவதற்கு கல்வி மட்டுமல்ல விளையாட்டும் பெரும் பங்காற்றுகிறது என தெரிவித்தார். பாடசாலை அதிபர் வ.ஜீவரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பளைகோட்டக்கல்விபணிப்பாளர் ஐ.குகானந்தராஜா, அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் நலன் விரும்பிகள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-3-291)

ALREADY ISSUED 24000 CERTIFICATES

தெல்லிப்பளையில்

MICOM THE GREAT

SINCE 1997 IN COLOMBO

School of Law & English



- ACCA, CIMA, AAT, CMA, IBSL
- Law Subjects
- LLB Law college subjects
- Law Entrance Exams

(English Medium and Tamil Medium) Classes also start in Colombo very soon.

English Classes

IELTS, Spoken English with Grammer
Diploma in English- English A/L, O/L

Conducted by

Mohanarajah Joganantham
(M.Raja Joganantham)
L.L.B.(Col.Uni)
Dip in Journalism
Reading for LL.M
Proprietor of MICOM

An old Student of Honourable Prof.
Dr.G.L.Peries,
Prof.Madam Savithiri Kunasekere
Prof.Dr.S.Sornaraja
Prof.Madam. N.Chandrakasan
Regiee michel - the chief Editor of daily mirror



- Tellipalai Classes Have Been Going on. Tellipalai
- Micom The Great Infornt of old AGAS office

Contacting Numbers:
077 284 2556,076 707 7558, 077 395 0215
Contactable person Mr.Joganantham

Lectured on Law at, University of Ballarat (Australia),
University of ICFAI (Hydrabad),
OXONIA, IAS, Ladies College,London Business School,
MICOM International

(3486)

## மாணவர்களிடம் பொதுபல சேனா கையெழுத்து சேகரிப்பு ஐ.தே.க.எதிர்ப்பு

பொதுபல சேனாவின் செய லாளர் கலகொடஅத்தே ஞான சார தேரரை விடுவிக்குமாறு கூறி, 25 லட்சம் கையொப்பம் சேகரிக்க பெல்மடுல்ல நகரில் நேறறு முன்னெடுத்த நட வடிக்கைக்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் பெல்மடுள்ள பிர தேச சபையின் முன்னாள் உறுப்பினர் மஞ்சுல டயஸ் தலைமையிலான குழு எதிர் ப்புத் தெரிவித்துள்ளது.

பாடசாலை மாணவர் களிடம் அங்கிருந்த பொதுபல சேனா பிக்குகள் கையொப்பம் பெற முற்பட்ட போதே பிரதேச சபை உறுப்பினர் தலையிட்டு மாணவர்களிடம் கையொ ப்பம் பெற வேண்டாம் என கேட்டுக் கொண்டார். இதன் போது, அங்கிருந்த தேரர களுக்கும் பொதுமக்களுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது.

யுத்தத்தை வென்ற இரா ணுவத் தளபதியை கடந்த அரசாங்கம் சிறையில் அடை த்தபோது, இந்த பொதுபல சேனா எங்கிருந்தது என அங்கு கூடிய பொதுமக்கள் கேள்வி எழுப்பினர். நாமும் இந் நாட்டின் பௌத்த மக்கள். தேரர் தவறு செய்யாதிருந தால் நீதிமன்றத்தினால் சிறைத்தண்டனை வழங்கப் பட்டிருக்க மாட்டாது எனவும் அங்கு கூடிய மக்கள் பொதுபல சேனா பிக்குகளுக்கு எதிராக கருத்துத் தெரிவித்தனர். (இ)

# செய்தித் துளிகள்

## நேர அட்டவணை மாற்றம்

யாழ்ப்பாணத்துக்கான புகையிரத சேவையின் நேர அட்டவணை மாற்றப்பட் டுள்ளதாகபுகையிரதத்திணைக் களம் தெரிவித்துள்ளது.

இந்நேர மாற்றம் நாளை முதல் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய நேர அட்டவணை வருமாறு,

யாழ்.தேவி கொழும்பு கல்கிஸையிலிருந்து காலை 5.50இற்கு புறப்பட்டு பிற் பகல் 3.20மணிக்கு காங் கேசன்துறையை சென்ற டையும்.

யாழ்.தேவி காங்கேசன் துறையிலிருந்து காலை 8.20 இற்கு புறப்பட்டு மாலை 6.58 இற்கு கொழு ம்பு கல் கிஸையை சென்றடையும்.

கடுகதி புகையிரதம் (ஞா யிறு மட்டும்) காலை 8.20 இற்கு காங்கேசன்துறை யிலிருந்து புறப்பட்டு மாலை 4.25 இற்கு கொழும்பைச் சென்றடையும்.

மேலும் புகையிரத ஆச னப் பதிவுகளை 45 நாட் களுக்கு முன்னர் மேற்கொ ள்ள முடியும் என்றும் தெரி வித்துள்ளார். (இ)

## சுதந்திர தினத்தை முன்னிட்டு கைதிகள் விடுவிக்கப்படுவர்

சுதந்திர தினத்தை முன னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில கைதிகளை விடுதலை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய உத்தேசிக் கப்பட்டுள்ள சில கைதிகளை விடுதலை செய்வதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாகசிறைச்சாலைகள்ஆணை யாளர் நாயகம் நிஷாந்த தனசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பு தொடர்பில் எழு த்து மூலம் அறிவிக்கப் பட்டுள்ளதாகவும் சிறைச் சாலைகள் ஆணையாளர் தெரிவித்தார். (இ)

## வெளிநாட்டவர் மூவர் சிக்கினர்

காலி பேருந்து நிலை யத்துக்கு முன்பாக உள்ள பணம் பெறும் தன்னியக்க இயந்திரத்திலிருந்து பணத் தைக்களவெடுப்பதற்கு முயன் றனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் வெளிநாட்டவர் மூவர், கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித் தனர்.

அந்த மூவரையும் வங் கிச் சேவையாளரே பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத் துள்ளார். அந்த மூவரும் மிகவும் சந்தேகத்துக்கிடமான முறையில், சுற்றித் திரிவ தாக கிடைத்த தகவலைய டுத்தே, வங்கிச் சேவையாளர் அவ்விடத்தை சோதனை க்கு உட்படுத்தியுள்ளார்.

அதன் பின்னரே அந்த மூவரையும் அவர், பிடித்து பொலிஸாரிடம் கையளித் துள்ளார். இதேவேளை, அவர்களிடமிருந்து காட் அட்டைகள் பலவும் மீட்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## கொழும்பு இராணுவ வைத்திய தாதி மாடியிலிருந்து குதித்து தற்கொலை

கொழும்பு இராணுவ வைத்தியசாலையில் இரா ணுவ வைத்திய தாதியாக கடமையாற்றிய பெண் ஒரு வர், வைத்தியசாலை 10வது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண் டுள்ளதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்த சம்பவத் தில் இரத்தினபுரியைச் சேர் ந்த 23 வயதுடைய எம். கே.டி.இராயரத்தின என்ற தாதி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலி ஸார் கூறியுள்ளனர்.

இந்த நிலையில், சம்ப வம் தொடர்பாக இராணு வத்தினர் பதிவு செய்த முறைப்பாட்டிற்கு அமைய, பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கொழும்பு வைத்தியசா லையில் ஒப்படைத்துள் ளனர். (இ)

## புகையிரத நிலையத்தில் தீ

மருதானை புகையிரத நிலையத்தில் நேற்றுக் காலை திடீரென தீ ஏற்பட் டுள்ளதாக தகவல்கள் தெரி விக்கின்றன.

தீயை கட்டுப்படுத்த தீய ணைப்பு படையினர் மரு தானை புகையிரத நிலை யத்திற்கு வரவழைக்கப் பட்டுள்ளனர்.புகையிரத நிலையத்தில் மரத்தினா லான சிலிப்பர் கட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பகுதியிலே இந்த தீ ஏற்பட் டுள் ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

## வெளிநாட்டு நாணயங்களுடன் சிங்கப்பூர் பிரஜை ஒருவர் கைது

சட்டவிரோதமாக நாட்டி லிருந்து கொண்டு செல் வதற்கு முயற்சிக்கப்பட்ட ஒரு தொகை வெளிநாட்டு நாணயங்களுடன் சிங்கப் பூர் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

2கோடியே 22 இலட் சத்து 78 ஆயிரம் ரூபா பணம் சந்தேக நபரிடமிரு ந்து பறிமுதல் செய்யப்பட் டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

குறித்த பணத்தை சிங் கப்பூருக்கு கொண்டு செல் வதற்கு நேற்று முன்தினம் பிற்பகல் முயற்சித்த போதே சந்தேகநபர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விமான நிலைய சுங்கப் பிரி வினர்விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (இ)

# மச்சங்களின் அதிர்ஷ்ட பலன்கள்



### பெண்களுக்கான பலன்கள்

#### கால் முட்டிகளில்

பொதுவாகப் பெண் களுக்கு கால் முட்டிகளில் மச்சம் இருந்தால் அது நல்ல பலன்களையே கொடுக்கும்.

இடது கால் முட்டியில் மச்சம் இருந்தால் அவ்வாறு இருக்கப் பெற்ற பெண்கள் வாழ்க்கைக்குரிய வசதிகளை உடையவர்களாக இருப் பார்கள். பலவகை செல் வங் களையும் அனுபவிப்பவர்க ளாகவும் இருப்பார்கள். கணவ னிடமும் பெரியோரிடமும் அடக்கமும் மரியாதையும் உடையவர்களாக இருப்பார் கள். பிறருக்கு உதவி செய் வார்கள்.பிறர் துன்பங் கண்டு உதவி செய்து அத்துன்பத் தைப் போக்குவார்கள். ஏழை முகங்கண்டு இரக்கம் காட் டுவார்கள். வீணான செல வுகள் செய்ய மாட்டார்கள். வரவுக்கேற்ற செலவு செய்து வாழ்க்கையை வளப்படுத் துவார்கள்.

வலதுகால் முட்டியில் மச் சம் உள்ள பெண்கள் பி றை ஏமாற்றிப் பணம் பறிப் பவர் களாக இருப்பார்கள். பிறர் கூறும்நல்லுரைகளைக்கேட்க மாட்டார்கள். சிலர் உடலை வருத்தி கடுமையாக உழை த்து வாழ்பவர்களாகவும் இருப் பார்கள்.

இந்த மச்சம் உடைய பெண்கள் ஏழ்மை குடும்பத் தில் பிறந்தவர்களாக இருப் பார்கள்.சிலர் ஆண்களிடம் வெட்கம்,மானம்,மரியாதை இன்றிப் பழகுவார்கள்.சிலர் செல்வவசதியுள்ளஆண்களை காதலிப்பது போன்று நடித்து பணத்தைப்பறித்துக்கொண்டு ஏமாற்றும் இயல்புடையவர் களாக இருப்பார்கள்.

இடதுகால் முட்டியில் இடது புறமாக மச்சம் இருப்பவர்கள் வாழ்க்கைக்குரிய வசதிகள் நிரம்பப் பெற்றவளாக இருப் பார்கள்.கணவனிடமும் பெரி யவர்களிடமும் தெய்வத்திட மும் பக்தியுள்ளவள். தான தர்மங்களை புரிபவளாக இருப் பாள்.வீட்டை சுத்தமாக வைத் துக்கொள்பவள். விரதங்களை அனுஷ்டிப்பதிலும் நற்காரி யங்களுக்கு உதவி புரிவதி லும் எப்பொழுதும் விருப்ப முள்ளவள்.

இடதுகால் முட்டிக்கு வலது புறமாக மச்சம் இருந்தால் நல்ல குழந்தைகளை பெறு வாள்.கணவனுக்குஏற்றமனை வியாக இருந்து குடும்பத்தை திறம்பட நடத்துபவள். ஆடம் பரம் அதிகமில்லாமல் அமை தியாக வரவுக்கேற்ப செலவு செய்பவள்.இவர்களில் பலர் குடியானவர்களின் மனை விகளாக இருப்பர்.

வலதுகால் முட்டிக்கு இடது பக்கத்தில் மச்சம் இருந்தால், முரட்டுப் பிடிவாதமுள்ளவள். பெரியோர்களை மதிக்காதவள். மற்றவர்களை ஏமாற்றி பிழை க்கும் இயல்புடையவள்.

வலது கால் முட்டியில் வலது புறம் மச்சம் இருந் தால் உடலுழைத்து வயிறு வளர்ப் பவளா வாள். ஏழ்மையால் வருந் துபவள். பெண்களுக் குரிய அச்சம் நாணமின்றி ஆண்களைப் போல துணி வும் கொண்டவளாக இருப் பாள். பிறருடன் ஒற்றுமை யாக வாழத் தெரியாமல் எல் லோருடனும் சண்டை யிடும் சுபாவ முள்ளவள்.

#### தொடைகளில்

இடது தொடையில் மச்சம் உள்ள பெண்கள், கணவ ருக்கும் பெரியோருக்கும் கட்டுப்படாமல் வீட்டை விட்டு வெளியேறி ஊர் ஊராகத் திரிந்து பல ஆடவரோடு சேர் ந்து வாழ்வார்கள். மற்றவர் களால் வெறுக்கத்தக்க வாழ் க்கை முறையை உடையவர் களாகவார்கள்.

வலது தொடையில் மச்சம், உள்ள பெண்கள் தங்கள் கணவரைத் தவிர வேறு எந்த ஆடவரையும் கனவில் கூட நினைக்க மாட்டார்கள்.

இவர்கள் சாதாரண குடும் பத்தில் பிறந்தவர்களாக இருப்பார்கள். இருக் கும் வசதி களைக் கொண்டே மன நிறைவு கொள்வார் கள். கண வருக் கேற்ற மனைவியராக சிறந்த குணவதியாக விளங்குவார்கள்.

(தொடரும்)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதிய ஓடுபாதை அமைக்கப்படும்

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புதிய விமான ஓடுபாதையொன்றை நிர்மாணிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

தற்போது காணப்படுகின்ற விமான ஓடு பாதையானது மிகவும் பழைமை வாய்ந்தது எனவும், இந்த ஓடு பாதையை மேலும் ஒன்றோ அல்லது இரண்டு வருடங்களுகே பயன்படுத்த முடியும் எனவும் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துக்கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

இந்த விமான ஓடு பாதையை தொடர்ந்தும் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுமாக இருந்தால், இலங்கைக்கான வருமானம் பாரியளவில் இழக்கப்படுவதற்கான சாத்தியகூறுகள் தென்படுவதாகவும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

பயணிகளுக்கு சிறந்த விமான சேவைகளை வழங்கும் வகையில், விமான ஓடுபாதை நிர்மாணப் பணிகள் இந்த வருடத்திற்குள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நம்பிக்கை தெரிவித்துள்ளார். (இ)

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-03.02.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.03 | 146.03 |
| பவுண்ட் | பிரிட்டன் | 203.83 | 211.04 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 154.19 | 160.33 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 138.53 | 144.30 |
| டொலர் | கனடா | 100.11 | 104.19 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 98.63 | 103.29 |
| டொலர் | சிங்கப்பூர் | 98.81 | 102.59 |
| ரூபா | இந்தியா | 2.1129 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம். | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.8799 |
| குவைத் | டினார் | 474.9332 |
| ஓமான் | ரியால் | 373.6789 |
| கட்டார் | ரியால் | 39.5248 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3718 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1789 |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 110 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 50 | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 180 | 240 | 200 | 300 |
| தக்காளி | 50 | 60 | 50 | 80 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 40 | 40 | 40 |
| கோவா | 80 | 100 | 80 | 100 | 100 | 80 |
| கரட் | 200 | 250 | 200 | 240 | 400 | 200 |
| பூசணி | 40 | 60 | 55 | 60 | 80 | 50 |
| புடோல் | 50 | 60 | 50 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 45 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 70 | 100 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 50 | 80 | 70 | 70 |
| பாகற்காய் | 80 | 100 | 80 | 70 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 160 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | — | 80 | 80 | 70 |
| பயற்றங்காய் | 120 | 100 | 110 | 120 | 120 | 130 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 | 100 | 140 | 80 |
| பீற்றூட் | 100 | 100 | 80 | 100 | 120 | 150 |
| கறிமிளகாய் | 250 | 200 | — | 240 | 300 | 250 |
| முருங்கைக்காய் | 1000 | 600 | 500 | 800 | — | — |
| போஞ்சி | 80 | 100 | 60 | 80 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 80 | — | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 10 | 10 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 60 | 40 | 80 | 50 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 30-40 | 50 | 35-45 | 50 |
| இராசவள்ளி | 100 | 100 | 90-100 | 160 | 140 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 100 | 90 | 70 | 120 | 160 |
| முள்ளங்கி | 30 | 40 | 30 | 40 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | — | — | 100 | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## பாலசிங்கம், சந்திரஹாசன் நாடு கடத்தப்பட்டனர் 96

இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்பே சத்தியேந்திரா வெளிநாடு சென்றுவிட்டார்.

இந்த உத்தரவைத் தொடர்ந்து பாலசிங்கம், சந்திரஹாசன் ஆகியோரைச் சென்னையில் உள்ள குடியுரிமை அதிகாரி தனது பாதுகாப்பில் வைத்துக்கொண்டு அவர்கள் இருவரையும் இந்தியாவை விட்டு வெளியேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

### விமானத்தில் உண்ணாவிரதம்

இதன்படி 24.08.1985 அன்று இரவு பாலசிங்கமும் சந்திரஹாசனும் இந்தியாவில் இருந்து வெளியேற்றப்பட்டனர். பாலசிங்கம் லண்டனுக்கும் சந்திரஹாசன் அமெரிக்காவில் நியூயோர்க் நகருக்கும் ஏர் இந்தியா விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

பாலசிங்கம் பிறப்பால் இலங்கையைச் சேர்ந்தவர். என்றாலும் இங்கிலாந்து நாட்டின் குடியுரிமை பெற்று லண்டனில் வசித்து வந்தார். 1983 ஆம் ஆண்டு அவர் சென்னை வந்தார். சென்னை பெசன்ட் நகரில் ஒரு வீட்டில் மனைவி அமேலுடன் தங்கியிருந்தார். சந்திரஹாசன் அமெரிக்க குடியுரிமை பெற்றவர்.

நாடு கடத்தப்பட்டதை எதிர்த்து சந்திரஹாசன் உண்ணாவிரதம் இருந்தார். விமானத்தில் செல்லும்போதும் சாப்பிட மறுத்துவிட்டார்.

பால சிங்கம், லண்டனில் இறக் கப்பட்டார். சந்திரஹாசன் அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

அமெரிக்காவில் நியூயோர்க் நகர விமான நிலையத்தில் இறங்க வேண்டிய விமானம் பருவநிலை கோளாறு காணரமாக அங்கு இறங்காமல் பாஸ்டன் நகரில் இறங்கியது.

பயணிகள் அனைவரும் விமானத்தில் இருந்து இறங்கினார்கள். ஆனால் சந்திரஹாசன் கீழே இறங்க மறுத்துவிட்டார். விமானத்திலேயே அமர்ந்து தரண்ணா போராட்டம் நடத்தினார்.

அப்போது சந்திரஹாசன் கூறியதாவது:-

### முழு நம்பிக்கை

1983 ஆம் ஆண்டு இலங்கையில் கலவரம் மூண்ட பிறகு இந்தியாவுக்கு அகதியாக வந்தேன்.

இந்தியா வருவதற்கு முறைப்படி விசா (பயண அனுமதி) வாங்கிக் கொண்டுதான் வந்தேன். இலங்கைக்குத் திரும்பினால் என் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். எனவே இந்தியாவில் தொடர்ந்து தங்கி இருக்க என் விசாவை புதுப்பித்துக் கொண்டேன்.

மறைந்த பிரதமர் இந்திரா காந்தியிடமும் இந்திய மக்களிடமும் முழு நம்பிக்கை கொண்டிருந்தேன். அதேபோல தற்போதைய பிரதமர் ராஜீவ் காந்தியிடமும் நான் முழு நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

நான் அமெரிக்கா செல்ல விரும்பவில்லை. என் விருப்பத்திற்கு விரோதமாக இங்கே அனுப்பிவிட்டார்கள். அமெரிக்காவில் நான் அடைக்கலம் கேட்கமாட்டேன்.

இவ்வாறு சந்திரஹாசன் கூறினார்.

இலங்கைத் தமிழர்களுக்காக உலக நாடுகளில் ஆதரவு திரட்டி வருபவரும் அமெரிக்காவில் வசிக்கும் இலங்கைத் தமிழருமான டாக்டர் பஞ்சாட்சரம், சந்திரஹாசனைச் சந்தித்துப் பேசினார்.

### பாலசிங்கம் பேட்டி

லண்டனில் பாலசிங்கம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:-

என்னை இந்தியா திரும்ப அனுமதிக்காவிட்டால் இந்தியா அரசாங்கத்துடனோ இலங்கை அரசாங்கத்துடனோ விடுதலைப்புலிகள் சமரசப் பேச்சு நடத்த மாட்டார்கள்.

என்னை நாடு கடத்தியது இந்திய அரசாங்கம் செய்த பெரிய தவறு.

இதனால் இந்தியாவுக்கு எங்கள் இயக்கத்துக்கும் இடையே பெரிய இடைவெளி ஏற்பட்டுவிட்டது.

### சமரசப்பேச்சுக்கு வரமாட்டோம்

திம்புவில் நடந்த சமரசப் பேச்சில் எங்கள் தேசிய ஈழ விடுதலை முன்னணியும் கலந்து கொண்டது. என்னை இந்தியா திரும்ப அனுமதிக்கும்வரை அந்த இயக்கம் சமரசப்பேச்சுக்களில் கலந்து கொள்ளாது.

நான் விடுதலைப்புலி இயக்க ஆலோசகர். ஆகவே விடுதலைப்புலிகள் பங்கு கொள்ளும் பேச்சு வார்த்தையில் நான் பங்குபெற வேண்டியது மிகவும் அவசியம்.

பேச்சுக்கு இணக்க வேண்டும் என்ற முன் நிபந்தனையுடன் மீண்டும் என்னை இந்தியாவுக்கு அழைப்பார்கள் என்று கருதுகிறேன்.

திம்புவில் நடந்த சமரசப் பேச்சை முறித்துக் கொள்ளும் படி தமிழ்ப் பிரதிநிதிகளை நான் வற்புறுத்தியது உண்மை. இலங்கை அரசு உருப்படியான யோசனை எதையும் தெரிவிக்காததால் அவ்வாறு செய்தேன்.

இவ்வாறு பாலசிங்கம் கூறினார்.

### அமிர்தலிங்கம் வேண்டுகோள்

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தலைவர் அமிர்தலிங்கம் நிருபர்களிடம் கூறியதாவது:-

இலங்கையைச் சேர்ந்த 3 தலைவர்களை நாடு கடத்த பிறப்பித்த உத்தரவை மத்திய அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும்.



(தொடரும்)

# எமில்காந்தனுக்கு எதிராக சட்டநடவடிக்கை அவசியம்

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கியமை உட்பட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் விடுதலைப் புலிகளின் நிதி முகாமையாளர் எமில்காந்தன் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியன கோரிக்கை விடுததுள்ளன.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் நிசாந்தஸ்ரீ வர்ணசிங்க, ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட விடயத்தில் பல புலனாய்வு அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். எனினும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிடியாணைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று குற்றம் சுமத்தியுள்ளார்.

சுனாமியின் பின்னர், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியின் போது அமைக்கப்பட்ட ராடா என்ற அபிவிருத்திக்கான அமைப்பில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதியாக எமில்காந்தன் செயற்பட்டார்.

இந்தநிலையில் அவர் மீது உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நிசாந்தஸ்ரீ கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத், தமது கோரிக்கையில், விடுதலைப் புலிகளின் நிதியாள்கையில் ஈடுபட்டவர் என்ற அடிப்படையில் எமில்காந்தன் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்என்று கேட்டுள்ளார்.

வெளிநாட்டில் வசிக்கும் எமில்காந்தன் என்ற அன்டன் சமீல் லக்ஷ்மிகாந்தன் என்பவருக்கு எதிரான சிவப்பு ஆணை மற்றும் பிடியாணை என்பவற்றை கடந்த திங்கட்கிழமையன்று கொழும்பு விசேட நீதிமன்ற ஆணையாளர் ஐராங்கனி பெரேரா நீக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் எமில்காந்தன் இலங்கைக்கு திரும்பி பாதுகாப்பு தரப்பினரிடம் சரணடையவுள்ளார் என்று அவரின் சட்டத்தரணி, சுரங்க வெத்தசிங்க தெரிவித்துள்ளார். (இ)

## புதிய கட்சி குறித்து

# உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை

## துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

**புதிய கட்சி குறித்து கூட்டு எதிர்க்கட்சியினர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

மகிந்த தரப்பு தனிக்கட்சி அமைப்பது குறித்து ஊடகங்களில் வெளியான தகவல்களுக்கு பதிலளித்த போது இதனைத் தெரிவித்தார்.

அவ்ர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாக பிளவடையக் கூடிய சாத்தியம் கிடையாது. அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நிறைவேற்று சபைக் கூட்டம் நடைபெற்றது.




இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள், தனியான கட்சி அமைப்பது குறித்து ஒரு வார்த்தைகூட பேசியிருக்கவில்லை.

இன்று பல்வேறு தரப்பினரும் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். எனினும், இவ்வாறான கருத்துக்களின் காரணமாக கட்சி இரண்டாக பிளவடையக் கூடிய சாத்தியமில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வெற்றியீட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆயத்தமாக இருக்கின்றார்கள்.

இதன்படி, சிவில் அமைப்புக்கள் சிறு கட்சிகளுடன் இணைந்து எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றிலை அல்லது கை சின்னத்தில் போட்டியிட உள்ளதாக துமிந்த திஸாநாயக்க மேலும தெரிவித்துள்ளார். (இ)

## இன்று ஒரு தகவல்

### உதவி கேட்பதால் வரும் உபத்திரவங்கள்

நம்மீது மிக உயர்வான எண்ணத்தைக் கொண்டிருப்பவர்களிடம் நாம் ஒரு உதவி கேட்டுச் செல்வோமானால், நம்மீது அவர்களுக்கு இருந்த மதிப்பு சர்ரென்று இறங்கி விடுகின்றது.

ஒருவருக்கு நாம் எந்த விதத்திலும் உதவியிராத அல்லது அவர்களது அன்பைப் பெற்றிராத நிலையில், நாம் வேண்டாதவர்களாகவும் கடன்காரர்கள் போலவும் தோற்றமளிப்போம். அவர்கள் பார்வையும் இளக்காரமாய் இருக்கும்.

நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது மனிதர்களுக்கு, விரும்பி வலிய வந்து உதவும் மனப்பான்மை இருப்பதில்லை என்று நீங்கள் உறுதியாக நம்பலாம், இந்தத் தொண்ணூற்றொன்பது நபர்களுள் மிகச் சிலர் உங்கள் கட்டாயத்தின் பேரில் வேண்டா வெறுப்பாக உதவ முன்வருகின்றார்கள். அவர்களுக்கு ஏற்படும் இத்தகைய மனப்பான்மையால் கசப்புணர்ச்சியும் வேதனையும் தான் மிஞ்சுகின்றன.

மற்றவர்களை அப்படி இக்கட்டான சூழ்நிலைக்கு ஆளாக்கி, கசக்கிப்பிழிந்து உதவி பெற வேண்டும் என்கிற கட்டாயந்தான் என்ன?

பிறர் உதவியின்றி இந்தக்காலத்தில் காலந்தள்ள முடியாதே என்று இந்த இடத்தில் சிந்திக்கத் தோன்றும். இந்த உண்மையை நான் மறுக்கவில்லை.

ஆனால் நாம் மற்றவர்களிடமிருந்து பெறக்கூடிய உதவி நம்மால்– நிச்சயமாக செய்து முடிக்க இயலாததாகவும், அவசியமானதாகவும், தவிர்க்க முடியாததாகவும், உரியவர்களை இக்கட்டான சூழ்நிலைக்கு ஆளாக்காததாகவும் அவர்கள் மனமுவந்து செய்வதாகவும் இருக்க வேண்டும்.

ஒருவர் நாம் கேட்கின்ற சிறுசிறு உதவியைச் செய்து தருகிறார் என்றே வைத்துக்கொள்வோம். மறுநாள் அவர் மிகப்பெரும் உதவி ஒன்றைச் செய்து தரும்படி வருகிறார். உதவக்கூடிய மனப்பான்மை இருந்தும் அதை முடித்துக் கொடுக்கச் சூழ்நிலை இடந்தரவில்லை என்றால் நிச்சயமாக விரும்பத்தகாதவையே நிகழும்.

நம்மிடம் மதிப்பும் மரியாதையும் பிரியமும் பற்றும் பாசமும் நேசமும் நல்லுறவும் வைத்திருப்பவர்களை நாம் அதே இடத்தில் வைத்திருக்கப் பாடுபட வேண்டும். அவர்கள் வலிய வந்து பொன் முட்டை இடும் வாத்துக்கள்.

அத்தகையவர்களை உதவி (Obigation) என்னும் சக்தியைக் கொண்டு ஒரேயடியாய் அறுத்து விடுவதை விட தவறான செயல் வேறொன்றும் இருக்க முடியாது.

**லேனா தமிழ்வாணன்**

# அரசு ஐ.எஸ். குறித்து விசாரணை செய்யட்டும்

## பொதுபல சேனா சவால்

தைரியம் இருந்தால் அரசாங்கம் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர்பில் விசாரணைகளை செய்யட்டும் என பொதுபல சேனா அமைப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரி திலந்த விதானகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர, நல்லாட்சி அரசாங்கத்திற்கு முதுகெலும்பு இருந்தால் பௌத்த பிக்குகளை துரத்தாமல், ஐ.எஸ். தீவிரவாதிகள் பற்றி விசாரணை செய்யட்டும் என சவால் விடுத்துள்ளார்.

கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள ஞானசார தேரர் தொடரபில் பொலிஸாரும் பிரதமரும் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை வெளியிடுவதாக அவர் குற்றம் சுமத தியுள்ளார்.

எவ்வாறாயினும், ஞானசார தேரர் நீதிமன்றை அவமரியாதை செய்தாரா? என்பதனை நீதிமன்றம் தீர்மானிக்கும் என அவர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

ஞானசார தேரர்ஒருபோதும தன்னைப் பற்றி பேசவில்லை. மாறாக இனம், மதம், மொழி மற்றும் படைவீரர்கள் பற்றியே பேசியிருந்தார் என அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் ஞானசார தேரர் மக்கள் முன்னெடுத்துச் செல்ல முயற்சித்த எண்ணக் கருவினை நாம் அமைதியான முறையில் எடுத்துச் செல்ல வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, நாங்கள் பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு எதிராக போராட்டம் நடத்தவில்லை என குறிப்பிட்ட அவர் நாட்டையும், இனததையும், மதத்தையும் பாதுகாக்கும் நோக்கிலேயே போராடுகின்றோம் எனவும் கூறியுள்ளார்.

அத்துடன் தமது போராட்டத்தின் நோக்கம் மகிந்தவிற்கு ஆதரவான போராட்டமல்ல, படை வீரர்களை பாதுகாப்பதே எமது நோக் கமாக அமைந்துள்ளது என சுட்டிக்காட்டியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் படை வீரர்களை மறந்தாலும் எம்மால் அவ்வாறு இருக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இதேவேளை எங்களது பௌத்த பிக்குகளை பின் தொடர்ந்து செல்லாது அரசாங்கம் ஐ.எஸ். தீவிரவாதிகளின் பின்னால் செல்ல வேண்டும் எனவும் தமது அமைப்பு இனவாத அமைப்பு கிடையாது எனவும் திலந்த விதானகே மேலும் தெரிவித்துள்ளார்.(இ)



# சிறுவர் அரங்கம்

1351

# கொக்கரக்கோ!


முற்காலத்தில் சேவலுக்குத்தான் வால் பச்சை நிறத் தோகையாகவும், அதில் நீல நிற பொட்டுக்களுடனும் அழகாக இருந்தது. மயிலின் வால் சேவல் போல குட்டையாக இருந்தது.

அழகான வாலுடன் சேவல் மிடுக்காகத் திரிந்தது. மயில் சேவலைப் பொறாமையுடன் பார்த்து ஏங்கியது. சேவலின் வாலை எப்படியேனும் தான் கவர்ந்து கொள்ள வேண்டும் என்று மயில் நினைத்தது.

அதற்காகவே, மயிலும் காத்துக் கொண்டிருந்தது.

ஒருநாள்

சேவலிடம் வந்த மயில், "நண்பரே! நான் ஒரு கல்யாணத்திற்குப் போகிறேன். எல்லாரும் அங்கு அலங்



காரமாய் வருவர். நீ உன்னுடைய வாலை ஒருநாள் மட்டும் எனக்கு இரவல் கொடுக்கிறாயா?" என்று கேட்டது.

"நண்பரே! ஒருவருடைய வாலை மற்றவர் இரவல் வாங்கிச் செல்வார்களா?" என்று வியப்பாய்க் கேட்டது சேவல்.

"என்ன அப்படிக் கேட்டுவிட்டாய்? வாலை இரவல் வாங்கிச் செல்லும் வழக்கம் எல்லா இடத்திலும் நடைபெறுவது தானே? ஏன் உனக்குத் தெரியாதா?" என்று திருப்பிக் கேட்டது மயில்.

"ஓஹோ! அப்படியா நான் இதுவரை கேள்விப்பட்டதில்லை. சரி. நான் என் வாலை உனக்குத் தந்தால் அதை நீ எப்போது திருப்பித் தருவாய்?" என்று கேட்டது சேவல்.

"நான் கல்யாணத்திற்குப் போய்விட்டு வந்து உன் வாலை திருப்பித் தந்துவிடுகிறேன். நான் சொன்ன சொல் தவறாதவன்! என் நேர்மையை அக்கம் பக்கத்தில் விசாரித்துப் பாரேன்!" என்றது மயில்.

"உன் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. கல்யாணம் எப்போது முடியும்?"

"நான் போவது செல்வந்தர் வீட்டுக் கல்யாணம். அதனால் கல்யாணம் முடிய எப்படியும் இரவு ஆகிவிடும் என்று நினைக்கிறேன். அதனால் எப்படியும் பொழுது விடிவதற்குள் திரும்பி வந்து உன் வாலை உன்னிடம் கொடுத்துவிடுவேன்!" என்றது.

"ஒருநாளில் திரும்பத் தந்துவிடுகிறேன் என்று சொல்வதால், என் வாலைத் தரச் சம்மதிக்கிறேன்.

இன்று ஒருநாள் மட்டும் உன் வாலை நான் பொருத்திக் கொண்டு என் கூட்டிற்குள்ளே இருந்து கொள்கிறேன். ஆனால், நாளை பொழுது விடிவதற்குள் என் வாலை எனக்குத் திரும்பத் தந்துவிட வேண் டும். இல்லையென்றால் கோழிகள் என்னைப் பார்த்து கேலி செய்யும் நிலைமைக்கு ஆளாகிவிடுவேன்," என்று நிபந்தனை விதித்தது சேவல்.

"பொழுது விடிவதற்குள் நிச்சயமாக வாலைத் திரும்பத் தந்துவிடுவேன்," என்று உறுதி சொன்னது மயில்.

மயிலின் பேச்சை சேவல் நம்பியது. எனவே, அது தன் அழகான நீண்ட வாலை எடுத்து மயிலிடம் கொடுத்தது. மயிலும் அதற்குப் பதிலாக தன் வாலை எடுத்து சேவலுக்குக் கொடுத்தது.

சேவலும், மயிலின் வாலைத் தனக்குப் பொருத்திக் கொண்டு, கூட்டிற்குள் சென்று மறைந்து கொண்டது. மயில் சேவல் தந்த வாலுடன், புறப்பட்டுச் சென்றுவிட்டது.

பொழுது நகர்ந்தது. மாலைப் பொழுது முடிந்து, இரவுப் பொழுதும் வந்துவிட்டது.

"கல்யாணம் இந்நேரம் முடிந்திருக்கும். எப்படியும் பொழுது விடியுமுன் மயில் தன் வாலைக் கொண்டு வந்து தந்துவிடும்," என்ற நம்பிக்கையோடு சேவலும் காத்திருந்தது.

இரவுப் பொழுதும் முடிந்து, பொழுது விடியும் நேரமும் வந்தது. மயிலைக் காணவில்லை!

"என்ன இன்னும் மயிலைக் காணவில்லையே! ஒருவேளை மயிலால் நடு இரவில் புறப்பட்டு வர இயலவில்லையோ!

இருண்ட காட் டில் கண் தெரியாமல், எங்கேனும் வழிமாறிச் சென்றுவிட்டதோ!" என்று பலவாறாகச் சிந்தித்த சேவலால் நிம்மதியாக இருக்க இயலவில்லை.

(தொடரும்)

02.2016
04

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1783 - ஐக்கிய அமெரிக்கா மீது தனது அனைத்துத் தாக்குதல்களையும் நிறுத்துவதாக ஐக்கிய இராச்சியம் அறிவித்தது.
- 1789 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதியாக ஜார்ஜ் வோஷிங்டன் ஏகமனதாகத் தெரிவு செயயப்பட்டார்.
- 1794 - பிரெஞ்சுக் குடியரசு முழுவதும் அடிமைத் தொழில சட்டவிரோதமாக்கப்பட்டது.
- 1810 - கரிபியன் தீவுகளான குவாட்லூப் பிரித்தானியக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.
- 1834 - இலங்கையின் ஆங்கிலப் பத்திரிகை **சிலோன ஒப்சேர்வர்** முதன் முதலாக வெளியிடப்பட்டது.
- 1859 - கிரேக்க பைபிளின் 4ஆம் நூற்றாண்டுக் கை யெழுத்துப்படி ஒன்று எகிப்தில் கண்டு பிடிக்கப்பட்டது.
- 1936 - முதற்தடவையாக ரேடியம் E என்ற செயற்கைக் கதிரியக்க மூலகம் உருவாக்கப்பட்டது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: ஸ்டாலின்கிராட் போர் முடிவுக்கு வந்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்க ஜனாதிபதி பிராங்கிளின் ரூஸ்வெல்ட், பிரித்தானிய பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில், ரஷ்யத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் உக்ரேனில் யால்ட்டா மாநாட்டில் சந்தித்தனர்.
- 1948 - இலங்கை ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலை பெற்றது.
- 1969 - பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவராக யாசர் அரபாத் பதவியேற்றார்.
- 1978 - இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியாக ஜே. ஆர். ஜெயவர்த்தனா பதவியேற்றார்.
- 2003 - யூகொஸ்லாவியா அதிகாரபூர்வமாக "சேரபியா மற்றும் மொண்டெனேகுரோ" எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 2007 - வங்காள தேசத்தில் இடம்பெற்ற உலகின் மிகப் பெரிய கூட்டுப் பிரார்த்தனையில் 3 மில்லியனுககும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

### பிறப்புகள்

- 1913 - றோசா பாக்ஸ், ஆபிரிக்க அமெரிக்க குடியுரிமைகள் செயற்பாட்டாளர் (இ. 2005)
- 1921 - கே. ஆர். நாராயணன், இந்தியாவின் ஜனாதிபதி (இ. 2005)

### இறப்புகள்

- 1747 - வீரமாமுனிவர், இத்தாலியத் தமிழறிஞர் (பி. 1680)
- 1928 - ஹெண்ட்ரிக் லோரெண்ட்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1853)
- 1974 - சத்தியேந்திரா போஸ், இந்திய இயற்பியலாளர் (பி. 1894)

### சிறப்பு நாள்

- இலங்கை - சுதந்திர தினம்

# பாதுகாப்பு அதிகாரிகள், ஊழியர்கள் இடையே பாகிஸ்தான் விமான நிலையத்தில் மோதல்




பாகிஸ்தான் சர்வதேச ஏர்லைன்ஸ் விமான நிறுவனம் அரசுக்கு சொந்தமானது. இந்த நிறுவனத்தை தனியார்மயமாக்க பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு அந்த விமான நிறுவன ஊழியர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அரசு 'எஸ்மா' சட்டத்தை அமுல்படுத்தியது. அதன்படி அரசு ஊழியர்கள் போராட்டம் நடத்த முடியாது. மீறினால் பதவி நீக்கம் செய்யப்படுவார்கள்.

இச்சட்டம் அமுல்படுத்தப்பட்டதால் போராட்டம் கடுமையானது. கராச்சி விமான நிலையத்தில் விமான நிறுவன ஊழியர்கள் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அப்போது வன்முறை வெடித்தது. துப்பாக்கிச் சூடு நடந்தது. அதில் விமான நிறுவன ஊழியர்கள் 3 பேர் உயிரிழுந்தனர். 12 பேர் காயம் அடைந்தனர்.


இச்சம்பவத்துக்கு விமான நிறுவன ஊழியர்கள் போராட்டக் குழு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்தியதாக குற்றம் சாட்டியுள்ளனர். ஆனால் இதை பொலிஸார் மறுத்துள்ளனர்.

போராட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப் புகை குண்டுகள் வீசப்பட்டன. தண்ணீரை பீய்ச்சி அடித்தும் கூட்டத்தினர் கலைக்கப்பட்டனர். ஆனால் துப்பாக்கிச் சூடு நடத்தவில்லை. கூட்டத்தில் இருந்தவர்கள்தான் துப்பாக்கி சூடு நடத்தியிருக்கிறார்கள். விசாரணை நடத்தி உண்மை நிலை கண்டறியப்படும் என தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, நடந்த சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்து பாகிஸ்தான் சர்வதேச ஏர்லைன்ஸ் நிறுவன தலைவர் நசீர் ஜாபர் தனது பதவியை இராஜினாமா செய்தார். கடிதத்தை பிரதமர் நவாஸ் செரீப்புக்கு அனுப்பியுள்ளதாக கண்ணீருடன் தெரிவித்தார். (இ)

# தீவிரவாதத்திற்கு ஆதரவு அளிப்பதை நிறுத்துங்கள்

## செரீப்பிற்கு பாகிஸ்தான் பாராளுமன்றகுழு அறிவுரை



(இஸ்லாமாபாத்)

காஷ்மீரில் தீவிரவாத குழுக்களுக்கு ஆதரவு அளிப்பதை நிறுத்துங்கள் என்று பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப்பிற்கு அந்நாட்டு பாராளுமன்ற குழு அறிவுரை வழங்கியுள்ளது.

உலக நாடுகள் தீவிரவாதிகளை அழிக்கவேண்டும் என்று ஒன்றாக குரல் கொடுத்துவரும் நிலையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் இடையே பேதம் காட்டுகிறது. இந்தியாவிற்கு எதிரானவர்கள் எல்லாம் அவர்களது கூட்டாளி என தீவிரவாதிகளுடன் சொந்தம் கொண்டாடுகிறது. தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளித்து தொடர்ந்து, இந்தியாவிற்குள் ஊடுருவச் செய்யும் பணியினை அந்நாட்டு இராணுவத்தின் உதவியுடன் செய்து வருகிறது. இதேபோல் காஷ்மீரில் உள்ள தீவிரவாத குழுக்களுக்கும் பாகிஸ்தான் உதவிசெய்து வருகிறது என்ற குற்றச்சாட்டுள்ளது.

இந்நிலையில் காஷ்மீரில் தீவிரவாத குழுக்களுக்கு ஆதரவு அளிப்பதை நிறுத்துங்கள் என்று பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப்பிற்கு அந்நாட்டு பாராளுமன்றக்குழு அறிவுரை வழங்கியுள்ளது.

காஷ்மீரில் செயற்பட்டு வரும் தீவிரவாத குழுக்களுக்கு ஆதரவு அளிக்கும் விவகாரத்தில் பாகிஸ்தான் அரசுக்கு எதிராக, பாராளுமன்றக் குழு அறிவுரை வழங்கியுள் ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இப்பிராந்தியத்தில் வன்முறையை அடக்க இதுபோன்ற குழுக்களுக்கு எதிராக பாகிஸ்தான் அரசு செயற்பட வேண்டும் என்ற பரிந்துரையையும் பாராளுமன்ற குழு முன்வைத்துள்ளது என்று பாகிஸ்தான் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. பாகிஸ்தான் பாராளுமன்ற குழுவே இத்தகைய அறிவுரையை வழங்கியுள்ளது சற்று அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (இ)

# ரோபோக்களின் விவசாய பண்ணை

## ஜப்பான் நிறுவனம் புதுமுயற்சி

விதைப்பதை தவிர தண்ணீர் ஊற்றி வளர்த்து அறுவடை செய்வது வரை அனைத்து வேலைகளையும் ரோபோக்கள் மட்டுமே செய்யும் விவசாய பண்ணை ஒன்றை ஜப்பான் நிறுவனம் உருவாக்க முடிவு செய்துள்ளது. அடுத்த ஆண்டு முதல் 4,400 சதுர அடியில் இந்த பண்ணை செயற்பாட்டுக்கு வருகிறது. தொடர்ந்து ஜப்பானில் இளைஞர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. கடுமையான தொழிலாளர் தட்டுப்பாட்டால் தவித்து வருவதை அடுத்து ரோபோ தொழிலாளர்களை பயன்படுத்த ஜப்பான் களமிறங்கியிருக்கிறது.

அண்மையில் வெளியான ஆய்வு ஒன்றில் 2035 ஆம் ஆண்டுக்குள் ஜப்பானில் செய்யப்படும் வேலைகளில் அதிக வேலைகள் ரோபோக்கள் செய்வதற்கான வாய்ப்பு உள்ளதாக தெரியவந்துள்ளது



# ஏவுகணை பரிசோதனைக்கு தயாராகும் வடகொரியா; அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் கடும் கண்டனம்

செயற்கைக்கோள் ஏவுவதாக கூறி மீண்டும் ஏவுகணை பரிசோதனைக்கு தயாராகும் வடகொரியாவுக்கு அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஆராய்ச்சி பணிகளுக்காக செயற்கைக்கோளை ஏவ திட்டமிட்டுள்ளதால் தங்கள் நாட்டின் கிழக்கு கடற்பகுதியில் கப்பல்கள் செல்ல அனுமதிக்கவேண்டாம் என சர்வதேச கடல் அமைப்பிற்கு வட கொரியா நேற்றுமுன்தினம் அழைப்பாணை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச அணு ஆயுத பரவல் தடை சட்டத்தை மீறிய வகையில் கடந்தமாதம் சக்திவாய்ந்த ஐதரசன் குண்டை வெடித்து வடகொரியா பரிசோதனை நடத்தியது.

அந்நாட்டின் இந்த அத்துமீறலானது அமெரிக்கா, சீனா, இங்கிலாந்து, இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் கடும் எதிர்ப்பையும், ஐ.நா.சபை புதிய பொருளாதார தடையை அந்நாட்டின்மீது விதிக்க வேண்டும் என்ற வலியுறுத்தலையும் சம்பாதித்துள்ள நிலையில் வட கொரிய ஜனாதிபதியின் இந்த அதிரடி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பூமியை கண்காணிக்கவும் ஆய்வு செய்யவும் செயற்கைக் கோளை ஏவ நாங்கள் திட்டமிட்டுள்ளோம். எனவே, எதிர்வரும் எட்டாம் திகதி முதல் 25 ஆம் திகதிவரை எங்கள் நாட்டு கடற்பகுதியில் கப்பல்கள் செல்வதை தவிர்க்க வேண்டும் என சர்வதேச கடல் அமைப்பு உள்ளிட்ட ஐ.நாவின் மூன்று அமைப்புகளுக்கு வடகொரியா கடிதம் எழுதியுள்ளது.

வடகொரியாவின் தற்போதைய ஜனாதிபதியின் தந்தையான முன்னாள் ஜனாதிபதி கிம் ஜாங்-கின் பிறந்தநாளான எதிர்வரும் 16 ஆம் திகதி இந்த செயற்கைக்கோள் ஏவப்படலாம் என சர்வதேச உளவு அமைப்புகள் தகவல் அறிந்துள்ள நிலையில் வடகொரியாவின் இந்த அத்துமீறலுக்கு அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கடும்கண்டனம்தெரிவித்துள்ளன.

வடகொரியா மீது ஐக்கிய நாடுகள் சபை உடனடியாக நடவடிக்கை எடுத்து, கடுமையான பொருளாதார கட்டுப்பாடுகள் உள்ளிட்ட தடைகளை விதிக்க வேண்டும் என அமெரிக்க அரசின் வெளியுறவுத் துறை செயலாளர் ஜோன் கெரி கேட்டுக் கொண்டுள்ளார். செயற்கைக் கோளை ஏவும் போர்வையில் நீண்டதூரம் பாய்ந்து செல்லக் கூடிய நவீனரக ஏவுகணையை பரிசோதிக்க திட்டமிட்டுள்ள வடகொரியா உடனடியாக தனது முயற்சியை கைவிட வேண்டும். இல்லாவிட்டால் தனது செயலுக்கு பெரிய விலையை தர வேண்டியதாகி விடும் என தென் கொரிய ஜனாதிபதி மாளிகை எச்சரித்துள்ளது.

வடகொரியாவின் இந்த திட்டம் தொடர்பாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் கலந்துபேசி ஆலோசித்து, எங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு எதிராக அச்சுறுத்திவரும் அந்நாட்டின் திட்டத்தை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுப்போம் என ஜப்பான் பிரதமர் ஷின்ஸோ அபே தெரிவித்துள்ளார். (இ)

# மகிந்த; 2015 இல் ஆட்சியிழப்பு 2016 இல் புத்திரசோகம்



இந்த மனிதப் பிறவியில் சோகமில்லாதவன் மனிதாக வாழ முடியாது. சோகங்களும், அதன் பிரதிபலிப்புக்களும் வாழ்க்கையில் கண்டிப்பாக இருந்தே தீரும். இதனை இதிகாச புராணங்களில் இருந்து கற்று வந்திருக்கின்றோம்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு வந்த சோகமும் அப்படிப்பட்டதுதான். இலங்கையின் நிரந்தர மன்னனாக தன்னை நினைத்து வந்தவர் கடந்த ஆண்டு ஜனவரி எட்டாம் திகதி ஏற்றுக்கொள்ள முடியாத வொரு தோல்வியை, சோகத்தை சந்தித்து இருந்தார்.

ஆனால் இந்த ஆண்டு இன்னுமொரு சோகம். விடுதலைப் புலிகளை அழித்து நாட்டில் பயங்கரவாத செயற்பாடுகளை தடுத்து நிறுத்தி சிங்கள மக்களின் பாதுகாவலனாக இருந்தவருக்கு இப்படியொரு சோகத்தை மைத்திரிபால சிறிசேன கொடுப்பார் என்று அவர் நினைத்திருக்க மாட்டார்.

கடந்த ஆண்டு ஏற்பட்ட சோகம் ஆட்சியிழப்பு. இந்த ஆண்டு ஏற்பட்ட சோகம் புத்திர சோகம். ஆட்சியிழப்பைக் காட்டிலும் புத்திர சோகம் மோசமானது என்பதை அவர் இரண்டு நாட்களுக்கு முன்னர் உணர்ந்திருப்பார்.

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் செய்யும் செயலுக்கு ஏற்ப கர்ம பலன் கிடைக்கும் என்கிறது இந்துமதம்.

இராமாயணத்தில் தசரதன் தெரியாமல் செய்த செயலுக்காக கிடைத்த தண்டனை நமக்கு நினைவில் இருக்கலாம்.

அழகிய மானின் மீது ஏவிய அம்பின் வழி ரிஷியின் புதல்வனை மாய்த்தார் தசரதன். ஆசையாய் பெற்ற புதல்வன் மண்ணில் சாய்கையில், எவ்வாறு இன்று புத்திரனை இழந்து புத்திர சோகத்தில் நான் கண்ணீர் சிந்துகின்றேனோ அவ்வாறே நீயும் கண்ணீர் சிந்துவாய் என்று சாபம் இடுகின்றார் முனிவர்.

முனிவர் நினைத்திருந்தால், அடைந்த கோபத்தினால் தசரதனுக்கு ஏதோனும் சாபம் கொடுத்திருக்கலாம். இல்லையாயின் தன் கோப அக்கினியால் தசரதனை எரித்திருக்கலாம். ஆனால் நீயும் புத்திரனை பிரிந்து புத்திர சோகத்தில் தவிப்பாய் என்கிறார்.

இங்குதான் ஒரு உண்மையை இராமாயணத்தை எழுதிய வான்மீகி வைக்கிறார். ஒருவர் செய்யும் செயலுக்காக அவனை தண்டிப்பதைக் காட்டிலும், அவனின் புதல்வர்களை தண்டித்தாலே போதும். ஏனெனில் அது அவன் நேரடியாக அடையும் துன்பத்தை காட்டிலும் பெரியது என்கிற உண்மை புலப்படுகின்றது.

அந்த துன்பத்தை தான் இன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்.

இலங்கையில் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மகிந்த ராஜபக்ஷ செய்த கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல. அத்தனைக்கும் அவர் தண்டனை பெற வேண்டுமாயின் அவருக்கு இந்தப் பிறவி போதாது. ஆனால் தசரதனுக்கு நடந்த அதே சோகம்தான் இன்று மகிந்த ராஜபக்ஷவை வாட்டி வதைக்கிறது.

ஆசையாக பெற்ற புதல்வனை, கடற்படையில் சேர்த்து, வெளிநாட்டில் படிக்க வைத்து, பட்டம் பெற வைத்து, அழகு பார்த்தவருக்கு, சிறையில் போய் பார்ப்பேனோ என் மகனை என்று நினைத்திருக்க மாட்டார். அதனால் தான் கண் கலங்கி நெக்குறுகிப் போனார் மகிந்த.

யோசித ராஜபக்ஷ தொடர்ந்து சிறையில் இருப்பார். அவர் தண்டிக்கப்படுவார் என்று நினைப்பதைக் காட்டிலும், அவர் விரைவில் வெளி வருவார் என்பது தான் நிஜம். அரசியலில் இது எல்லாமே சாதாரணமானதுதான். ஆனால் மகிந்த ராஜபக்ஷ அனுபவித்த இந்த புத்திரசோகம் சொல்லில் வடிக்க முடியாத ஒன்று.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பதைப் போலவே இது நடந்திருக்கிறது. எத்தனையோ பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் இன்று வரை எங்கே என்று தெரியாமல் கண் கலங்கி, நோய்வாய்ப்பட்டு, இறுதிச் சடங்கு கூட தங்கள் பிள்ளைகளின் கரங்களினால் செய்ய முடியாமல் ஆத்மா சாந்தியடையாமல் இன்றுவரை இருக்கின்றன.

இவை யாவற்றுக்கும் மேலாக, எந்த விசாரணைகளும் இன்றி நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் கண்ணீரும், அவர்களின் அவலக் குரல்களும் மற்றவர்களை நிம்மதியாக வாழவிடாது.

இருவார காலத்திற்குள் யோசித ராஜபக்ஷ வெளியில் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இருப்பினும் மகிந்தரின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் பதில் சொல்லியிருக்கும், பெற்ற புதல்வர்களின் பிரிவின் துயரை.

என்ன செய்வது, அன்று தசரதன் அறியாமல் செய்த தவறுக்காக தன் பிள்ளையை பிரிய வேண்டியதாயிற்று. தான் செய்த தவறுக்காக மகன் வனவாசம் அனுபவித்தான். தசரதன் தாங்க முடியாத வேதனையில் உயிர் பிரிந்தது. இறுதிக் கிரியை கூட தன் ஆசை புதல்வனின் கரத்தினால் செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலை தசரதனுக்கு.

அதே நிலை இன்று மகிந்தருக்கு. என்ன தசரனின் மைந்தன் தர்மத்தை ஸ்தாபித்தார் வனத்தில். ஆனால மகிந்தரின் புதல்வர் அதர்மத்தை சாதித்தவர். மக்களின் வரிப்பணத்தை தங்கள் சுகபோக வாழ்க்கைக்காக பயன்படுத்தினார்கள். அதனால் இன்று அனுபவிக்கின்றார்கள்.

மகிந்த ராஜபக்ஷ தான் செய்த வினைக்காக தான் இன்று புத்திர சோகத்தை அனுபவிக்கின்றார். ஒருபோதும் மகிந்த ராஜபக்ஷ சிறைவாசம் அனுபவிக்க மாட்டார். ஆனால் அவரின் புதல்வர்கள் அனுபவித்தே தீருவார்கள்.

இது நடக்கும். தான் பெற்ற பிள்ளைகளின் சிறை வாழ்வைக் கண்டு மகிந்தரின் மனம் மெல்லச் சிதையும். பிள்ளைகளின் பிரிவு நிச்சயம் அவரை வாட்டும். அதுவே அவருக்கு காலனாகும். ஆயிரம் நீதிமன்றங்களில் இருந்தும் தப்பலாம். ஐக்கிய நாடுகள் சபையிலிருந்தும். விடுதலை பெறலாம். ஆனால் மக்களின் அவலக் கண்ணீரில், மக்களின் சாபத்தில் இருந்து தப்பிக்க முடியாது.

எத்தனை தடவை நான் கொல்லவில்லை, அழிக்கவில்லை, சிதைக்கவில்லை, நன்மையே செய்தேன் என்று கூறினாலும், அநீதிக்கான, அட்டூழியத்திற்கான விடைகள் கிடைக்கும். அதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்களுக்கும் இடமில்லை.

சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது போல, ஊழ்வினை வந்து உருத்தும். அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும். காலம் எல்லாத்துக்குமான விடையை வைத்திருக்கிறது.

தமிழ்த் தாய்மார் விட்டுக்கொண்டிருக்கும் கண்ணீர் மகிந்த ராஜபக்ஷவிற்கான சாபமாகவே இருக்கும். அது சாதாரண கண்ணீரல்ல. அது தான் அவரின் சிரிப்பை மெல்லச் சிதைக்கும் அக்கினி.

இன்னும் அனுபவிக்க வேண்டியது நிறையவே உண்டு. மெல்ல மெல்ல அது நடக்கும். தெய்வம் நின்று கொல்லு(ள்ளு)ம். நீதிமன்றங்களிடம் இருந்து தப்பிக்கலாம். நீதியிடமிருந்து தப்பிக்க முடியாது.

எஸ்.பி.தாஸ

# சூழலை பாதுகாப்பதற்கு நாம் ஒன்றுபட வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி அழைப்பு

(கொழும்பு)

**மனிதன் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களினதும் நல்வாழ்விற்காக சூழலை பாதுகாப்பதற்கான கூட்டுப் பொறுப்பினை மேற்கொள்வதற்கு அனைத்து தரப்பினரும் ஒன்றுபடல் வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார்.**



ஒட்சிசன் பையினை கழுத்தில் தொங்க வைத்து செல்லும் அளவிற்கு சூழலை நாசம் செய்யும் ஓர் சீரற்ற நிலைமையினை இன்று மனிதன் எதிர்கொண்டுள்ளான் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி சூழலை பாதுகாப்பதற்கான காலத்தின் தேவையானது நம் அனைவரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தப் பொறுப்பினை எவராலும் தட்டிக் கழிக்க முடியாதெனவும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சிலாபம் காக்காப்பள்ளியில் இடம்பெற்ற உலக ஈரநில தின தேசிய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

"நிலையான வாழ்வாதாரத்தை நோக்கி எதிர்கால தலைமுறைக்காக ஈர நிலங்களை பாதுகாப்போம்" எனும் நிகழ்ச்சித்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவ்வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, ஈர நிலங்கள் உட்பட இயற்கை வளங்களை பாதுகாப்பது தொடர்பில் இன்று முழு உலகமும் கவனம் செலுத்துவதாகத் தெரிவித்தார். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உள்ளிட்ட உலக அமைபபுக்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் இது தொடர்பில் இன்று கூடுதல் கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்த ஜனாதிபதி, சர்வதேச நியதிச்சட்டங்களுக்கு அமைவாகவும் அரச கொள்கைக்கு அமைவாகவும் இயற்கை வனப்பினை பாதுகாத்து சூழலை பேணுவதற்கு தற்போதைய அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக தெரிவித்தார்.

ரம்சா ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள உலக நாடுகள் ஆண்டுதோறும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி உலக ஈர நில தினத்தைக் கொண்டாடுகிறது. இலங்கையிலும் ஆண்டு தோறும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி உலக ஈரநில தினம் அரச வைபவமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

ஈரநிலங்கள் மூலம் கிடைக்கப்பெறும் சேவைகள், உயிர் பல்வகைமையினை பாதுகாத்தல், ஆகியவற்றுக்கான பங்களிப்பினை அடிப்படையாகக்கொண்டு 1971 ஆம் ஆண்டில் ஈரான் நாட்டின் ரம்சா நகரத்தில் சுமார் 50 நாடுகளின் பங்கேற்புடன் இடம்பெற்ற சர்வதேச மாநாட்டின்போது ஈரநில பாதுகாப்புக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதுடன், அது ஈரநில பாதுகாப்புக்கான ரம்சா ஒப்பந்தமென அழைக்கப்படுகிறது. இன்று இவ் ஒப்பந்தத்தில் சுமார் 169 நாடுகள் கைச்சாத்திட்டுள்ளதுடன், இலங்கை 1990ஆம் ஆண்டு கைச்சாத்திட்டது.

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட ஈரநில ஓவியம் 2016 சித்திரப் போட்டியில் வெற்றிபெற்ற ஓவியங்களை இதன்போது ஜனாதிபதி பார்வையிட்டதுடன், வெற்றியீட்டிய வெற்றியாளர்களுக்கான விருதுகள் ஜனாதிபதியினால் வழங்கி வைக்கப்பட்டன.

ஈரநில நினைவு முத்திரை வெளியீடும் இதன்போது மேற்கொள்ளப்பட்டதுடன், முதலாவது முத்திரையினை தபால் அதிபர் ஜனாதிபதியிடம் கையளித்தார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வெளியிடப்பட்ட "ஈர நில வனப்பு" நூலின் மூன்றாம் பதிப்பு உள்ளிட்ட நூல்கள் சிலவும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

ஜனாதிபதி உள்ளிட்ட அதிதிகளினால் கண்டல் தாவரங்களும் நடப்பட்டன.

அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா, இராஜாங்க அமைசசர்களான பிரியங்கர ஜயரத்ன, பாலித ரங்கே பண்டார, பிரதி அமைச்சர் அனுராத ஜயரட்ன, கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்ணாந்து, வடமேல் மாகாண முதலமைச்சர் தர்மசிறி தசநாயக்க, பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டிஆரச்சி, சுற்றாடல் மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் லால் மர்வின் தர்மசிறி ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். (இ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 623

கருணை அம்மா




ராமச்சந்திரன்




லவன் சிவா





ராகுலன் பாலா




சீலன் பாலா




கரோலின் கெனி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஆட்டம் காண்கிறது அவுஸ்திரேலியாவின் அத்திபாரம்; நியூசிலாந்துடனான முதலாவது போட்டியில் படுதோல்வி





அவுஸ்திரேலியா- நியூசிலாந்து அணிகள் மோதும் முதல் ஒரு நாள் போட்டி ஆக்லாந்தில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய தலைவர் சுமித் பந்து வீச்சை தேர்வு செய்தார். நியூசிலாந்து அணி தொடக்கம் அதிரடியாக இருந்தது.

11 ஆவது ஓவரில் 79 ஓட்டங்கள் எடுத்தது. அணித்தலைவர் மெக்குல்லம் 29 பந்தில் 5 பவுண்டரி, 3 சிக்சருடன் 44 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். மற்றொரு தொடக்க வீரர் குப்தில் சதத்தை தவறவிட்டார். அவர் 76 பந்தில் 90 ஓட்டங்கள் எடுத்து 'ரன் அவுட்' ஆனார். இதில் 8 பவுண்டரியும், 5 சிக்சரும் அடங்கும். பின்னர் வந்த வீரர்களில் நிக் கோலஸ் 61 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார்.

நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 307 ஓட்டங்கள் குவித்தது. சான்டெர் 39 பந்தில் 35 ஓட்டங்கள் (1 பவுண்டரி, 2 சிக்சர்) எடுத்தார். ஹாஸ்லேவுட், பல்க்னெர், மிச்சேல் மார்ஷ் தலா 2 விக்கெட் கைப்பற்றினர்.

308 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் அவுஸ்திரேலிய அணி களம் இறங்கியது.

ஆனால் அவுஸ்திரேலிய அணி இரண்டாவது ஓவரிலேயே மார்ஷ் விக்கெட்டை 5 ஓட்டங்களை ஹென்றி வீழ்த்தினார். அதனை தொடர்ந்து அவுஸ்திரேலிய அணியின் விக்கெட்டுக்கள் வீழ்ந்த வண்ணம் இருந்தன. அதிரடி ஆட்டக்காரர் வோர்னர் 12 ஓட்டங்களிலும், அணித்தலைவர் சுமித் 18 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். பெய்லி 2 ஓட்டங்களில் விக்கெட்டை பறிகொடுக்க, மக்ஸ்வெல், மார்ஷ் டக்-அவுட் ஆகினர்.

இதனால் அவுஸ்திரேலிய அணி 8.6 ஓவர்களில் 41 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து திணறியது. இதனையடுத்து விக்கெட் கீப்பர் வாடேயும், பாக்னரும் இணைந்து நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் அந்த அணியின் ஓட்டவிகிதம் உயர்ந்தது. இதனால் 17.1 ஓவர்களில் அவுஸ்திரேலிய அணி 100 ஓட்டங்களை எட்டியது.

ஆனால் 20.1 ஓவர்களில் 120 ஓட்டங்கள் எடுத்திருந்த போது இந்த ஜோடியும் பிரிந்தது. வாடே 37 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவரை தொடர்ந்து அடுத்த ஓவரிலேயே பாக்னர் தனது விக்கெட்டை பறி கொடுத்தார். அவர் 33 பந்துகளில் 36 ஓட்டங்கள் எடுத்தார். இதனால் அவுஸ்திரேலிய அணி 148 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

நியூசிலாந்து அணி 159 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அந்த அணியில் அபாரமாக பந்து வீசிய போல்ட், ஹென்றி தலா 3 விக்கெட்டுக்களை சாய்த்தனர். சாண்டர் 2 பந்துகளை மட்டுமே வீசி கடைசி கட்டத்தில் 2 விக்கெட்கள் எடுத்தார்.

இதனால் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் நியூசிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

## விக்ரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த கிரிக்கெட் இன்று ஆரம்பம்



வளர்மதி முன்னேற்றக் கழகத்தினால் வருடாவருடம் நடத்தப்படும் விக்ரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுத் தொடர் இன்று வியாழக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இத் தொடரில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி, ஹாட்லியைற்ஸ் அணி, பல்கலைக்கழக அணி, ஜொலிஸ்ரார் அணி ஆகிய நான்கு அணிகள் தொடரில் பங்கு பற்றுகின்றன.

இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறும் முதல் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியும் பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஹாட்லியைற்ஸ் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியும் மோதவுள்ளன. (க)

## மெஸ்ஸியின் குட்டி ரசிகருக்கு கிடைத்த அதிர்ச்சி பரிசு



சொப்பின் பை சட்டையுடன் விளையாடிய ஆப்கான் சிறுவனை சந்தித்து பரிசுகள் வழங்கியுள்ளனர் மெஸ்ஸியின் நண்பர்கள்.

ஆப்கானிஸ்தானில் உதைபந்தாட்டத்தில் ஆர்வம் கொண்ட 5 வயதான முர்டாஸா அகமதி பார்சிலோனா உதைபந்தாட்ட வீரர் மெஸ்ஸியின் தீவிர ரசிகர். மெஸ்ஸியின் ஜெர்ஸி வாங்கித் தருமாறு கேட்ட சிறுவனுக்கு அவரது சகோதரன் சொப்பின் பையாலான ஜெர்ஸி ஒன்றை தயாரித்து கொடுத்துள்ளார்.

இந்நிலையில் இதுகுறித்து தகவல் அறிந்த மெஸ்ஸியின் தந்தை ஜார்ஜ் மெஸ்ஸி, சிறுவன் முர்டஸா அகமதிக்கு உதவி செய்ய விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சிறுவன் முர்டஸா அகமதியை சந்திக்க லயோனல் மெஸ்ஸி ஆர்வமாக உள்ளதாகவும் இவர்கள் சந்திப்பு விரைவில் நடைபெறும் என ஆப்கானிஸ்தான் உதைபந்து சங்கம் அறிவித்திருந்தது. இதற்கிடையே மெஸ்ஸியின் பி.ஆர் நிறுவனத்தை சேர்ந்த சிலர் அகமதியை சந்திக்க ஆப்கானிஸ்தான் வந்தனர். அப்போது பரிசாக அகமதிக்கு புதிய ஜெர்சியும், உதைபந்தும் வழங்கப்பட்டது. இதனை அணிந்து கொண்ட அகமதி துள்ளிக் குதித்து விளையாடினான்.

## டோனிக்கு எதிராக விளையாட வேடிக்கையாகவுள்ளது-ரெய்னா



இருபது-20 உலக கிண்ணத்திற்கான இந்திய அணி மிகச் சிறப்பாக அமைந்துள்ளது எனவும், ஐபிஎல் போட்டிகளில் டோனிக்கு எதிராக விளையாடுவது வேடிக்கையானது எனவும் சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இருபது-20 போட்டிகள் மூன்றிலும் வெற்றி பெற்று இந்தியா தொடரை வென்றது.

இந்நிலையில் இதுகுறித்து சுரேஷ் ரெய்னா கூறுகையில், அவுஸ்திரேலியாவை சொந்த மண்ணில் வீழ்த்துவது முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த வெற்றியின் மூலம் உலகக் கிண்ண இருபது-20 தொடரில் இந்திய அணிக்கு கூடுதல் சாதகம் ஏற்பட்டுள்ளது, இந்த போட்டிகளில் துடுப்பாட்ட வரிசையில் களமிறங்குவது அவசியம்.

இருபது-20 போட்டிகளுக்கான உலகக் கிண்ணத் தொடருக்கு இந்திய அணி மிகச்சிறப்பாக அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். 9 ஆம் தொடரில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள ராஜ்கோட் அணிக்கு குஜராத் லயன்ஸ் என பெயரிடப்பட்டுள்ளது. இந்த அணிக்கு சுரேஷ் ரெய்னா அணித் தலைவராகவும், அவுஸ்திரேலிய வீரரான பிராட் ஹாட்ஜ் தலைமை பயிற்சியாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து அவர் கூறுகை யில், நானும் டோனியும் எதிரணி வீரர்களாக இருப்பது பற்றி பேசிக் கொண்டோம், டோனி ஆட்டமிழந்த பின் ஜடேஜா துள்ளிக் குதிப்பதையும், நான் விளையாடும் போது டோனி விக்கெட் கீப்பராக இருப்பதையும் எண்ணிப் பாருங்கள் என வேடிக்கையாக தெரிவித்துள்ளார்.







விளையாட்டு மற்றும் உடல் ஆரோக்கிய விருத்தி வாரத்தினை முன்னிட்டு 30.01.2016 அன்று தென்மராட்சி பிரதேச செயலக விளையாட்டுப் போட்டிகள் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற போது...

மனச்சாட்சியைக் கொல்லக்கூடாது
அது ஆத்மாவின் நாடித்துடிப்பாகும்
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பாலச்சந்திரன் - இளைஞன் யோஷித - குழந்தை

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தில் யோஷிதவின் கைது அவர் சார்ந்தவர்களை வறுத்தெடுத்துள்ளது. அரசியல் சார்ந்த ஒருவரைக் கைது செய்து சிறையில் அடைப்பது என்பது பாரதூரமான செயலன்று.

இருந்தும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷவின் கைது மகிந்த குடும்பத்தில் மிகப்பெரும் அதிர்ச்சியை – தாக்கத்தை – ஏக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதற்குக் காரணம் தனித்து யோஷிதவின் கைது மட்டுமல்ல; மாறாக யோஷிதவை கைது செய்ததன் மூலம் மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தில் சட்டம் பாயத் தொடங்கிவிட்டது. இனி இந்த நாட்டில் போர் வெற்றி கொண்டாடிய மகிந்த ராஜபக்ஷவும் எந்நேரமும் கைது செய்யப்படலாம் என்பதேயாகும்.

இதனாலேயே யோஷித ராஜபக்ஷவின் கைது மகிந்த குடும்பத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது ஒருபுறம் இருக்க, ஒரு குழந்தையை கைது செய்து சிறையில் அடைப்பது அரசியல் பழிவாங்கல் என முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறிய கருத்துதான் இன்றைய மிகப்பெரும் அதிசயத் தகவல்.

தங்கள் குடும்பத்து இளைஞன் ஒருவன், அதுவும் கடற்படையில் அதிகாரி தரத்தில் இருக்கக் கூடிய ஒருவரை கைது செய்தபோது அவரைக் குழந்தை என்று கோத்தபாய கூறியது தான் வேடிக்கையும் விசித்திரமும் ஆகும்.

ஒருவருக்கு எத்தனை வயதாயினும் அவரின் பெற்றோர்களுக்கு பிள்ளைகள் குழந்தைகள் தான் என்ற பாசத்தை நாம் இங்கு எந்தவகையிலும் கொச்சைப்படுத்தவில்லை.

ஆனால் அதே நினைப்பு எல்லாப்பிள்ளைகள் மீதும் இந்த நாட்ட ஆண்ட மகிந்த ராஜபக்ஷவுக்கும் அவர் சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இருந்திருந்தால் யோஷிதவை குழந்தை என்று கூறியதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால் இவர்களின் ஆட்சியில் நடந்தது என்ன? பதினொரு வயதான பாலச்சந்திரனை படையினர் கூட்டிச்சென்று தங்களுடன் வைத்திருந்து உண்பதற்கு பிஸ்கெட் கொடுத்தபோது,

எல்லாவற்றையும் இழந்த அந்தக்குழந்தை படையினரின் செயலை தனக்கான ஆறுதலாக நினைத்த போது அந்தோ! என்ன செய்தீர்கள்?

பதினொரு வயதுப் பாலகன் மீது எந்த அரக்கனும் இரக்கம் கொள்வான். ஆனால் உங்களுக்கு மட்டும் ஏன்? அ ந்த இரக்கம் வரவில்லை.

தமிழ்க் குழந்தை என்பதாலா? அல்லது உங்கள் ஏதிலர் படைத் தலைவனின் குழந்தை என்பதாலா? உங்களுக்கு உங்கள் பிள்ளை குழந்தை என்றால், மற்றவர்களுக்கும் அவரவர் பிள்ளைகள் எந்த வயதிலும் குழந்தைகள் தானே!

அப்படியாயின் அவர்களைக் கொன்றது; காணாமல் போகச்செய்தது; கடத்தியது ஏன்? எதற்காக? அந்த நிகழ்வுகள் நடந்தபோது அந்தப் பெற்றோர்களின் வலி எப்படியிருந்திருக்கும் என்பது இப்போது தெரிகிறதா?

அட! இது வலியல்ல. வலி ஊசிக்கு முன்பாக சோதனை ஊசி. இனித்தான் வலி ஊசி ஏற்றப்படும்.

எதுவாயினும் இந்த நாட்டின் 68ஆவது சுதந்திர தினத்தில் முன்னாள் ஜனாதிபதி ஒருவரின் மகன் சிறையில் என்பதை இந்த நாட்டின் மக்கள் ஒரு கணம் நிதானமாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

# யோஷிதவை பார்வையிட கட்டுப்பாடுகள் விதிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷவை பார்வையிட வருபவர்களுக்கு கொழும்பு வெலிக்கட சிறைச்சாலை கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த கட்டுப்பாடுகள் விதிக்கப்படவில்லை.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள யோஷித ராஜபக்ஷவை பார்த்து நலன் அறியும் நோக்கில் கடந்த சில தினங்களாக பெரும் எண்ணிக்கையிலானோர் சிறைச்சாலைக்கு விஜயம் செய்துள்ளனர்.

தற்போது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் காரணமாக யோஷித ராஜபக்ஷவை ஒரு நாளில் மூன்று பேர் மாத்திரமே பார்வையிடமுடியும் என சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் துஷார உப்புல் தெனிய தெரிவித்துள்ளார்.

யோஷித ராஜபக்ஷவை காண நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பெரும்பாலானோர் சிறைச்சாலைக்கு சென்றிருந்த நிலையில் அவர்களில், நாடாளுமன்ற உறுப்பினர்களை தவிர ஏனையோர் சிறைச்சாலை அதிகாரிகளினால் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர். (இ)

# 'கடவுளின் பெயரால் போய்த்தொலை'

## ஒரு இலட்சம் தேங்காய்கள் உடைத்து அரசுக்கு சாபம் கொடுக்க வழிபாடு

(கொழும்பு)

கடவுளின் சாபத்தை அரசாங்கத்தின் மீது செலுத்துமாறு கோரும் வகையில் ஒரு லட்சம் தேங்காய்களை தேவாலயத்தில் உடைக்க கூட்டு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

"கடவுளின் பெயரால் போய்த் தொலை" எனும் தலைப்பில் இந்த தேங்காய் உடைப்பு சாபம் கொடுக்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

தென்னிலங்கையின் புகழ்பெற்ற பௌத்த தேவாலயமான சீனிகம தேவாலயத்தில் இந்த தேங்காய் உடைப்பு நிகழ்வு நாளை மறுதினம் தொடங்கப்படவுள்ளது. அதன் பின்னர் இலங்கையின் பல பாகங்களிலும் காணப்படும் தேவாலயங்களில் இந்த நிகழ்வு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

அத்துடன் இவ்வாறு உடைக் கப்படும் தேங்காய்களை சேகரித்து எண்ணெய வடித்து அதனையும் தேவாலயங்களுக்கு பூஜை செய்ய கூட்டு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியின் சார்பில் அதன் தலைவர் தினேஷ் குணவர்த்தன இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். (இ)

# சித்திர முகாம்

சி.சி.எச். நிறுவனமானது விடுமுறை கால சித்திர முகாம ஒன்றை நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு மற்றும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கும் இல.15, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள சி.சி.எச். நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வள நிலையங்களை வடிவமைப்பதில் நிபுணத்துவம் பெற்ற றோபேட் மார்க்கி இந்த சித்திரமுகாமில் கலந்து கொண்டு சிறுவர்களுக்கு சிநேகிதமான சூழலாக மாற்றும்செயற்பாடானமோஷக் சித்திரம் (drawing mosaic) பற்றி விளக்கமளிக்கவுள்ளார். 13 வயதிற்கு மேற்பட்ட ஆர்வமுள்ளவர்கள் இத்துறையில் கலந்து கொள்ள முடியும். பங்குபற்ற விரும்புவர்கள பதிவுகளை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலதிக தகவல்களுக்கு 021 720 0278, 077 715 4718 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளலாம். (இ)

# வட மாகாணத்தில் பறவை ஆய்வியல்

சி.சி.எச். நிறுவனமானது வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் இயற்கை ஊக்குவிப்பு கழகத்தினூடாக (Nature Appreciation Club-NAC) பல்வேறு விதமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

இத்தனடிப்படையில் சி.சி.எச். மற்றும் கொழும்பு பல்கலைக்கழக விலங்கியல் துறையின் இலங்கை" களப் பறவையியல்குழுவும் (fogsl) இணைந்து பறவை ஆய்வியலை ஒவ்வொரு வருடமும் மேற்கொண்டு வருகின்றன. இவ் வருடமும் இன்று தொடக்கம் 7 ஆம் திகதி வரை பறவை ஆய்வு நடைபெறவுள்ளது.

இவ் ஆய்வியலில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆர்வமுடையவர்கள் கலந்து கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு 077 265 8002 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும்.(இ)

# மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வட மாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

அந்தவகையில் 05.02. 2016 வெள்ளிக்கிழமை யாழ். பிரதேசத்தில் நாச்சிமார் கோவிலடி, இலந்தைக் காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி, ஆலடி, நெடியகாடு, அச்செழுப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் சாம்பல் தோட்டம் கிராமம் ஆகிய இடத்திலும் மன்னார் பிரதேசத்தில் மணல்குளம், சூரியகட்டைக்காடு ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)



# சத்திய தரிசனம்

## நல்லவரிடம் நட்புக்கொள்

❖ நல்லவர்களுடன் நட்பு கொள்ளுங்கள். நல்லறிவு தரும் நூல்களைப் படியுங்கள்.

❖ பக்தி என்பது உணவுடன் தொட்டுக் கொள்ளும் ஊறுகாயாக இருக்கக்கூடாது. சத்து நிறைந்ததாக இருக்க வேண்டும்.

❖ நாக்கைக் கட்டுப்படுத்தினால் உள்ளத்தையும், உடலையும் எளிதாக வசப்படுத்த முடியும்.

❖ இஷ்ட தெய்வம் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதில் மனம் ஒன்றி தினமும் வழிபடுங்கள்.

❖ கடமை தவறாமை, தர்மவழியில் நடத்தல் ஆகிய இரண்டையும் பின்பற்றினால் கடவுளை எளிதாக அடைய முடியும்.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## தோப்புக்கரணம் போடுவதற்கு காரணம் என்ன?

முன்பெல்லாம் தோப்புக்கரணம் போடுவது பாடசாலைகளில் மிகச் சாதாரணமான விடயம். தவறு செய்தாலோ, வீட்டுப்பாடம் எழுதி வராவிட்டாலோ, ஆசிரியர்கள் மாணவர்களை தோப்புக்கரணம் போட வைப்பார்கள். அது ஒருவகை தண்டனை எனவும் சொல்லலாம். யாரையாவது தோப்புக்கரணம் போட வைத்தால் போதும் ஏனைய

பிள்ளையார் முன்பு தோப்புக்கரணம் போடுவதும் உண்டு. தோப்புக்கரணம் என்றால் என்ன என இன்றைய தலைமுறை கேட்டால் ஆச்சரியப்படத் தேவையில்லை. ஏனெனில் இப்போது தோப்புக்கரணம் போடுவதை அதிகமாகக் காணமுடிவதில்லை. அந்தப் பழக்கம் படிப்படியாகக் குறைந்து முற்றிலும் மறைந்துவிட்டது என்றே கூறலாம். கடவுளின் முன்பு தோப்புக்கரணம் போடுபவர்கள் கூட முழுமையாக போடுவதில்லை. காதுமடல்களைப் பிடிப்பதுமில்லை.முழுவதுமாக கீழே குனிவதுமில்லை. அவசர உலகத்தில் தோப்புக்கரணம் கூட "அவசரக் கரண"மாக மாறிவிட்டது.ஆனால் தோப்புக்கரணத்தின் மகிமையை அமெரிக்கர்கள் புரிந்துகொண்டனர்.

தோப்புக்கரணத்தை ஆராய்ந்த நிபுணர்கள், இந்த எளிய உடற்பயிற்சியின் மூலம் மூளையின் செல்களும், நியூரான்களும் புத்துணர்ச்சி அடைகின்றன எனக் கண்டுபிடித்துள்ளனர்.தோப்புக்கரணம் போடும்போது காதுகளைப் பிடித்துக் கொள்வதால், முக்கிய அக்குபஞ்சர் புள்ளிகள் தூண்டப்படுகின்றன. இதனால் மூளையின் நரம்பு மண்டல வழிகளில் சக்தி வாய்ந்த மாற்றங்கள் நிகழ்கின்றன. இடது கையால் வலது காதையும், வலது கையால் இடது காதையும் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து எழும்போது, மூளையின் இரு பகுதிகளும் பலன் அடைகின்றன.தோப்புக்கர்ணம் போடுவதால் ஏற்படும் மாற்றங்களை கருவியின் உதவி கொண்டு ஆராய்ந்துள்ளனர். அதில் மூளையில் நியூரான்களின் செயல்பாடுகள் அதிகரிப்பதை கண்டுபிடித்துள்ளனர். மூளையின் வலது, இடது பாகங்கள் சமமான சக்திகளை அடைகின்றன. மூளைக்கு தகவல் அனுப்பும் காரணிகளும் வலுப்பெறுகின்றன. "ஆட்டிஸம்" போன்ற மன இறுக்கம் சம்பந்தப்பட்ட நோய்களுக்குக்கூட தோப்புக்கரணத்தை அமெரிக்க டாக்டர்கள் பரிந்துரைக்கிறார்கள்.

தோப்புக்கரண பயிற்சியை தினமும் மூன்று நிமிடங்கள் செய்தால், வியக்கத்தக்க மாற்றங்களைக் காணலாம் எனவும் அவர்கள் அறிவுறுத்துகின்றனர். எனவே விநாயகர் வழிபாட்டில் தோப்புக்கரணம் இடம்பெறுவது உடல்நலத்திற்கு ஏற்றது என்பது அறிவியல் பூர்வமாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது.எனவே வயது வேறுபாடின்றி தோப்புக்கரணம் போடுங்கள், உங்கள் பிள்ளைகளையும் போடவையுங்கள். தோப்புக் கரணத்தால் நன்மைகள் ஏராளமே அன்றி அது சிரிக்கவைக்கும் விடயமல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

# தமிழ் சினிமா வரலாறு

## 91 மாபெரும் வெற்றிப்படம் ஸ்ரீவள்ளி

ஸ்ரீவள்ளியின் மகத்தான வெற்றியைத் தொடர்ந்து காஷ்மீருக்குச் சென்றார் ஏவி.எம். அங்கு சில நாட்கள் ஓய்வு எடுத்துவிட்டு சென்னைக்குத் திரும்பினார்.

இங்கே அவருக்குப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. பிரகதி ஸ்டூடியோவின் பாகஸ்தர்கள் ஸ்டூடியோவை விற்றுவிட்டு படத்துறையை விட்டு விலகி, வேறு தொழிலில் ஈடுபட முடிவு செய்திருந்தார்.

பிரகதி ஸ்டூடியோவில் எடுத்த படங்கள் எதுவும் தோல்வியடையவில்லை. ஸ்ரீவள்ளி மகத்தான வெற்றியைப்பெற்றிருந்தது. அப்படியிருந்தும் என்ன காரணத்தாலோ, ஸ்டூடியோவை விற்றுவிடத் தீர்மானித்தார்கள்.

ஏவி.எம்.இதற்கு சம்மதிக்கமாட்டார் என்று அவர்களுக்குத் தெரியும். எனவே, அவர் காஷ்மீரில் இருந்த சமயத்தில் ஸ்டூடியோவை 7 இலட்சத்துக்கு விலை பேசி முடித்துவிட்டார்கள்.

(பிரகதி ஸ்டூடியோ 1 லட்சம் செலவில் ஆரம்பிக்கப்பட்டது)

ஸ்டூடியோவை விற்க எல்லா ஏற்பாடுகளும் முடிந்து விட்டதால் மெய்யப்ப செட்டியார் வேறு வழியின்றி அதற்கு சம்மதித்தார்.


அதிக லாபம் கிடைக்கும் என்று நினைத்த பாகஸ்தர்கள், பிறகு ஏமாந்து போனார்கள். 7 லட்சத்துக்கு விலை பேசி வாங்கியவர்கள், முதலில் கொடுத்தது 1 லட்சம் தான். மீதித் தொகைக்கு புரோ நோட்டு எழுதிக் கொடுத்துவிட்டார்கள். பதினைந்து வருடம் கழித்து 1 1/2 லட்சம் கொடுத்தார்கள். ஆகக் கிடைத்தது 2 1/2 லட்சம்தான்!

**புதிய ஸ்டூடியோ**

பிரகதி ஸ்டூடியோ கைவிட்டுப்போனதால் ஏவி.எம். வருத்தம் அடைந்தாலும் தளர்ந்து போய்விடவில்லை. இனி யாருடனும் கூட்டு சேராமல் சொந்தமாகப் புதிய ஸ்டூடியோ தொடங்குவது என்ற முடிவுக்கு வந்தார்.

உலகப்போர் காரணமாக சென்னையில் மின்சார வெட்டு அமலில் இருந்தது. புதிதாகத் தொடங்கும் ஸ்டூடியோவுக்கு மின்சாரம் கொடுக்க முடியாது என்று மின்சாரத் துறையினர் கூறிவிட்டார்கள்.

எனவே, சொந்த ஊரான காரைக்குடியில் ஸ்டூடியோவை அமைக்கத் தீர்மானித்தார். தேவகோட்டை ஜமீன்தார் சோமநாதன் செட்டியார், ரெயில்வே ஸ்டேஷன் அருகில் ஒரு நாடகக் கொட்டகை கட்டியிருந்தார். அங்கு நவாப் ராஜமாணிக்கம் நாடகங்கள் நடத்தி வந்தார். அதைச் சுற்றி நாடகங்கள் நடத்தி வந்தார். அதைச் சுற்றி 20 கிரவுண்டு காலி இடமும் இருந்தது.



காரைக்குடியில் ஏவி.எம். ஸ்டூடியோ

ஜமீன்தாரிடம் சென்று நாடக கொட்டகையை வாடகைக்குக் கேட்டார் ஏவி.எம்.


நாடகக் கொட்டகைக்கு 2 ஆயிரம் ரூபாய் காலி இடத்துக்கு ஆயிரம் ரூபாய் என்று வாடகைக்குக்கொடுக்க சம்மதித்தார் ஜமீன்தார்.

நாடகக் கொட்டகை ஏவி.எம்.ஸ்டூடியோஸ் என்ற பெயரில் சினிமா ஸ்டூடியோவாக மாறியது.

காலி இடத்தில் நடிகர்- நடிகைகள் தங்குவதற்காகவும் அலுவலகங்களுக்காகவும் நாற்பது ஐம்பது கீற்றுக் கொட்டகைகள் போடப்பட்டன.

(தொடரும்)

# தற்கால சர்வதேச அரசியல் பொருளாதார நோக்கு



இந்தியாவுக்கான அமெரிக்க உதவிகள் பிராந்திய மட்டத்தில் சீனாவு டன் சமநிலைப்படுத்தல் என்பதையே மையமாக கொண்டது. சீன தலையீடும் செல்வாக்கும் தெற்காசிய நாடுகளில் அதிகரித்திருக்கிறது. இதனால் தெற்காசிய நாடுகள் இந்திய - அமெரிக்க கூட்டுக்குள் அடங்காது கை நழுவிப்போவதை தடுப்பதிலே மிகவும் பிரயத்தனம் எடுக்கப்படுகிறது.

பிராந்திய அளவிலும் உலகப் பரப்பரப்பிலும் மேற்கின் கடல் போக்குவரத்தில் அதிகாரம் செலுத்தும் நீண்ட கால பண்பை மாற்றியமைக்கும் சக்தியாக உள்ள சீன-பாகிஸ்தானிய பொருளாதார பாதை ஒப்பந்தம் ஆட்ட- மாற்றீட்டு சக்தி கொண்டதாக அமையும்.

இந்தியாவின் இந்து சமுத்திர ஆதிபத்தியம் குறித்த வளர்ச்சியில், அமெரிக்கா முக்கிய பங்கு வகிக்கிறது. கடந்த ஆண்டு ஜனவரி மாத இறுதியில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அவர்களின் இந்திய பயணத்துடன் பொது மக்கள் பாவனைக்கு உரிய அணுதொழில்நுட்ப ஒப்பந்தம் ஏற்படுத் தப்பட்டது. இதன் பிரகாரம் அமெரிக்க அணு மின் உற்பத்தி தொழில்நுட்பம் இந்தியாவுக்கு கொண்டு வருவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

இந்தியாவுக்கு புதிய உயர்தர யுத்த விமானமான F-35 விமானங்களையும, F-16, F-18 ரக விமான்ங்களும் பல்வேறு விதமான பாதுகாப்பு உபகரணங்களும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது.

பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் ஆட்சி அதிகாரத்தை பெற்று கொண்டதிலிருந்து இந்தியாவின் கருத்துருவமே மாறிவிட்டது என பல ஆய்வாளர்கள் எழுதி வருகின்றனர். அதிவேகமாக முன்னேறிவரும் இந்திய பொருளாதாரத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் இந்த வளர்ச்சி வேகத்திற்கு ஏற்றாற்போல், இந்தியா சமூக தேவைகளுக்கான அணுமின் உற்பத்தி செய்வதற்கான வர்த்தக அனுமதியைப் பெற சர்வதேச அணுசக்தி நிறுவனத்திடம் அமெரிக்கா அழுத்தம் பிரயோகித்து அந்த அனுமதியை பெற்றுக் கொடுத்தது.

இந்தியாவுக்கான அமெரிக்க உதவிகள் பிராந்திய மட்டத்தில் சீனாவுடன் சமநிலைப்படுத்தல் என்பதையே மையமாக கொண்டது. சீன் தலையீடும் செல்வாக்கும் மிகமுக்கியமாக தெற்காசிய நாடுகளில் அதிகரித்திருக்கிறது என்பது பொதுவான நோக்கு. இதனால் தெற்காசிய நாடுகள் இந்திய -அமெரிக்க கூட்டுக்குள் அடங்காது கை நழுவிப் போவதை தடுப்பதிலே மிகவும் பிரயத்தனம் எடுக்கப்படுகிறது.

பதிலுக்கு சீனா பல பில்லியன் டொலர் திட்டங்களை ஆசிய நாடுகள் மத்தியிலே அறிமுகப்படுத்தி அந்த நாடுகளை தன் வசம் கொண்டுவர முயற்சிக்கிறது. இந்த அரசியல் இராஜதந்திர அரங்க சந்தியிலே, இராசதந்திர அழுத்தங்கள். வர்த்தக தலையீடுகள்,படைபல காட்சி நிகழ்வுகள் (கூட்டு படைப் பயிற்சிகள் கடற்படை விமானந் தாங்கிகளின் வருகை, பாதுகாப்பு அதிகாரிகளின் வருகை என்பனவற்றை குறிப்பிடலாம்.) என பல்வேறு வகையிலும் தெற்காசிய நாடுகள் பெரும் சோதனைகளைக் கண்டுவருகின்றன்.

ஆக, இந்து சமுத்திர பிராந்தியம் 21 ஆம் நூற்றான்டின் பூகோள இராஜ தந்திரத்தின் மத்திய அரங்காக காட்டப்படுகிறது. இந்து சமுத்திரத்திலே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடுகளாக பாகிஸ்தான, இலங்கை, மியான்மர் ஆகிய மூன்று நாடுகளும் அந்த மூன்று நாடுகளுக்குள் உள்ள தனிம கூறுகளும் இந்த இருதரப்பிற்கும் மத்தியில் மிக ஆழமான செல்வாக்கிற்கு உட்பட்ட நிலையில் உள்ளன.

இங்கே முதலில் பாகிஸ்தான் குறித்த ஆய்வை பார்ப்பதற்கு முன்பாக பாகிஸ்தான் -இந்திய உறவு மீதான மேற்கத்தேய பார்வை எவ்வாறு உள்ளது என்பது முக்கியமானதாகும். பாகிஸ்தானிடம் இருக்கும் அணுஆயுத பலம் குறித்த கவலை அமெரிக்க இராணுவ ஆய்வாளர்கள் மத்தியில் எப்பொழுதும் உள்ளது.

பாகிஸ்தானிடம் இருக்கும் அணு ஆயுத தொழில்நுட்பம் அமெரிக்க எதிர் போக்குடைய எந்த சக்திகளிடமும் போய் விடக்கூடாது என்பதிலே அமெரிக்க இராணுவ ஆய்வாளர்கள் மிகவும் கரிசனை கொண்டுள்ளனர். அவர்களுடைய கருத்துப்படி, உலகில் பொதுவாக நாடுகள் தமது தேவைகளுக்காக இராணுவத்தை வைத்திருக்கின்றன, ஆனால் பாகிஸ்தானில் மட்டும் இராணுவம் தனது தேவைக்காக நாட்டை வைத்திருக்கிறது என்பதாகும். ஏனெனில் பாகிஸ்தானிய அரசியலில் இராணுவத்தின் செல்வாக்கு மிகவும் ஆழமானது என்பது அமெரிக்க ஆய்வாளர்களின் பார்வையாக உள்ளது.

அதேவேளை, பிரபல அரசியல், பொருளியல் மேதையும் சமூக பொருளாதார விஞ்ஞான ஆய்வுக்காக நோபல் பரிசு பெற்றுக்கொண்டவருமான அமர்தியா சென் (Amartya Sen) , இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது பிரதமர் பதவி ஏற்பு வைபவத்திற்கு பாகிஸ்தானிய பிரதமர் நவாஸ் சரீப் பை விருந்தினர்கள் பட்டியலில் சேர்த்துக் கொண்டதை, நரேந்திர மோடியின் புத்திசாலித்தனம் என்று மெச்சியிருந்தார்.

அதுமட்டுமல்லாது, "இந்தியா பிரிக்கப்பட்ட போது காங்கிரஸ் கட்சியினர் இந்து- முஸ்லீம் மக்களிடையே பிரிவினை இருக்கக் கூடாது என்ற கூறி வந்தனர். (தொடரும்)

**லோகன் பரமசாமி-**

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை துரிதப்படுத்துங்கள்

## சுதந்திரதினத்தில் விஜயகலா கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளில் பொது மன்னிப்பு அளித்தோ, அல்லது புனர்வாழ்வு அளித்தோ உடனடியாக விடுவிக்கவேண்டும். இதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொள்ளவேண்டும்.

இன்றைய சுதந்திர தினத்தில் இதற்கான கோரிக்கையை நான் முன்வைக்கின்றேன் என்று சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

இன்றைய சுதந்திரதினத்திலாவது தமக்கு விடிவு கிடைக்கும் என்று அவர்கள் எதிர்பார்த்துள்ளனர். சுதந்திரதினத்திற்கு முன்னர் தம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டு மென்றும் இல்லையேல் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும், அவர்கள் அறிவித்திருந்தனர்.

இவ்வாறு தமது விடுதலையை எதிர்பார்த்து காத்திருக்கும் அரசியல் கைதிகளுக்கு ஒரு நல்ல பதிலை அரசாங்கம் வழங்கவேண்டும்.

அவர்களுக்கு பொதுமன்னிப்பளித்தோ அல்லது புனர்வாழ்வு அளித்தோ விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேணடும்.

தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலைகோரி இரண்டு தடவைகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்திருந்தனர். தாங்களும் அரசாங்கமும் அளித்த உறுதிமொழியை அடுத்தே அவர்கள் தமது போராட்டத்தை இடை நிறுத்தியிருந்தனர்.

அரசியல் கைதிகள் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு இடமளிக்காது அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். தன்னை கொல்வதற்கு வந்ததாக கூறப்பட்ட தமிழ் அரசியல் கைதியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது மன்னிப்பளித்து விடுவித்திருந்தார்.

அதேபோன்று பொது மன்னிப்பை வழங்கி தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே கைதிகளினதும் பெற்றோர்களினதும் வேண்டுதலாக உள்ளது.

எனவே இந்த விடயம் குறித்து ஜனாதிபதி தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

இனியும் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் காலதாமதம் காட்டப்படுவது அவர்களை வெறுப்படையச் செய்வதற்கே வழிவகுக்கும.

எனவே அவர்களின் விடுதலையை விரைவுபடுத்த இன்றைய சுதந்திர தினத்தில் நாம் அனைவரும் ஒன்றிணையவேண்டும்.

கைதிகளுக்கு பொதுமன்னிப்பளிப்பதற்கோ, அல்லது குறுகிய கால புனர்வாழ்வு அளித்து விடுவிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என விஜயகலா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (செ-12)

# உலகிலேயே இலங்கையில்தான் நீதித்துறைக்கு மிக அக்கறை!

## யாழ்.ஊடகங்களிடம் ஹெகலிய கருத்து

(யாழ்ப்பாணம்)

உலகிலேயே இலங்கையில் தான் நீதித்துறை தற்போதுமிகவும் அக்கறையுடனும் வேகத்துடனும் செயற்பட்டுவருவது போல்தெரிகிறது என முன்னாள் ஊடகத்துறை அமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமாகிய ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

காணாமல் போன லலித்து குகன் வழக்கில் யாழ் நீதவான் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல நேற்றையதினம் யாழ் நீதிமன்றில் ஆஜரானார்.

வழக்கு நிறைவடைந்த பின்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனுடைய கைது தொடர்பில் ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நிதி அமைச்சர் ரவிகருணாநாயக்கவினால் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டவரவு செலவுத்திட்டத்தில் விளையாட்டு தொலைக்காட்சிக்கானவரி ஒரு பில்லியன் என தெரிவிக்கப்பட்டிருந்தது ஆனால் இலங்கையில் ஒரு வருடத் தில் ஒரு விளையாட்டு அலை வரிசையினால் ரூபாய் எழுநூறு மில்லியனுக்கு மேல் வருமானம் பெற முடியாது.

இங்கு சி.எஸ்.என் தொலைக்காட்சிக்கு யோஷிதவினால் மின்னஞ்சல் ஒன்று அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த அலைவரிசையின் பணிப்பாளர் யாரென்று தெரிய வேண்டுமென்றால் அலைவரிசைகளை பதிவுசெய்யும் திணைக்களத்திடம் இருந்து தகவல்களை பெற்றிருக்க முடியும்.

எந்தவகையான கைதுகளும் தகுந்த சாட்சிகளுடனேயே இடம்பெறவேண்டும் மாறாகதெருவில் செல்பவர்களை கைது செய்துவிட்டு தம்பட்டம் அடிக்க கூடாது.

மேலும் குறித்தயோஷிதவின் கைது இடம்பெற்றசனிக்கிழமை இரவு 8.30 மணிக்கு நீதிபதி நீதிமன்றில் இருந்ததாக தெரிவித்த அவர் இலங்கையின் தான் இவ்வாறு நீதித்துறை மிகவும் வேகமாக செயற்பட்டு வருவதாக நக்கலாக தெரிவித்தார். (செ-9)

## தேசிய கொடியை ஏற்றாமல்...

இலங்கையின் 68-வது சுதந்திர தின நிகழ்வு ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் இன்று காலிமுகத்திடலில் கொண்டாடப்படுகிறது.

இது தொடர்பில் நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் ரணில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது 2-வது மகன்யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டுள்ள நிலையில் ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில், இலங்கையில் மக்கள் சுதந்திரம் கேள்விக்குறியாகியுள்ள நிலையில் நர்ட்டின் சுதந்திரதின நிகழ்வில் தேசிய கொடியை ஏற்ற தேவையில்லை என கருத்துரைத்திருந்தார்.

இது தொடர்பில் ஊடகங்கள் பிரதமரிடம் வினவியபோது கருத்துரைத்த அவர்,

சுதந்திரதினத்தின் போது தேசிய கொடியை ஏற்ற வேண்டாம் என்று தேசிய தலைவர் ஒருவர் இப்படித் தெரிவிப்பார் என தாம் ஒரு போதும் எதிர்பார்க்கவில்லை என குறிப்பிட்டதுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குப் பின் தேசிய கொடியை ஏற்ற வேண்டாம் என கூறிய முதலாவது நபர் குறித்த தேசிய தலைவரே என தெரிவித்தார்.

மேலும் நாட்டின் சுதந்திர தினத்தன்று தேசிய கொடியை ஏற்றாமல் விடுதலைப் புலிகளின் கொடியையா ஏற்றுவது?, நடைபெறவிருக்கும் சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொள்வதும், கலந்து கொள்ளாமையும் அவரவர் சுய விருப்பம் எனவும் அதனை தாம் ஒரு போதும் எதிர்க்கப்போவதில்லை எனவும் பிரதமர் இதன் போது குறிப்பிட்டார். (செ-12)

## மோ.சைக்...

நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 6.45 மணியளவில் தட்டாதெருச் சந்திக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல பாடசாலையொன்றின் இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கு சென்று விட்டு மூன்று மோட்டார் சைக்கிள்களில் திரும்பிக் கொண்டிருந்த உயர்தர மாணவர்கள் குழு, கே.கே.எஸ் வீதியின் நடுவேயுள்ள எல்லைக் கோட்டில் மிகவேகத்துடன் ஒருவரை ஒருவர் முந்தியவாறு வளைந்து வளைந்து வீதியின் பெரும் பகுதியை ஆக்கிரமித்து மோட்டார் சைக்கிள்களைச் செலுத்தியுள்ளனர்.

இவ்வேளை தட்டாதெருச் சந்திக்கு அருகாமையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த பிறிதொரு மோட்டார் சைக்கிளுடன் மாணவர்களது இரு மோட்டார் சைக்கிள்களும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதில் மாணவர்கள் மூவர் உட்பட மற்றைய நபர் ஒருவரும் படுகாயமடைந்துள்ளார்.

உடனடியாக படுகாயமடைந்த சண்முகராசா குகப்பிரியன் (வயது-32), மாணவர்களான உதயன் (வயது-19), தனுசன் (வயது-19), உமாப்பிரியன் (வயது-19) ஆகியோர் யாழ்.பேதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிகப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் முறைப்பாட்டினை பதிவு செய்த யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (செ-12, 30)

## சுதந்திரதின நிகழ்வில்...

டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் பங்கேற்கவுள்ளார்.

அவருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் பங்கேற்கவுள்ளார்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட், ரெலோ மற்றும் தமிழரசுக்கட்சியின் முக்கிய பாராளுமன்ற பிரதிநிதிகளும் சுதந்திர தினத்தில் கலந்து கொள்வது குறித்து இதுவரையில் எவ்விதமான உத்தியோக பூர்வமான முடிவுகளும் எடுக்கப்படவில்லை.

முன்னதாக ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ளாததன் காரணத்தால் இச்சுதந்திரதின நிகழ்வில் பங்கேற்பதை தவிர்க்குமாறு கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற பிரதிநிதிகளிடையே கருத்துக்கள் மேலெழுந்திருந்தன.

அத்தகைய சர்ச்சைகளுக்கு மத்தியில் கூட்டமைப்பின் தலைவர், ஊடகப் பேச்சாளர் ஆகிய இருவரும் சுதந்திர தினத்தில் பங்கேற்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக கூட்டமைப்பு தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

முன்னதாக கடந்த வருடம் ஜனவரி எட்டாம் திகதி ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் நடைபெற்றிருந்த சுதந்திரதின நிகழ்விலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதேவேளை இலங்கையின் 68ஆவது சுதந்திர தினத்தை புறக்கணித்து, வடக்கு கிழக்கு மாகாணங்கள் முழுவதும் ‘கரிநாளாக’ அனுஷ்டிக்குமாறு வடக்கு கிழக்கை சேர்ந்த எட்டு மாவட்டங்களை பிரதிநிதித்துவம் கைதுசெய்யப்பட்டு, கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிக்கண்டறியும் சங்கங்கள் தீர்மானித்துள்ளன. (செ-12)

## மோட்.சைக்கிள்...

சந்திக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த நபர் வீதியால் சென்று கொண்டிருந்த கார் ஒன்றை முந்திச்செல்ல முற்பட்டவேளை காருடன்மோதுண்டுவிபத்துக்குள்ளானார்.

அவ்வேளையில் விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள் வீதியால் பயணித்துக் கொண்டிருந்த ஹண்டர் வாகனத்தினுள் சிக்கி மேலும் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில்மோட்டார்சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம்தொடர்பில்யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-12)

## மரண வீட்டில்...

உறவினர்களுக்கும் வள்ளிபுனத்தைச் சேர்ந்த உறவினர்களுக்கும் இடையில்ஏற்பட்டவாய்த்தர்க்கம்முற்றியதில் அது கைகலப்பாக மாறியது.

இதன்போது ஏற்பட்ட மோதலில் முள்ளியவ்ளையைச் சேர்ந்த நான்கு பேர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாரின் அவசர உதவி இலக்கமான 119-க்கு அழைப்பை ஏற்படுத்திய போதும் பலனின்றிய நிலையில் புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் முறைப்பாட்டைப் பதிவதற்காக உறவினர்கள் சென்றுள்ளனர்.

எனினும் முறைப்பாட்டை ஏற்க மறுத்த பொலிஸார், தம்மிடம் தமிழ் தெரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இல்லை எனக் கூறியதுடன் முல்லைத்தீவு பொலிஸாரிடம் முறையிடுமாறும் கூறியுள்ளனர்.

அலைக்கழிந்த நிலையில், முல்லைத்தீவு பொலிஸாரிடம் முறைப்பாட்டை பதிவு செய்ய முற்பட்டபோதும் அங்கிருந்த பொலிஸார், முறைப்பாட்டை தாம் வைத்தியசாலை பொலிஸார் ஊடாக பெற்றுக்கொள்வதாக தெரிவித்த நிலையில் அவர்களை திருப்பி அனுப்பியுள்ளனர். (செ-310)

## விசாரணை...

னர், ஏற்கெனவே பசில் ராஜபக்ஷவை கைது செய்து விளக்கமறியலில் வைத்து விசாரணை நடத்தியிருந்தது.

திவிநெகும திணைக்களத்தில் இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பில் பசில் ராஜபக்ஷ மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## 40 தூதுவர்கள்...

இவர்கள் முதலில் யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் ஆகியோருடன் வட மாகாணத்தின் நிலைவரம் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

பின்னர் யாழ் பொது நூலகம், கோட்டைப்பகுதி மற்றும் யாழ் போதனாவைத்தியசாலை ஆகிய இடங்களுக்கு சென்று பார்வையிட்டு சென்றுள்ளனர்.

இவர்கள் நியூசிலாந்து, நெதர்லாந்து, செக்குடியரசு, மியான்மார்க், பிலிப்பைன்ஸ், கொரியா, போலந்து மற்றும் ஆபிரிக்க ஆசிய ஐரோப்பி நாடுகளை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-9)

## அமைச்சின்...


கடந்த 27 ஆம் திகதி கூடிய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதனையடுத்து திருமதி இமெல்டா சுகுமார் நேற்று முன்தினம் இராஜாங்க அமைச்சில் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

நிர்வாக சேவையில் மூத்த அதிகாரியான இமெல்டா சுகுமார் உலக உணவு திட்டத்தில் அதிகாரியாகவும், சமூக சேவைகள் அமைச்சில் செயலாளராகவும் கடமையாற்றியவர். இதனைவிட யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மாவட்ட அரசாங்க அதிபராகவும் இவர் பணியாற்றியிருந்தார்.

மூத்த நிர்வாக அதிகாரியான இமெல்டா சுகுமார் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சுக்கு செயலாளராக நியமிக்கப்பட்டிருப்பதன் மூலம் வடக்கு, கிழக்கு உட்பட நாடு தழுவிய ரீதியில் அமைச்சின் சேவைகளை விஸ்தரிப்பதற்கு வழி ஏற்பட்டுள்ளது.

இதேபோல் வடக்கு, கிழக்கு மக்களுக்கு அமைச்சின் மூலம் இதர சேவைகளை மேற்கொள்வதற்கான சூழலும் ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கருத்து தெரிவித்துள்ளார். (செ-12)

# மோ.சைக்கிள்...



ணம் பலாலி வீதியில் திருநெல்வேலி சந்திக்கும் தபால்பெட்டி சந்திக்கும் இடையில் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வசாவிளானில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற தனியார் பயணிகள் பேருந்து ஒன்று மிக வேகத்துடன் இ.போ.சபையின் பேருந்து ஒன்றுடன் போட்டி போட்டுக் கொண்டு பயணித்துள்ளது.

குறித்த பகுதியில் இ.போ. சபைக்கு சொந்தமான பேருந்தை கடந்து செல்ல முற்பட்ட வேளை வேகக்கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டியை மோதித்தள்ளியதுடன் அருகில் இருந்த வங்கிக் கட்டிட தொகுதிக்கருகில் நுழைந்ததால் வங்கியின் பெயர் பலகை, ஏ.ரி. எம் இயந்திரம் உள்ள அறை மற்றும் வங்கிக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள் என்பவை பாரிய சேதமடைந்துள்ளன.

இந்த விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த கொக்குவில் பகுதியை சேர்ந்த சென் ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் கல்வி கற்கும் மாணவனான பார்த்தீபன் சுபஸ்ரிகன் (வயது 5), பாஸ்கரன் கம்சா (வயது 34) மற்றும் முச்சக்கரவண்டி சாரதியான மகாதேவன் வசந்தரூபன் வயது (32) ஆகியோர் படுகாயமடைந்துயாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவருக்கு சிறுகாயங்கள் ஏற்பட்டுள்ளதுடன் அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் முற்று முழுதாக சேதமடைந்துள்ளது.

மேலும் தனியார் பேருந்தின் சாரதியான உரும்பிராயை சேர்ந்த ஜெயபாலசந்திரன் பிரகாஷ் (வயது 33) என்பவரை பொதுமக்கள் கொதித்தெழுந்து சரமாரியாக தாக்கியதுடன் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். சாரதியை கோப்பாய் பொலிஸார் கைது செய்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-4-9)

# யாழ்.நீதிமன்றில்...



மற்றும் லலித் ஆகியோர் தொடர்பிலான வழக்கில் சாட்சியமளிப்பதற்காகவே அவர் நேற்று நீதிமன்றத்துக்கு வந்திருந்தார்.

காணாமல் போயுள்ளதாகக் கூறப்பட்டிருந்தவர்கள் குகன் மற்றும் லலித் இருவரும் அரச பாதுகாப்பில் இருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளராக இருந்த போது ஹெகலிய ரம்புக்வெல்ல செய்தியாளர்களுடனான சந்திப்பு ஒன்றில் தெரிவித்திரு ந்தார். அது தொடர்பில் சாட்சியமளிக்க வருமாறு நீதிமன்றம் அறிவித்திருந்தது.

அந்த அழைப்பையேற்று அவர் உடனடியாக நீதிமன்றத்துக்கு வராததால், பிடியாணை பிறப்பிக்கப்படலாம் என்ற நிலையிலேயே அவர் நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜரானார்.

இருப்பினும் தமிழ் மொழியில் நடைபெறுகின்ற வழக்கு விசாரணை காரணமாக, உரிய மொழிபெயர்ப்பாளர் இல்லாத காரணத்தினால், வழக்கு வரும் மே மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அரசியல் செயற்பாட்டாளர்களான லலித் மற்றும் குகன் ஆகிய இருவரும் கடந்த 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது காணாமல் போயிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4-9)

# ஐக்கிய தேசிய...

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் ஜனநாயக கட்சி நேற்று ஐக்கிய தேசிய முன்னணியுடன், கூட்டணி உடன்பாட்டில் கையெழுத்திட்டுள்ளது.

அலரி மாளிகையில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற நிகழ்வில், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், ஜனநாயக கட்சி சார்பில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும இந்த கூட்டணி உடனபாட்டில் கையெழுத்திட்டனர்.

அதேவேளை, ஐ.தே.கவின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நியமிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளதாகவும் செய்திகள் வெளியான போதும், அதுபற்றி இன்னமும் முடிவு செய்யப்படவில்லை என்று இரண்டு கட்சிகளும் தெரிவித்துள்ளன.

எனினும், வரும் 8ஆம் திகதி நடக்கவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு தேசியப் பட்டியல் ஆசனத்தை வழங்குவது குறித்து முடிவெடுக்கப்படும் என்று கூறப்படுகிறது. (செ-12)

# மாற்றுக்காணி...

அத்தோடு சட்டத்திற்கு முரணாக செயற்பட்ட பௌத்த பிக்குவிற்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்த உதவி அரசாங்க அதிபர் தவறியிருப்பதாகவும் அவர் விசனம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் வன்னி மாவட்ட பொலிஸ்மா அதிபருக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள், வயல்கள், மீன்பிடிப்பகுதிகள் தொழிற்புலங்கள் என பல பகுதிகள் வடக்கில் அபகரிக்கப்பட்டுள்ள நிலையில் திருஞானசம்பந்தர் மணிவண்ணன் என்ற தனிநபரின் காணியை பௌத்த பிக்கு ஒருவர் விகாரை அமைக்க சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ளார்.

இதனை கண்டித்து அப்பகுதி மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். குறித்த காணி உரிமையாளருக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்காமல் மாற்றுக் காணியை வழங்கும் தவறான முன்னுதாரணத்தை எதிர்காலத்திற்கு வழங்க உதவி அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளதாக விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டினார்.

காணி உரிமையாளருக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்கும் விதமாக காணியை அவருக்கு மீளப் பெற்றுக் கொடுப்பதுடன் இந்த விடயத்தில் சட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-12)


af WORLD MOVIES - JAFFNA
Alliance Française de Jaffna
cordially invites you to the screening of
ANIMAL FARM
The movie - after George Orwell's story.
(1999, color 90 min.)
On
Thursday 04 February 2016 at 4:00 p.m.
at
Alliance Française de Jaffna
61, kachcheri-Nallur Road, Jaffna.
Phone : 021 222 8093
English Language. Free entrance.
(3485)



பிரெஞ்சு வகுப்புகள்
ஆரம்பம் 14.02.16 2PM

வீட்டுப் பணிப்பெண் தேவை

இலவச உணவு, இலவச தங்குமிடம். சம்பளம் நேரில் பேசித் தீர்க்கலாம்.

தொடர்புகளுக்கு:-
0773916047
(3473)

பெயர் மாற்றம்

கந்தப்பிள்ளை வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி எனும் முகவரியைச் சேர்ந்த பூதத்தம்பி தனபாலசிங்கம் ஆகிய நான் எனது பெயரை 2016-02-04ம் திகதி முதல் பூதத்தம்பி ஜெயபாலகுமார் எனும் பெயராக மாற்றியமைத்துக் கொள்கின்றேன். இனிவரும் காலங்களில் நான் பயன்படுத்தும் அனைத்து ஆவணங்களிலும் பூதத்தம்பி ஜெயபாலகுமார் என்றே பயன்படுத்துவேன் என்பதனை இலங்கைக் குடியரசு வாழ் மக்கள் அனைவருக்கும் தெரியப்படுத்த விரும்புகின்றேன்.

இவ்வண்ணம்: பூதத்தம்பி ஜெயபாலகுமார்

பெயர் மாற்றம்

கந்தப்பிள்ளை வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி எனும் முகவரியைச் சேர்ந்த தனபாலசிங்கம் சிவதாஸ் ஆகிய நான் எனது பெயரை 2016-02-04ம் திகதி முதல் ஜெயபாலகுமார் விஜய்ஷங்கர் எனும் பெயராக மாற்றியமைத்துக் கொள்கின்றேன். இனிவரும் காலங்களில் நான் பயன்படுத்தும் அனைத்து ஆவணங்களிலும் ஜெயபாலகுமார் விஜய்ஷங்கர் என்றே பயன்படுத்துவேன் என்பதனை இலங்கைக் குடியரசு வாழ் மக்கள் அனைவருக்கும் தெரியப்படுத்த விரும்புகின்றேன். (3465)

இவ்வண்ணம்: ஜெயபாலகுமார் விஜய்ஷங்கர்



UK, France, Germany, Swiss, Italy...
வாசல் திறக்கிறது ஐரோப்பா!
Study in Romania
(ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடு)



வங்கி பண வைப்பு, IELTS அவசியமில்லை
With Work Permit & PR
பிரத்தியேக தூதரக அங்கீகாரம் கொண்ட பிரதிநிதியூடான சேவை
SIKARAM Any Visa to Any Country
மேலதிக விபரங்களையும் ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றியும் அறிந்துகொள்ள
www.sikaram.lk
Tel: 0777 32 4004 , 021 222 00 11
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m

14-ம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர் உயர்திரு வாதவூர் தவச்செல்வம்
(சமாதான நீதவான்)
சிற்பனை, வேலணை
பிறப்பு 15-12-1943



ஆண்டுகள் பலசென்றாலும்
ஆறுதல் அடைந்திடா
நெஞ்சத்தோடு....
உங்கள் ஆத்மா
சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி
இறப்பு 07-02-2002
உங்கள் நினைவுடன் குடும்பத்தினர்
21/3A, இந்துமகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்
(கு)

மணிவிழா வாழ்த்து



"பொன்மனச் செம்மல்"
"மனிதநேய ஈகையாளன்"
"கல்விக் காருண்யன்"
என்னும்
கௌரவப் பட்டங்களைப் பெற்ற
உயர்திரு. E.S.P நாகரத்தினம்
அவர்களின்
மணிவிழா சிறக்கவும் இன்னும் பற்பல
கௌரவப் பட்டங்களைப் பெறவும்
எமது வாழ்த்துக்களை தெரிவித்துக்
கொள்கின்றோம்
(3490)
வாழ்த்துவோர்:
பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

காலங் கடந்தும் நீங்கா நினைவுடன் வாழும்
திருமதி உதயராணி கோபாலகிருஷ்ணன்



'கலாபூஷணம்' செல்லையா மெற்றாஸ்மயில்



பாசமலர்களின்
6-ம் ஆண்டு நினைவஞ்சலி
திதி : 04.02.2016
ஆண்டு ஐந்து
கடந்துவிட்ட போதிலும்
ஆறவில்லை எமது மனதின்
சோகங்கள் இவ்வுலக வாழ்வில்
எம்மை வழி நடத்தி நல்வாழ்வுக்கு
வழிகாட்டிய ஒளி விளக்குகளே!
நீங்கள் எம்மைப் பிரியவில்லை
எம்முடன் வாழ்ந்து வழிகாட்டுகிறீர்கள்
என்ற நம்பிக்கையுடன் நாம்
இன்றும் உயிர் வாழ்கின்றோம்
பாசமிகு சகோதரர்களின்
ஆத்ம சாந்திக்கு அனுதினமும்
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்
18, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர்
யாழ்ப்பாணம்
(3472) தொ.பே: 021 222 3586
குடும்பத்தினர்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.